5821-D



மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

5821

K. V. NATARAJAMANI,
VELLANGANI-ILLAM
O-PILLAI KADU
SANYASEE GUNDU
SALEM-636 003.

ஓம் பரப்பிரம்மணே நம:

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு


" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED.

| | | |
|---|---|---|
| கமலம்-4. | சென்னை: சுக்லஸ்ரீ சித்திரைமீ 1உ | இதழ்-37. |
| Vol. 4. | 1929-ம்ஸ்ரீ எப்ரல்மீ 13உ | No. 37. |



MADURA TAMIL

5821


## ஆநந்த தரிசனம்

" அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்க வந்த இன்பப் பெருக்கே, இறையே!" எங்களை இப்புது வருஷத்தில் ரக்ஷித்தருளுவது நின் பாரம். பக்தர்களின் அபாயமெனும் பாம்புகளுக்குக் கருடமணியும், மூன்று லோகங்களுக்கும் ரக்ஷாமணியும், கோபிகைகளுடைய கண்கள் எனும் சாதக பக்ஷிகட்கு மேகமணியும், சௌந்தர்யத்திற்கு முத்ராமணியும், நாரீ மணியாகும் ருக்மணி தேவியினுடைய மார்ப[illegible]ற்கு அலங்காரமணியும், தேவ சிகாமணியும் ஆன கோபால சூடாமணி நமக்கு இப்புது வருஷத்தில் ச்ரேயஸ்ஸைக் கொடுக்கக் கடவன். ஸர்வ ரோகங்களையும் பரிகரிக்க வல்லதான பகவத் ஸ்மரணை என்னும் ரஸாயனத்தை என் மனமே நீ பானம் செய். பகவானே! தர்மம் புதைக்கப்பட்ட தனத்தில் எனக்கு ஆசை கிடையாது. காமாநுபவத்தில் சிரத்தையில்லை. பூர்வ கர்மாநுஸாரமாய் எது எது உண்டாகத்தக்கதோ அதுவெல்லாம் வரக்கடவது. ஆயினும் ஜென்ம ஜென்மாந்தரங்களிலும் உன் பாத தாமரை யிணைகளில் பெற்றிருக்கிற பக்தியானது ஸ்திரமாயிருக்க வேண்டும். இது எனக்கு இஷ்டமானதாகவும் கோரத்தக்கதாகவும் இருக்கிறது. ஹே மந்த மனமே! ஏந்த வாதனைகளைப்பற்றியும் சோர்வு கொள்ளாதே. இவைகள் நம்மை எதும் செய்யமாட்டா. ஸர்வேச்வரனல்லவோ நம்மைக் காக்கும் தயாபரர். பக்தர்கட்கு சுலபனான பரமாத்மாவை யாலஸ்யம் செய்யாமல் தியானி. உலகத்தாரின் வியஸனங்களைப் போக்கவல்லவரான அவர்

---

" அமிர்த குணபோதினி "யை வாசிக்கும் சந்தாதாரர்கள் தங்கள் பந்து மித்திரர்களுக்கும் சில ஸஞ்சிகைகளைக் காட்டி[illegible]டிக்கச் செய்ய வேண்டுகிறோம். சந்[illegible]தாரர்கள் அதிகரிப்பது [illegible] விருத்தி செய்ய [illegible]வாயிருக்கும்.

பக்தர்களின் ஸஞ்சலங்களை நிவர்த்திக்கமாட்டாரா? பரமாத்மாவே! உம்மைச் சிரசால் சேவித்து யான் யாசிப்பது இவ்வளவே; அதாவது, உமது அனுக்கிரஹத்தால் உமது பாத பத்மங்களை என்றும் மறவா திருக்கக்கடவேனாக.

* * *

"என் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்றவாறு, பகவான் நம்முடைய அந்தக்கரணத்திலிருந்து தமக்குரிய பூஜைகள் எல்லாவற்றையும் நம்மைக்கொண்டு செய்வித்துக் கொள்ளுகிறார். ஒரு வீட்டை நம்முடைய சுகத்திற்காகவும் வாஸத்துக்காகவும் கொற்றனைக் கொண்டு நாம் கட்டுவித்துக் கொள்வது போல் ஈசுவரன் ஸகல கர்மாக்களையும் நம்மைக் கொண்டு செய்வித்துக் கொள்ளுகிறார். ஆதலின், எல்லா கர்மங்களும் பகவத் பிரீதியாகச் செய்யப்படுகின்றனவென்ற உண்மையை நாம் மனதில் உறுதியாகக் கொள்ளவேண்டும். வீட்டைக் கட்டின கொற்றன் அவ்வீட்டைத் தன்னுடையதென்று ஆக்கிரமித்தால் எத்தனை கஷ்டத்தை யடைவானோ அதைப்போல ஸகல கர்மாக்களையும் நமது சொந்தப் பிரயோஜனமாகச் செய்து கொள்வதானது ஜனன மரண துக்கங்களைக் கொடுத்துக் கொண்டேயிருக்க ஏதுவாகும். கொற்றன் தான் கட்டிய வீடு எஜமானனுக் கென்றறிந்து, அவனிடம் அவ்வீட்டை ஒப்புவித்து ஸன்மானம் பெறுவது போல், மனுஷ்யர்களாகிய நாம் எவ்வித பலனையும் இச்சியாமல், செய்யும் கர்மாக்களையெல்லாம் பகவத் பிரீதியாகச் செய்து, ஸன்மானமாகிய அவருடைய கிருபையை யடைய வேண்டும்.

* * *

"பழக்கத்தால் பலனுண்டாகும்" துள்ளித்துள்ளியோடும் கன்றுக்குட்டியைப் பிடித்து வந்து கொட்டத்திற் கட்டிப் பழக்கினால் அது சில தினங்களுக்குள் தான் இருக்கவேண்டிய இடத்திற்குப் பிறருடைய பிரயத்தினமின்றி ஸ்வயமாகவே வந்து சேரும். அதைப்போல் கண்டபடி ஓடிப்போகும் மனதை அடிக்கடி இழுத்துக் கொணர்ந்து பகவானுடைய பாதத்தில் இருத்தினால் பக்தியோகம் கைகூடும். இவ்வித நற்பழக்கத்தைச் செய்வது நமது முக்கிய கடமையன்றோ?

* * *

"உன்னுடையது—என்னுடையது" என்னும் இரண்டு வார்த்தைகளும் உலகத்தாரைச் செய்யும் உபத்திரவம் சொற்பமல்ல. என்னுடைய தாயார் இருமினால் எனக்குக் கோபம் வராது. உன்னுடைய மாதா இருமினால் உடனே கோபம் ஜனிக்கும். இதென்ன கஷ்டம் என்பேன். என்னுடைய குழந்தை அஸங்கியம் செய்தால் அருவருப்பில்லை. பிறருடைய குழந்தை ஜல விஸர்ஜனம் செய்தாலும் கோபம் வந்து விடுகிறது. என் மாடு, என் பண்டம், என் மனிதன், என் மனைவி, என் மக்கள் ஆகிய இப்பொருள்களிடம் எனக்கு ஆசை இருப்பானேன்? உன் பண்டங்களில் எனக்கு சிரத்தை யற்றிருப்பானேன்? இதற்குக் காரணம் அபிமானமேயாம். அபிமானம் பெரிதோ? கடமை பெரிதோ?—என்ற கேள்விக்கு அபிமானமே பெரிதென்போம். ஒரு வேலையாள் எஜமானனுடைய பாதுகாப்புக்காக ஏற்பட்டிருக்கிறான். அவ்

---

இ[illegible]" எல்லாத் தாரத்தாருக்கு[illegible] வருஷ முழுவதும் [illegible]களைக் கொண்ட பத்திர[illegible]கும்.

வெஜமானனை யாரேனும் தூஷித்தால் அவனுக்கு சீக்கிரத்தில் கோபமுண்டா காது. தன் மனைவியையேனும் தாயையேனும் தூஷித்தால் தக்ஷணமே தடி யெடுத்தடிக்கிறான். இதனால் கடமையை விட பிரீதியே பெரிதென்கிறோம். பிரீதியுண்டானால் ஸகல கர்மங்களும் தடையின்றி நிறைவேறும். பிரீதி குறைந்தால் ஒவ்வொரு கர்மத்துக்கும் கோபமுண்டாகிறது. ஆகவே, விவேகி கள் பிரீதியையே பெரிதாய் நினைக்கின்றனர். இந்த காரணத்தாலே தான் கர்மயோகத்தை விட பகவானிடத்தில் பிரீதி செலுத்தும் பக்தியோகம் சிறந்த தாயிற்று. சிவலிங்கத்தை யுதைத்த தந்தையின் காலை ஒரு நாயனார் வெட்டி யெறிந்தார். காரணம், தான் பூஜை செய்யும் சிவலிங்கத்தின் பேரில் வைத்த அபிமானமேயாம். இந்த நாயனாருக்குத் தந்தையிடம் விசுவாஸமில்லையோ ?— உண்டு. ஆயினும், அவர் செய்தது அக்கிரமமென்று மனதிற்பட்டது. அத் துடன் தந்தையானவன் புத்திரனுக்குத் தன்னிடமுள்ள விசுவாஸத்தை விட சிவலிங்கத்தின் மீதுள்ள பிரியம் அதிகமென்று தெரிந்து கொள்ளாமற் போனான். எல்லாம் நம்முடையது என்ற அபிமானம் கொண்டு பிரிவினைச் சிந்தையின்றி ஸர்வ ஜனங்களிடமும் விசுவாஸம் பாராட்டுகிறவனே வேதாந்தி. அப்படிப்பட்டவனுக்குத் துக்கமில்லை.

***

"ஜென்ம வாஸனை கர்ம வாஸனை" ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு விஷயத்தில் சிரத்தை யுண்டாகிறது. இதற்குக் காரணம் பூர்வ கர்ம ஸம்ஸ் காரமே. அதாவது ஜென்மாந்தரத்தில் செய்த புண்ய பாப சேஷங்களுக்குத் தக்கபடி சிரத்தை ஜனிக்கிறது. புண்ய கர்மாக்களையே செய்தவன் ஸாத்வீக சிரத்தையைக் கொள்ளுகிறான். எல்லோருக்கும் நல்லவனாக நடக்கிறான். பாப கர்மத்தைச் செய்தவன் தாமஸ சிரத்தையை யடைகிறான். அதாவது, எல்லோராலும் துன்மார்க்கனென்று மதிக்கப்படுகிறான். அவனுடைய சித்தம் ஸதா பிறருக்குக் கெடுதல் செய்வதிலேயே பிரவர்த்திக்கும். போன ஜன்மத் தில் புண்யம் பாபம் ஆகிய இரண்டையும் செய்தவன் இராஜஸ சிரத்தையை யடைகிறான். அதாவது சில வேளைகளில் நல்லவனாயும், சில வேளைகளில் துஷ்டனாயும் நடக்கிறான். ஆயினும், வித்யாவந்தனாய் விவேகியாய் விளங்கு வோன் தன் மனம் அதர்மத்தை நாடாமலும், அக்கிரம வழியிற் செல்லாமலும் முன் ஜாக்கிரதையோடிருப்பது நன்மை. மனோ நிலைமையே ஸகல காரியங் களையும் ஒழுங்குபடுத்தக்கூடியதாதலின், அந்நிலைமை நல்லதாயிருக்கிறதா வென்று கவனிப்ப தவசியம்.

***

"தேக சுத்தமின்றி மனோ சுத்தமில்லை" சிலர் ஸ்நாநம் செய்யாமல் அசுசியாயிருந்து பகவன்னாமத்தை யுச்சரிக்கின்றனர். ஏன் இப்படிச் செய் கிறீர்களெனில், பகவன்னாம ஸ்மரணையை எப்போதும் செய்யலாம்; ஸ்நாநம் பண்ண வேண்டுமென்னும் அவசியமில்லை யென்று நாங்கள் பாகவதர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோமென்கிறார்கள். மகாத்மாக்கள் தேகாபிமானத் தைத் தவிர்த்தவர்களாதலின் அவர்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இரா முழு[illegible]ம் காமவிகாரம் கொண்டு புரண்டு காலையில் ஸ்நாநம் செய்யாமல்

---

"அவரைப்போல் நல்ல மனிதன [illegible] கான் [illegible] சொல்லு வது அவர்பேரிலுள்ள அபிமானத்தால் [illegible] டுகிறது.

அசுத்தத்துடன் பகவானுடைய நாமத்தைச் சொல்வது பாவமேயாகும். கிருகஸ்தர்களுக்கு தேக சுத்தமில்லாமல் மனோ சுத்தமெப்படி யுண்டாகும்? முன்னோர்கள் ஏற்படுத்திய ஸம்பிரதாயங்களின்படி நடவாதவர்கள் பிரஷ்டர்களேயாவர். சும்மா வாயால் பக்தி பக்தியென்று சொல்லிக்கொண்டு நாலு பேர் கேட்கும்படி ராம ராம என்று ஊளியிட்டு கர்ம லோபியாய்க் கெட்ட ஹிருதயத்துடன் இருப்பவர்களுக்கு ஒருபோதும் நல்ல லோகம் கிடைக்காது. வாயால் ஆயிரம் தேவாரங்களைச் சொன்னாலும் மனதை ஈசுவரனிடம் வைக்காத வரை துளிப் பிரயோஜனமும் உண்டாகாது. எந்த மதத்தை யனுஸரிப்பவனும் மனதைத் தன் வசப்படுத்தி நல்ல மார்க்கத்தில் செலுத்தினாலன்றி சுகமடையான்.

***

"துவேஷம் பாபம்" ஒரு வேளை ஒரு மூர்த்தியிடமேனும், ஒரு மதத்தினிடமேனும் உள்ள அதிக பிரீதியால் அதையே உயர்வாக நினைப்பது ஸகஜமாயினும், மற்ற மூர்த்திகளையும் பிற மதங்களையும் நிந்தித்திகழ்வது குற்றமேயாம். ஸாதுக்களுடைய ஸகவாஸத்தைப் பெற்ற பெரியோர்கள் எந்த தெய்வத்தையும் நிந்திக்கமாட்டார்கள். எதிலும் உண்மையைக் காண்பர். எவன் புறச் சமயங்களையும் இதர மூர்த்திகளையும் இகழ்ந்து பேசுகிறானோ அவன் உண்மையான அறிவாளியன்று. நிந்தைகளிலேயே அவன் சித்தம் பிரவர்த்திக்குமேயன்றி பகவத் பக்தி செய்ய நேரமே இராது. வேதம், ஆசாரியன், தெய்வம், மதம், ஸாதுக்கள் ஆகிய இவ்வைந்தையும் நிந்திப்பவர்கள் சிறந்த படிப்பாளிகளாயினும் ஸகவாஸ யோக்யர்களல்லர். ஆதலின் மோக்ஷத்தை விரும்பும் ஒவ்வொருவரும் ஸாதுக்களைச் சேவை செய்தும், அவர்களுடைய வாக்கியங்களைக் கேட்டும், படித்தும், சித்தத்தை நல்வழியில் நடத்தி ஸந்துஷ்டி யடைந்து பேத புத்தியை யொழித்து ஸதா ஈசுவரனைத் தியானிக்கக் கடவர்.

***

"நல்லார் குணங்க ளுரைத்தலும் நன்றே" அநேக வருஷங்களுக்கு முன்பு ஹரிதாஸர் என்ற ஓர் பெரியவரிருந்தார், இவர் சிறுபிராய முதல் உலக ஆசைகளில் விருப்பமின்றி பக்தியொன்றையே கடைபிடித்து எப்போதும் ராமஸ்மரணையையே செய்து வந்தார். இவ்வாறு செய்ததால் பகவானிடம் அன்பு உண்டாகி எல்லாவற்றையும் பகவத் ஸ்வரூபமாக எண்ணிப் பிரீதி பாராட்டினார். இவருக்கு விரோதிகள் யாருமில்லை. ஒரு நிமிஷ நேரங்கூட வியர்த்தமாக்காமல் எப்போதும் ராம ராமவென்று சொல்லிக் கொண்டிருந்ததால், அதுவே ஞாபகமாய் மற்ற வியவகாரங்களை யெல்லாம் மறந்தார். ஒரு நாள் ஓர் சிற்றரசன் இவரது பக்தியைப் பரீக்ஷிக்க வேண்டி இவர் தூங்கும் போது வந்து சேர்ந்தான். அப்போதும் இவர் கண்ணை மூடிக்கொண்டு "ராம ராம" என்றார். அரசன் இராமுற்றிலும் விழித்துக் கவனித்தவாறு இருந்தான். அப்போதும் இவரிடமிருந்து ராமசப்தம் புறப்பட்டுக் கொண்டிருந்தது. தக்ஷணமே இவர் பரம பாகவதர், உண்மையான பக்தரென்றெண்ணி அவருடைய திருவடிக் கமலங்களில் நமஸ்கரித்து அன்றுமுதல் பகவான் விஷயமாக அவர் ஆக்ஞாபித்த திருப்பணிகளை யெல்லாம் நடத்திப் பெருமை

---

மூர்க்கனை குமஈ.ாரத்தம்பிக்[illegible]ம், குடியைத் தொடாத ஸாதுவான அண்ண[illegible]ாற்[illegible]ு.

எய்தினன். மனுஷ்யப் பிரயத்தனத்தால் தண்ணீர்க் குழாய்களில் ஓடிவரும் ஜலத்தைவிட, ஸ்வயமாய் பர்வத சிகரங்களினின்றும் ஊற்றெடுத்துப் பெருகி வரும் நீர் ஸர்வோத்தமம். அவ்விதமே தாமாக் கஷ்டப்பட்டுச் சிந்தித்துக் கவியையேனும், ஒரு விஷயத்தையேனும் வரைவதை விட, தன்னை யறியா மலே கற்பனைகள் தானாக உதித்து ஓடிவர அதனை ஒழுங்குபடுத்தி எழுதிச் செல்லுதல் சிரேஷ்டதரமானதாகும். இது போலவே, தனது பிரயத்தின மின்றியே ஹரிதாஸரைப் போல் தன்னை மறந்த நிலையிலும் பகவந்நாம ஸ்மரணையை மறவாது உச்சரிக்கும் பக்குவ நிலையே பரமோத்கிருஷ்டமானது.

***

"**அவன் அருளின்றி ஓர் அணுவும் அசையா.**" எத்தனை பிரயத்நம் செய்தாலும் முத்தனது அருளின்றிக் காரியம் முடியாது. பகவத் அனுக்கிர கம் அதி அவசியம். ஈசுவர கிருபையில்லாமல் எந்தக் கருமமும் இனிதாய் நிறை வேறாது. தொடங்குவது நாமாயினும், அது நன்கு முடிவு பெறுவது தெய்வ ஸங்கல்பத்தைப் பொருத்துள்ளது. ஆதலின் எப்போதும் எந்த முயற்சிக்கு முன்பும் பகவானைத் தியானிப்பது பெரியோர்களின் இயல்பு.

***

"**சிந்தையிலுள்ள துன்பங்களை நீக்கும் செல்வமே**" யென்றும், நல்ல வளப்பமுள்ளவனே யென்றும், குன்றாத தரும விளக்கே யென்றும், ஸகலத் துக்கும் நாயகமே யென்றும், யாவருக்கும் தாய்க்குச் சமானமானவனே யென் றும், எனக்குச் சொந்தத்தாயே யென்றும், கண்ணுக்குச் சமானமானவனே யென்றும், இனிமையாகிய உயிரே யென்றும், ஸகலவித நன்மைகளையும் கொடுத்து ரக்ஷிக்கும் கற்பகமே யென்றும், தன்னிலே தானாயிருப்பவனே யென்றும், அற்புதமானவனே யென்றும், ஒளி மழுங்காத இரத்தினமே யென் றும், கதிக்கு நிலையாயுள்ளவனே யென்றும், தேவாமிர்தமே யென்றும், அழகிய தாயே யென்றும், கடவுளை வாழ்த்தாவிடில் நெஞ்சமே! நமக்கு வேறு யார் உதவியிருக்கிறது; சொல்வாய்? இக்கருத்தைப் பின்வரும் பாடலிற் காண்க:—

சிந்தா குலந்தீர்க்குஞ் செல்வமே! நல்வளமே!
நந்தாவற விளக்கே! நாயகமே! தாயகமே!
யெந்தாயே! கண்ணே! யினியவுயிரே! நலங்க
டந்தாளுங் கற்பகமே! தற்பரமே! யற்புதமே!
கந்தாமணியே! கதிநிலையே! யாரமுதே!
யந்தாயே யென்றேத்தா யாருதவி சொன்மனமே.

***

"**கடவுளின் அடியைக் கனவிலும் மறவேல்**" பஞ்சேந்திரியங்களும் தானேயாகி, அவைகள் அனுபவிக்கும் இன்பமுமாகி, அப்பஞ்சேந்திரியங் களாலுண்டாகும் கொடிய வியாதிக்குப் பெரிய மருந்துமாகும் மேன்மையுடை யவனும், வேத நூலைத் தந்தவனும், நம்பியவர்களுக்கு அடைக்கலமானவனு மாகிய கடவுளை மாந்தர்காள்! ஸதா காலமும் நாடக்கடவீர்களாக.

ஐம்புலனுந்தானு யவைநுகரு மின்பமுமாய்
வெம்புலநோய் மாமருந்தா மேலோனை நூலோனை
நம்புமவர்க் கடைக்கலத்தை நாம[illegible]

# நமது நான்காவது வருடம்.

ஏவன் அருளாலே புவனம் இதுவெல்லாம் நம் கண்முன் கண்டோம்? எவன் அருளாலே மானிடமாம் இச்சென்மம் கொண்டோம்? '**அவன் அருளாலே அவன் தாள் வணங்கி**' நமது "**அமிர்த குணபோதினி**"யின் **நான்காவது பருவத்தை** இன்று ஆரம்பம் செய்கின்றோம். இப்பத்திரிகையின் சந்தாநேயர்களுக்கும், இதைப் போஷித்துத் தத்தம் இடங்களில் பரவச் செய்யும் கண்ணிய சிரேஷ்டர்களுக்கும் நமது நன்றியறிந்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சென்ற மூன்று வருடங்களாக "அமிர்த **குணபோதினி**" தமிழ் நாடெங்கணும் சென்றுலாவிப் பிரஸித்தமான கீர்த்தியைப் பெற்றிருக்கின்றது. அநுபவச் சார்பான முறையில் வெளியிடப்படும் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றுதான்.

இப்பொழுது புதிதாய்த் தொடங்குகின்ற இந்த நான்காவது கமலம் சென்ற வருஷத்திய கமலமலர்களைப் போலவே யாவரும் விரும்பத்தக்கதாயிருக்குமென்றும், அதின் விஷயங்களெல்லாம் முன்னைவிட அதிகமான உற்சாகத்துடன் அனைவராலும் அங்கீகரிக்கத் தக்கனவா யிருக்குமென்றும் நம்பியிருக்கிறோம். விசேஷமாய் அநுபவச் சார்பான விஷயங்களும், விநோத பாஷிதங்களும், எளியவும் சுலபமுமான முறையில் வேதாந்த ஞான போதனைகளும், விகடப்பகுதிகளும் தொடர்ச்சியாய்ப் பிரசுரிக்கப்படும். பலவேறு கிரந்தங்களிலிருந்தும் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களும், தத்துவங்களும், சரித்திர பாகங்களும் வெளியிடப்படும். மற்ற விஷயங்களும் கூடியவரையில் படிப்போர்களுக்கு மனக்களிப்பை உண்டாக்கத் தக்கனவாயும், நீதிநெறிகளையும், உலக இயல்புகளையும் கற்பிக்கின்றனவாயு மிருக்கும். எந்த விஷயமும் தெளிவாயும் விளக்கமாயும் எழுதிவரப்படும். மாதப் பத்திரிகையில் வெளிவரும் விஷயங்கள் வர்த்தமானச் சார்பு பற்றியதா யிருக்கவொண்ணாது. அவ்விதமிருப்பின் ஒரு முறைக்குப் பிறகு மீண்டும் வாசிக்க விருப்பமிராது. மேலும் அவை பழய செய்திகளாகவும் மாறிவிடும். எனவே, எக்காலத்திற்கும் பயன்படத்தக்க விஷயங்களையே தேர்ந்தெடுத்து மாத ஸஞ்சிகைகளுக்கு வரைதல் வேண்டும். அவையும் ஒரு புதுச்சுவைகொண்டு பரிமளிக்க வேண்டும். இக்கருத்துகளையொட்டியே இதுகாறும் "**அமிர்த குணபோதினி**" நடத்தப்பட்டு வந்துள்ளது. இனியும் அவ்விதமே உயர்நலஞ்சார்ந்து உவகை யூட்டுமென்பது திண்ணம். மேன்மையுள்ளதான சித்திரப்படங்களும் அடிக்கடி சேர்க்கப்படும்.

தமிழ்ச் செல்வர்களின் ஹிருதயாநந்தத்தை விருத்தி செய்யவும், இந்தப் பத்திரிகையைப் பிரசுரம் செய்வதற்கு வேண்டிய அபாரமான செலவுகளை மேற்போட்டுக்கொண்ட

---

நாம் அன்பு கெட்டு நடப்பதும், அன்பு இருப்பதுபோல் வேஷம் போடுவதும், கடிதத்தில் மட்டும் வெகு வணக்கமும் தித்திப்புமாக எழுதிப் பசப்புவதும் பிறருக்குத் தெரியாமலா இருக்கிறது? அவர்கள் அதை அறியவில்லை என்று [illegible] நமது மூடத்தனமே.

இதன் அதிபருடைய உத்தமமான கருத்தை நிறைவேற்றவும், இன்னும் இச்சஞ்சிகை அதிக வியாபகமாய் விளங்கவும், மேன்மேலும் ஊக்கத்துடன் நம்மை உழைக்கும்படியும் தூண்டத்தக்கது——இதன் கையொப்பங்கள் அதிகரிப்பதைவிட வேறொன்றுண்டோ? ஆதலின் நமது அன்பர்கள் இந்த ஸஞ்சிகையில் சிலாக்கியங்களை மற்றவர்களுக்கும் வாசித்துக் காண்பித்து அவர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துப் பத்திரிகாபிவிருத்தியை நாடுமாறு வேண்டுகிறோம். சென்ற வருஷங்களைவிட இவ்வருஷத்தில் "அமிர்த குணபோதினி"க்குக் கையொப்பங்கள் வெகுவாய் அதிகரிக்குமென்று நம்பி எதிர்பார்க்கிறோம். ஸர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம்மெல்லோரையும் ரக்ஷிப்பாராக. சுபம்.

பத்திராசிரியர்.

## ஜான்ஸன் பண்டிதருடைய திட்டுகள்.

"கடிதம் எழுதாதிருந்தால் அது மறந்திருப்பதற்கு அறிகுறியா? இன்னும் எழுதவில்லையே என்று அப்போதுதான் அதிகம் வாதிக்கும். அன்பின் முதிர்ச்சியால் விரோதப்படின்—அப்போதுள்ள கடிதப்போக்கு வரத்தின் சோக பாகத்தையும் பார்க்க எனக்கு ஆவல் தான். ஆதலின் எழுதும் கடிதங்களில் என்னை நன்ருகத் திட்டி அம்மனைய மொழிகளால் அடுக்குங்கள். தங்கள் சரித்திரத்தைத் தங்கள் கடிதங்களுடன் நான் வெளியிடும்போது அதையும் வெளிப்படுத்துகிறேன். ஜான்ஸன் பெரிய ஆங்கில வித்வான். அவருடைய ஆத்ம நண்பன் பாஸ்வல் என்பவர். பாஸ்வல் ஸ்காட்லண்ட் தேசத்தவர். ஜான்ஸன் இங்கிலாந்திலுள்ளவர். அவருக்கு ஸ்காட்லண்ட் என்றுலே பிடிக்காது; வெகு பகை. அப்பேர்ப்பட்டவருக்கு ஸ்காட்லண்ட் தேசத்தவரே சிநேகம். இருந்தாலும் ஜான்ஸனுக்கும் பாஸ்வலுக்கும் அடிக்கடிக்குப் பகைமை உண்டாகும். பேசிக்கொண்டிருக்கும்போதே அவரையும் ஸ்காட்லண்டுக்காரரையும் திட்டுவார். பாஸ்வல் கோபங்கொள்ளாமல் தன்னைத் திட்டியதெல்லாவற்றையும் எழுதிவைத்திருந்து பின்னுல் அவருடைய சரித்திரம் எழுதும்போது திட்டியவை யனைத்தையும் அப்படியே வெளிப்படுத்தியுள்ளார். அவைகளைப் படித்தால் வெகு சிரிப்பு உண்டாகும். அதுபோலவே தாங்கள் என்னைத் திட்டியோ—கோபித்தோ எழுதினுல் அவைகளையும் வெளிப்படுத்த சித்தமே. ஒவ்வொரு திட்டும் பத்திரிகைக்கு விஷயம் எழுத எனக்கு ஒரு நல்ல குறிப்பாகிவிடக்கூடும்."

P. G. குலசேகரன்.

அறிந்தவன் துணியலாம்.'


# அமிர்தகுணபோதினி

சுக்கில௵ சித்திரை௴ 1௳


## புதிய தமிழனின் தாகம்.

—:(✿):—

ஆனந்தமாய்ப் புது வருஷத்தினில் வாழ்வோம். ஆண்டவனின் அருளால் அன்பைப் பெறுவோம். புதுவருஷத்தில் நாம் அனைவரும் 'புதிய தமிழ'னாகக் கடவோம். புதிய தமிழன் பழந் தமிழனைக் கௌரவிப்பவனாவான். பழஞ்செயல்களின் விவேகத்தை மதிப்பவனாவான். புராதன மாண்பைப் போற்றுபவனாவான். பழமையே சற்றுச் சீர்திருந்திப் புதுமையைக்கொண்டு புதுமை தரவேண்டுமென்பான். பழமையை அப்படியேவைத்து அதனிற் புதுக்கருத்துகள் மட்டும் புகவிடுத்துத் திருத்தி உயர்வாக்குவான். புதுக்கோயிலினும் பழங்கோயில் பெருமையுடையதென்பான். அதனைப் பழுது பார்த்துப் புதுப்பிப்பதே அவனது சீர்திருத்த வேலையாயிருக்கும். பழமையையே தழுவி அதன் வளர்ச்சிக்குப் புதுமையை ஏற்கவேண்டுமென்பான். பழஞ்செயல்களிலுள்ள சிக்கனத்தையும் சீர்மையையும் அவற்றின் அரிய நுட்பங்களையும் தத்துவங்களையும் நெடுக எண்ணிப் பரவசம் பெறுவான். பழம் பெருந்தமிழ் நூல்களே அவனுள்ளத்திற்குத் தித்திப்பு தரும். அந்த மதுரத்திற்குப் பிறகே புது நூல்களில் அவன் பார்வை புகும்.

ஏன் இப்படி எனது தமிழ் குன்றிக்கிடக்கின்றதென்று புதிய தமிழன் ஓயாது எண்ணுவான். எண்ணி யெண்ணிக் கண்ணீரும் மிகுவான். ஒரு தேசத்தாரை இகழ்ச்சியாகவோ புகழ்ச்சியாகவோ சொல்ல ஏதுவாயுள்ளது அந்தத் தேசத்தார் பேசும் பாஷைதான்; அதாவது, எதுவரையில், ஒரு தேசத்தார் தமது சொந்தப் பாஷையாக ஒன்றைக் கொண்டிருக்கிறார்களோ அதுவரையில்தான் அவர்களுக்கு நீடித்த புகழ் உண்டு; அவ்விதமிருக்க நம்மவர் தமிழை அலக்ஷியம் செய்ததேன் என்று சோர்வான். ஆங்கிலேயர் தமது பாஷையை எவ்வளவு அருமையாய்ப் போற்றுகிறார்களென்று யோ

---

எவ்வளவு கவிராயர்களும் கொஞ்சம் யோசித்துத்தான் கவி எழுத வேண்டி யிருக்கிறது. யோசியாமல் தானே நெஞ்சிலிருந்து நினையாத போது [illegible] ன் முதல்தரமானது. அதற்கு இணையில்லை.

சிப்பான், அதிலே அந்த பாஷைக்குரிய சொந்த வார்த்தைகளைப் பொறுக்கினால் 200-க்குமேல் எப்போதும் கிடையாதே ; பல பாஷைகளிலும் பொறுக்கி எடுத்துச் சேர்த்த பதங்களே அதனில் நிறைந்துள்ளன. தமிழிலிருந்து எத்தனை வார்த்தைகளை அதிற் சேர்த்திருக்கிறார்கள் தெரியுமா என்று கூர்ந்து கவனிப்பான் "வேண்டு" என்னும் தமிழ்ப்பதம் ஆங்கிலத்தில் வான்ட் (Want) என்றாயிற்று. "கொல்லு" என்பது "கில்" (Kill) ஆயிற்று. "தாக்கு" என்பது "அத்தாக்கு" (Attack) என்றாயிற்று. மண் = மட் (Mud), களி= கிளே (Clay), பொறு = பேர் (Bear), திருகு = திரிக் (Trick), நேர்த்தி = நீத் (Neat), சுடு = சீத (Seathe), ராங்கி = ராங்க் (Rank), கடவுள் = காட்(God), கிளம்பு = கிளைம்பு(Glimb), திரி = திரி(Three) அவதாரம் = அவதார் (Avatar) முதலிய பல வார்த்தைகளைக் கொஞ்சம் நோண்டிப் பார்த்தால் தெரியவரும். இன்னும் ஆங்கிலத்தில் எழுத்தொன்று உச்சரிப்பொன்று. (Rendezvouz = Randavoo.) ஒரே எழுத்துக்குப் பல உச்சரிப்பு. (Ch = ச, ஷ, க.) ஒரு உச்சரிப்பை உணர்த்தப் பலவித எழுத்துச் சேர்க்கை (O = Oa = Ow = Oe = Owe, 4). வார்த்தைகளில் உச்சரியாத எழுத்து (Chelk). இவ்வளவு குறைகளிருந்தும் எந்த ஆங்கிலேயராவது தமது பாஷையை இகழ்ந்து பேசுவாரா? பிறராவது இகழ்ச்சியாய்ச் சொல்ல சம்மதிப்பாரா? அது மறைந்துபோக இடங் கொடுப்பாரா? மாட்டாரல்லவா? —என்று தன்னுள்ளேயே புதிய தமிழன் சொல்லிக் கொள்வான்.

ஆங்கிலேயர்களின் பாஷாபிமானம் இவ்வாறு உயர்ந்து நிற்கையில், எல்லாவளமும் மலிந்து யாதொரு குறைவுமின்றி இனிமையே வடிவாகவுடைய நமது நெடுநாளாயுள்ள நாட்டுப் பாஷையான தமிழ் கெட்டுச் சீர்குலைய நாம் இடம் தரலாமா? அதை முன்னுக்குக் கொண்டு வரும் வழியைத் தேடவேண்டாமா ? நாமெல்லோரும் உயிரோடிருந்தும் நமது செந்தமிழ்மொழி தியங்கலாமா? அது நமக்கொரு பெருங்குறை யாகாதோ? நமது உடம்பில் நல்ல ரத்தம் ஓடவில்லையா ? அன்னிய தேசத்தாரைவிடத் தாழ்ந்தவரா நாம்? அவர்களிடமுள்ள தேச பாஷாபிமானம் நமக்கே னில்லாமற் போகவேண்டுமோ? இவையெல்லாம் புதிய தமிழனின் புதிய சிந்தனைகளாகும்.

நமது தமிழ்ப் பாஷையிலுள்ள நூல்களிலிருந்தே நமது முன்னோர்களின் எவ்வளவோ ஆசாரங்களும் நிலைமையும் அறியக்கூடியதா யிருக்கின்றது. இதைவிட்டு விட்டால் நமது பூர்வீகர்களின் நிலைமையும், பூர்வீக சரித்திரமும், நம் முன்னோர்கள் கஷ்டப்பட்டெழுதியதும்—காமும் அவர்களும் மேன்மையாய்ப் போற்ற அவசியமானதும் ஆகிய எண்ணிறந்த நூல்களும் கெட்டுப்போகு மன்றோ ? நமது முன்னோரது ஆசாரங்களும், மேலான மதமும், நிலைகுலைந்து போமன்றோ? நம்மை ஒரு ஜாதியாரென்றும் [illegible] அடங்

கினவர்களென்றும், தேசாபிமானிகளென்றும் காட்டக்கூடிய எதுவும் இருந்த இடம் தெரியாமலன்றோ போய்விடும்-- என்று புதிய தமிழன் பலகாலும் எண்ணி எண்ணி ஏங்குவான்.

ஆங்கிலேயரையாவது பாருங்கள்; தங்கள் பாஷையைப் பழய இங்கிலீஷ் (Old English), இங்கிலீஷ் சாக்ஸன் (Anglo Saxon) நடுக்காலத்திய இங்கிலீஷ் (Middle English) என்று உள்ளதை உள்ளபடியே கூறுவதுகூட நியாயமன்றென்று சொல்லுகிறார்கள். அப்படியிருக்க, நாம் மட்டும் நமது சொந்த பாஷையை மறக்க மன மிசையலாமா? "தமிழை ஏன் படிக்கிறாய்! இங்கிலீஷ் புஸ்தகத்தை எடுத்துப் படி" என்று தம் மக்களுக்குக்கூறும் தந்தைகள் எத்தனை பேர்? ஒரு தேசத்தாருக்குக் கௌரவம் அவர்களுடைய பூர்வீக நூல்களும், தேசாசார மதாசாரங்களுமே. உடலத்தோடேயே ஐக்கியப்பட்ட 'பாஷை' யென்னும் பெரிய பூஷணத்தை இழந்தோமானால், அன்றே இந்த மானங்கெட்ட—மதிப்பிழந்த—உடலத்தையும் விட்டுவிட வேண்டியது தான் என்று புதிய தமிழன் கூறுவான்.

ஒரு ஜாதியா ரென்பதற்குப் புதிது புதிதாக அவர்களின் பாஷையி லுண்டாகும் பதங்களே சாக்ஷி. அதுவே அவர்களின் உயர்வுக்கு அடையாளம். அவ்விதமே ஆங்கிலமும் வளர்ச்சி பெற்றுச் செல்லுகின்றது. குளிருக்காகவென்று தங்கள் நாட்டில் சட்டை யணிந்த ஆங்கிலேயர்கள் நமது உஷ்ண தேசத்துக்கு வந்துங்கூட தமது தேசாசாரமான சட்டை தொப்பி பூட்சுகளை விடேனென்கிறார்களே! நாம் மட்டும் ஏன் தேசபாஷையைக்கூட விட்டுவிடவேண்டுமோ? தமிழ்மொழியில் நாம் எத்தனைப் புதுப்பதங்களைச் சேர்த்திருக்கிறோம்? ஆங்கிலத்திலுள்ள ரஸாயன சாஸ்திரத்தைத் தமிழில் தமிழ்ச்சொற்களில் தெளிவாக மொழிபெயர்க்க முடியவில்லையே. அவ்விதம் மொழி பெயர்த்தாரும் கெமிஸ்ட்ஸ் (Chemists) என்ற ஆங்கிலபதத்திற்கு "கெமிஸ்தம்" என்றும், ஆக்ஸிஜன் (Oxygen) என்ற ஆங்கில பதத்திற்கு "அக்சிதம்" என்றும் ஆங்கில பதங்களையே தமிழ்ப் பதங்களாக மாற்றினரேயன்றி, "ஆக்ஸிஜன்" என்பதைப் பிராண வாயு என்றும், "கெமிஸ்ட்ஸ்" என்பதை ரஸாயனம் என்றும் தமிழ்ச் சொற்களிலேயே தெரிவிக்க முடியாதவராயினர். ஒன்றிரண்டிற்குத் தெரிவிக்க முடிகிறது; மற்ற பதங்களுக்குப் புதிதாகவே நூதன வார்த்தைகளை உண்டாக்க வேண்டியுளது. 'சுதேசமித்திரன்' பத்திரிகை தோன்றியபிறகு ஆங்கில பதங்களுக்குச் சரியான எத்தனையோ ராஜீய பதங்கள் சிருஷ்டிக்கப்பட்டன. இவ்வாறு காலத்திற்கேற்ற புதிய பதங்களைப் புகுத்தி ஏன் தமிழ் மொழியைப் பெருக்கக் கூடாதென்பது புதிய தமிழனின் விசாரமும் ஆராய்ச்சியுமாகும்.

புதிய தமிழன் ஸதா தமிழின் ஆராய்ச்சியிலேயே நிற்பான். காய்சின[illegible]தி என்னும் பாண்டியன் முதல் கடுங்கோன் வழுதி வரை

யிலுள்ள 89-பாண்டியர் வரன் முறையில் 4500-வருடங்களும்; வெண்டோட் செழியன் என்னும் பாண்டியன் முதல் முடத்திருமாறன் என்னும் வழுதி வரையிலுள்ள 59-பாண்டியர் வரன் முறையில் 3500-வருடங்களும்; முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெரு வழுதி வரையிலுள்ள 49-பாணடியர் வரன் முறையில் 2000-வருஷங்களும்; ஆக முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கங்களின் காலம் 10,000 வருடங்களென்றும்; பிறகு கீழ்கடைப் பாண்டியர்—பராக்கிரம பாண்டியன் ஈறாக 42-பேர்களுடைய வரன் முறையில் 2000-வருஷங்களும் ஆயிற்றென்றும், அப்போது மகமதியர் படையெடுப்பென்றும், அதுமுதல் இதுவரையில் 850-வருஷங்கள் போலாகுமென்றும், ஆகமொத்தம் கிட்டத்தட்ட 13,000-வருடங்களென்றும் ஸ்ரீமான் C. W. தாமோதரம் பிள்ளையவர்கள் வெளியிட்டிருப்பதைப் புதிய தமிழன் பலகாலும் எண்ணுவான்.

தமிழ் மொழியைச் சோழனும் பாண்டியனும் முன்னுக்குக் கொண்டு வந்தனர். அக்காலத்தில் நம் முன்னோர்கள் இந்தத் தேன் மொழியில் இலக்கணங்களையும், இயல்—இசை—நாடகம்—என்னும் முத்தமிழ் நூற்களையும், நியாயசாஸ்திரங்களையும், தர்மசாஸ்திரங்களையும், தெய்வ வணக்கம்—அறவியல்—பொருளியல்—இன்ப இயல்—மோக்ஷ இயல்கள் அடங்கிய முக்கிய சாஸ்திரங்களையும், உடம்பை வலுச்செய்யக்கூடிய கல்ப சாஸ்திரங்களையும், புற் பூண்டுகளின் தன்மையை யறிந்து அவற்றால் நோய்களைத் தீர்ப்பதற்குரிய வழியையுணர்த்தும் வைத்திய சாஸ்திரங்களையும், சோதிடம், சிற்பம், சங்கீதம், பாகம், யோகம்—முதலிய சாஸ்திரங்களையும் ஏராளமாய் எழுதி வைத்திருந்தார்களென்பதைப் புதிய தமிழன் தன்னைக் காண வருவோரிடமெல்லாம் சொல்லுவான்.

இவையெல்லாம் சேர்ந்து 8149-சிறந்த புஸ்தங்களாக இருந்தனவென்றும், ஒரு பெரும் புசலடித்துக் கடல் பொங்கியபோது அழிந்துவிட்டன என்றும், அவற்றுள் சிறிதுமட்டும் தமது காலத்தில் மீந்தனவென்றும் நற்கீர தேவர் சொல்லியிருக்கிறார். பிறகு பாண்டியர்களுடைய பிற்காலங்களில் 500-புஸ்தகங்கள் வரை புதுப்பிக்கப்பட்டனவென்றும், கூடியவரையில் எல்லா விஷயங்களிலும் நூற்களிருந்தனவென்றும் தெரியவருகின்றது. பிறகு ஜயினர் காலங்களில் தமிழ் விசேஷமாக மேன்மையடைந்ததாகத் தெரிகிறது. அதன்பின் வரவர வடமொழியினின்று மொழிபெயர்த்தும் வேறுவிதமாகவும் பெருக்கமடைந்து கிட்டத்தட்ட அறுநூறு வருஷங்களுக்கு முன் தமிழ் மிகுந்த நல்ல நிலைமையிலிருந்ததாகச் சொல்லப்படுகிறது. பின்பு வேற்றரசர் படையெடுப்பு உண்டாகி அதனாலும் எண்ணற்ற நூல்கள் கொளுத்தப்பட்டும் கிழிக்கப்பட்டும் அழிந்தன.

தமிழுக்கு வந்த காலவிபத்துகள் போல ஆங்கிலத்திற்கும் வராமலில்லை யென்றும், அவ்விதமிருந்தும் அவர்கள் ஆங்கிலத்தைப் பொன்னேபோல் போற்ற, நாம் மட்டும் ஏன் இப்படி அலக்ஷியம் செய்யவேண்டு மென்றும் புதிய தமிழன் கேட்கிறான். 863-வருஷங்களுக்கு முன்பு, அதாவது 1066-ம் வருஷத்தில் நார்மானியர் என்னும் பிரான்சுக்காரர் இங்கிலாந்தில் படையெடுத்து வந்து அதைக் கைப்பற்றி, அதின் ஜனங்களை யெல்லாம் அடிமைசெய்து, கச்சேரிகளிலும், சண்டை முகத்திலும், சட்டதிட்டங்களிலும், வேட்டை முதலியவற்றிலும் தொழுமிடமாகிய ஆலயத்திலும், நியாயஸ்தலங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் பிராஞ்சு பாஷையே வழங்கி வந்தார்களென்றும், சுமார் 300-வருஷங்களளவும் அதாவது 1362-ம் வருஷம் வரையிலும் இப்படியே இருந்ததென்றும், ஆங்கிலேயரது விடாமுயற்சியாலேயே அவர்கள் பாஷை முன்னுக்கு வந்ததென்றும் சரித்திரக்காரர்கள் எல்லோரும் சொல்லுவதைப் புதிய தமிழன் எடுத்துக் காட்டுகிறான்.

அந்த நார்மானியரின் ஆட்சியில் ஆங்கிலேயர்களின் தொகை, நாம் இப்போது இருக்கும் தொகை யளவுக்குப் பத்தில் ஒரு பங்குகூட இருக்கவில்லை. அவர்கள் தங்களின் அதிர்ப்தியைப்பற்றி ஏதேனும் மூச்சுவிட்டாலோ வந்தது விபத்து! இவ்வளவு கேவலஸ்திதியுற்ற காலத்துங்கூட அவர்களுக்குத் தேசபாஷையில் அபிமானம் இருந்ததே யொழிய, இங்கிலீஷ் வேண்டாம்; நார்மானிய பாஷைதான் தேசபாஷையாக வேண்டும் என்று கனவு கண்டவர்கள் கூட அவர்களில் இருந்திருக்கவில்லை. அந்தப் பழங்காலத்தில் ஆங்கிலேயருக்கு இருந்த பாஷாபிமானங்கூட நம்மவருக்கு இப்போது இராவிடில் எவ்வளவு கேவலம்? தமிழ்மொழியினிடத்து எவ்வளவோ அபிமானம் வைத்திருந்த அகஸ்தியர், மார்க்கண்டேயர், திருவாதூமாக்னி முதலிய இருடிகளும், ஔவையார், திருவள்ளுவனார், கம்பர் முதலிய புலவர்களும் தமிழின் தற்கால நிலையை யறிந்தால் அவர்கள் மனம் என்ன பதைப்பு பதைக்கும்! எனக்குச் சோறு வேண்டாம், புகழேந்தியின் வெண்பாவில் இரண்டு சொல்லுவாயானால் அதுவே போதும் என்று உரைத்த வித்வான்களுக்கு—தமிழ் மொழியை வளர்த்த பெரியோர்களுக்கு—நாம் செய்யும் பிரதியுபகாரம் அவர்களின் நூல்களையும் பாஷையையும் அலக்ஷியம் செய்வது தானா என்று புதிய தமிழன் மிகமிக நொந்து கொள்ளுகிறான். ஹா! கஷ்டம்! இப்படியும் வருமா காலகதி என்கிறான்.

நம்முடையதென்ற எல்லாவற்றையும் இழக்க இஷ்டமில்லாத புண்ணியர்காள்! நம்முடைய நாடும், நம்முடைய தமிழும் இன்னும் முழுதும் கெட்டுவிடவில்லை. உலகத்தில் எந்த மூலையிலும் நாகரீகமில்லாது கிடக்க, நமது பரதகண்டமொன்றே கல்வியிலும், செல்வத்தி

லும், நல்லொழுக்கத்திலும், தெய்வபக்தியிலும், ஒற்றுமையிலும், ராஜாங்கத்திலும், தேச க்ஷேமத்திலும், பெருவாழ்வு வாழ்ந்த காலமு மிருந்திருக்கவில்லையா? அவ்வாறே எகிப்து முதலிய இடங்களும், கிரேக்கதேசமும், ரோமானிய ராஜ்யமும் ஒவ்வோர் காலத்தில் மிகுந்த கீர்த்தியுடன் தன்னிகரில்லாமல் விளங்கிய நாள் கிடையாதா? இதைப் பார்க்கும்போது நமது நாடும் எப்போதாவது (தெய்வமே! அது கூடிய சீக்கிரத்தி லிருக்கட்டும்.) நல்ல ஸ்திதியில் வந்து விடுமென்பதற்கு ஐயமென்ன? அவ்விதம் உயர்வுற்றபோது நாம் நமது தமிழைக் குன்றச் செய்துகொண்டு தலைமுக்காட்டுடன் நில்லாமல், அதுவரையில் கம்பீரமாகவும், தைரியமாகவும், விடாமுயற்சியுடனும் காப்பாற்றினோ மல்லவாவென்று சொல்லிக் கொள்ளுவதற்குக் கூடுமானால். ஹா! அது எவ்வளவு பெரும் புகழ்! இப்புகழை யடைவதற்கு இப்பொழுது முதற்கொண்டே முயன்று தமிழ் மொழியை வளர்க்க வேண்டுமென்று புதிய தமிழன் அளவற்ற தாகம்கொள்ளுகின்றான்.

புதிய தமிழன் பழமையிலுள்ள மறைந்த கருத்துகளையும் குணங்களையும் மீண்டும் புதுப்பித்து அழகு செய்யவந்தோனுவான். புதுமையிலுள்ள நல்லெண்ணங்களையும் செயல்களையும் தனது பழமைக்கு விரோத மில்லாதவரையில் தழுவிக்கொள்வான். பழங் கோயில்களே அவன் வணங்குமிடம். பழமையின் மேற்படிந்துள்ள மாசுகளைப் போக்குவதே அவனது ஓயாத வேலை. தெய்வநிந்தை, மதநிந்தை, இராஜநிந்தை புராண இதிகாசநிந்தை, பூர்வ காவியங்களின் நிந்தை இவையெல்லாம் புதிய தமிழனுக்கு வேப்பங்கனி யெனக் கசக்கும். புதிய தமிழன் ஆஸ்திகனுவன். புதிய தமிழன் தெய்வ பக்தி நிறைந்தவன். அஹிம்ஸையே அவனது தர்மம், புதிய தமிழன் அன்புக்கன்றி வேறு எதற்கும் பணியாத வீரமுடையவன். சலியாத உள்ள முடையவன்; திடமான மனோ உறுதி ஏற்றவன்; முன்னே செல்வதன்றி பின்னுக்கு ஒருபோதும் போகான்; அங்ஙனம் போக நேரினும், அது பின்னுக்கு வாங்கி உடனே முன்னுக்குப் பாய்வதற்காகவே இருக்கும். நாம் அனைவரும் புதிய தமிழன் ஆகக்கடவோம். புதிய குணங்களை வளர்க்கக்கடவோம். நமது தாய் மொழியினை என்ஞான்றும் போற்றி விருத்தி செய்யக்கடவோம். நம் வாழ்நாளில் எத்தனையோ வருஷங்களை எப்படி யெப்படியோ போக்கிவிட்டோம். இந்தப் புதிய சுக்கில வருஷத்தையாவது நமது பரிபூரண வெற்றியின் துவக்கத்திற்கு முதலாவது வருடமாகக் கொண்டு, அறிஞர்களின் சந்ததியில் வந்த நாம் மனஸ்பூர்வமாக உழைத்துப் பிரஸித்த கீர்த்தி பெறக் கடவோம். உழைக்கவே நாம் பிறந்தோம். உழைப்பவர்க்கே உயர்வு. "உழைக்கும்" 'புதிய தமிழன்' என்றும் வாழ்க.

# பாசுர சேகரம்.

## தர்க்கிப்பது நன்மையைத் தரும்.

எனதுள்ளக் கருத்துகட்கெதிர்மா றுரைத்திடும்
கனகல்வி நட்பின ருறவும்வேண்டும்—குணமொடு
நெருங்கித் தருக்கிக்கில் நெஞ்சமதில் பலபுதிய
அருங்கருத்து எழுந்திடும தால்.

## சுந்தரவாழ்வே சுக வாழ்வு.

ஈனச்சொல் கேட்டு எதிர்பேச வாயின்றி
மானந்தான் குலைய வாழற்க—ஆனால்
இதந்தரு வழியிலவேனும் எத்துணையு மஞ்சாது
சுதந்தர வாழ்வின்பாற் செல்.

## ஈனருக்கிடுவது வீணே.

பாழுடம்பைச் சுமந்து பழிபலதை ஏற்று
வாழுவது மாமோவோர் வாழ்வு?—வாழவே
பலசெய்தும் பலகொடுத்தும் பக்ஷமதைக் காண்கிலேன்
கலகம்புரி அற்பர் தமக்கே.

T. S. குழந்தைவேல் முதலியார்.

# விடுகதை வினா.

நான்கெழுத்தாலாகிய ஒரு சொல்லில் முதலெழுத்தை மட்டும் நோக்கில் "செய்யுள்" என்பது பொருளாம். அம்முதலெழுத்தை நீக்கி மற்ற எழுத்துக்களை நோக்கில் "தேர்" என்பது பொருளாம். இரண்டாமெழுத்தை நீக்கி முதலெழுத்தையும் மூன்றாமெழுத்தையும் நான்காமெழுத்தையுஞ் சேர்த்து நோக்கில் "திருவடி" யென்றும் பொருளாம். அந்நான்கெழுத்தையுஞ் சேர்த்து நோக்கில் ஒரு பிரபலமான நூலின் பெயராம். இதன் விடையைத் தெரிந்தோர் இப்புது வருடமுழுதும் அதை மனதிற் கொள்ளக்கடவர்.

மு. முத்து வேங்கடாசலம்.

பாரதம்

[இதன் விடை அடுத்த ஸஞ்சிகையில் வரும். ப—ர்.]

---

ஒருவனுக்கு அடங்கி வேலை செய்கிறவர்களின் புத்தி தனது புதிய யுக்தி யோசனைகளை இழந்துவிடுகிறது. தானே சுயேச்சையில் செய்யும்பொழுது தான் கூர்மை அதிகப்படுகிறது.

கோட்டு சட்டை மூடிய நெஞ்சுக்குள் எவ்வளவோ அற்ப குணங்களும், தலைப்பாகையால் மூடிய தலைக்குள் மூளையிலே எவ்வளவோ மோச புத்திகளும் தா—தை—தோம்—ததிங்கிணை—என்று நர்த்தனம் செய்கின்றன.

ஆயிரம் கருத்துகளடக்கி ஒரு பழமொழி.

# பழமொழிக் குறிப்புகள்

## 2. அற்ப குணம்.

(3-வது கமலம் 655-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 125. அடுப்புக்கட்டிக்கு அழகும் வேண்டுமோ ?

**வே**ண்டியதில்லை தான். ஆனால், அழகு செய்யும் வேலையும் ஒன்றிருக்கிறது. அடுப்பங்கரையைச் சுத்தி செய்து மெழுகி அழகான கோலமும் இட்டு எவ்வளவோ பரிசுத்தமாய் வைக்கிறோம். இவ்வளவு செய்தும் கடைசியில் இத்தனை அழகும் சின்னபின்னமாய் அழிந்து சாம்பலும், அக்கினியும், எரிந்த கட்டையும், எரியாத கட்டையும், சுற்றிலும் கொதிவந்து விழுந்த ஜலமும், எண்ணெய்க் கசிவும், சிந்திய வடித்த கஞ்சியுமாய், அடுப்பைத் தொடுதற்கே முடியாத சூடாய், கடைசியில் யாவும் ஜலம்விட்டு அணைக்கப்பட்டுக் கட்டையும் கரியுமாய், குப்பையாகிவிடுகிறது. முன்பு செய்த அழகு அத்தனையும் வீணாகிப் பழைய நிலைக்கே திரும்பிவிடுகிறது. இந்த நிலையில் அடுப்புக்கட்டிக்கு எத்தனை அழகு செய்துமென்ன? அது தன் அல்ப குணத்திற்கே மறுபடியும் எட்டிவிடுகிறது. அதுபோல் அற்பகுணமுள்ளவர்களை நாம் எவ்வளவு கௌரவித்து நம்முடன் சேர்த்து வைத்துக்கொண்டாலும், நண்பன், பந்து என்று பாராட்டினாலும் கடைசியில் தங்களின் அற்ப குணத்துக்கே திரும்பிவிடுவார்கள். நாம் கொடுக்கிற கௌரவத்துக்குத் தக்கபடி நடந்துகொள்ள அவர்கள் அறியவுமாட்டார்கள். நம்மை அவன் மதித்ததென்ன, மதித்து நம்மீது கொண்ட நம்பிக்கைகளென்ன, அதற்குப் பதிலாக நாம் கொண்ட இழிந்த விதமென்ன—என்பதையும் யோசித்துப் பார்க்கமாட்டார்கள். எவ்வளவு நெருங்கிப் பழகியவர்களிடமுங்கூடத் தங்களின் அற்ப குணத்தையே காட்டிவிடுவார்கள். அவ்விதமிருந்தும், அடுப்புக்கட்டி எவ்வளவு அற்பப் பொருளானபோதிலும் அதைக்கொண்டேதான் சமையல் செய்துகொள்ளவேண்டி யிருப்பதுபோல், இந்த அற்பர்களைக் கொண்டும் சில அவசிய காரியங்களை நாம் நடத்திக்கொள்ளவேண்டி வருகிறது. அவ்வித சமயங்களில், அடுப்புக்குள் கையிட்டாலும், அதன் நெருப்புக்கருகில் தொட்டாலும் கை சுட்டுவிடுமென்றும், உள்ளுக்கு அக்கினி யிருக்கிறதென்றும் அஞ்சி முன்னெச்சரிக்கையுடனே ஜாக்கிரதையாய்ப் பழகுவதுபோல, இந்த அற்பர்களிடமும் தூர ஒதுங்கிநின்று நிதானத்தில் பழகி நமது காரியத்தை முடித்துக்கொள்ளும்படியாகிறது. ஏனெனில், அற்ப குணம் அவ்வளவு இழிந்தது. எவ்வளவு அழகு செய்தும் மதித்தும் பயனில்லாமற் போவது. அதனால்தான் மனம் சலித்துக் கடைசியில் “அடுப்புக் கட்டிக்கு அழகும் வேண்டுமோ ?”

---

தன் அவசரம் இருக்கும்போது எத்தனையோ கடிதங்கள் எழுதுவது. அந்த அவசரம் தீர்ந்தபிறகு கார்டின்விலை அரையணா அல்லவா என்று கணக்கு பார்ப்பது.

என்று வெறுப்புடன் சொல்லும்படியாய் விடுகிறது. இவ்விதமே அற்பர்களை நாம் எவ்வளவோ மதித்தும், நம்மிடம் நெருங்கச் சேர்த்து வைத்துக்கொண் டிருந்தும் கடைசியில் அவர்கள் அற்ப பதர்களாய்த் தங்களின் அல்ப குணத் தைக் காட்டிவிடும்போது, இவர்களையும் நண்பர்களென்றும் பந்துக்களென் றும் விசுவாசிகளென்றும் மதித்தோமே யென்று அருவருப்படைந்து "இந்த அடுப்புக் கூட்டிக்கு அழதும் வேண்டுமோ" என்று மனமுடைந்து சொல்லக் காலம் வந்துவிடுகிறது. இக்கருத்தையே இப்பழமொழியும் எடுத் துக் காட்டுகிறது.

## 126. விளக்குமாறுக்குப் பட்டுக் குஞ்சமா?

விளக்குமாறு வீட்டைக்கூட்டிச் சுத்தம் செய்ய ஒரு அவசியப் பொருள்தான். ஆயினும் அது ஒரு இழிந்த அல்ப வஸ்துவாகக் கொள்ளப் பட்டு ஒரு மூலையில் தூர ஒதுக்கப்படுகிறது. அதற்கு எவ்வித மதிப்புமில்லை. அதனிடத்திலுள்ள ஒரு அல்ப குணமென்னவென்றால் நல்லது கெட்டது என்ற தாரதம்மியம் தெரியாததுதான். கிழித்தெறிந்த காகிதக் குப்பையும் அதற்குச் சரி; மேஜையிலிருந்து தவறி விழுந்த முக்கிய கடிதங்களும் அதற்கு ஒன்றே; பணப்பெட்டியைத் திறந்து மூடியபோது தவறி வெளியில் விழுந்து விட்ட ரூபாய் நோட்டுகளையும் அது நினைத்துப் பார்க்காது. எல்லாவற்றை யுமே ஒன்றுபடக் கூட்டித் தெருவில் கொட்டிவிடும். எல்லாவற்றையுமே குப்பை என்பதாகக் கருதி வாறி வெளியில் தள்ளிவிடும். இப்படியான உயர்வு தாழ்வு தெரியாத, எல்லாம் தன்னைப்போன்ற அற்பப் பொருளாகக் கருதிவிடு கிற இழிந்த தன்மையை அது கொண்டிருக்கிறது. இப்படியே மனிதர்களி லும் சிலருக்கு எவரெவரிடத்தில் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டு மென்கிற தாரதம்மியம் தெரிவதில்லை. அவர்கள் கௌரவமுடையவர்க ளாயிற்றே, மதிக்கப்பட்ட மனுஷ்யர்களாயிற்றே, அவர்களிடம் நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று நினைத்துப் பார்ப்பதில்லை. எல்லோரிடத்தி லுமே தன் கையை ஓங்கிவிடுகிறது—தன் வாயைத் திறந்துகொண்டு கண்ட படி தூஷிக்கப் புறப்பட்டு விடுகிறது—பளீர் பளீர் என்று அறைந்து விடுகி றது—தனது முழு ஆணுவத்தையும் காட்டிவிடுகிறது—இந்த அற்ப கேவலத் தன்மைகளைத் தனக்கு ஒரு பெருமையாயும் தனது சரீரத் திமிருக்கு ஒரு கௌரவமாகவும் எண்ணிவிடுகிறது—தன் எதிரில் இருக்கிற மனுஷ்யனின் அந்தஸ்தென்ன, தனது இழிந்த தன்மையென்ன, அந்த மேலாகிய நிலையி லுள்ளவன் ஏதாவது சொன்னால் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு போகக் கூடாதா, அவன் முன்புதான் வணக்கமாய் நடந்துகொள்ளக்கூடாதா என்று எண்ணிப் பார்க்கிற பெரிய புத்தியே உண்டாவதில்லை. கிழித்தெறிந்த கடிதக் குப்பையையும், தவறிக் கீழே விழுந்த கரான்ஸி நோட்டுகளையும் விளக்குமாறு ஒன்றாகவே நினைத்துக் கூட்டிவிடுவதுபோல இந்த அற்ப பதர்களும் நடந்து கொண்டுவிடுகிறார்கள். இவர்களுடைய அற்பத் தன்மைக்கு அஞ்சியே, இந்த அற்பர்களைக் கொண்டு சில காரியங்கள் செய்துகொள்ள வேண்டியிருக்கும்

---

சில பெரிய மனிதர்கள் ஒன்றை நம்மிடமிருந்து வேண்டுகிறார்கள். அவர் களின் தயவுக்காக உடனே அனுப்பினால் அதுவந்து சேர்ந்ததற்கு விவரமே தருவதில்லை, நமக்கும் அதுபோய்ச் சேர்ந்ததா என்ற விசாரமில்லாதிருக்க, ரிஜிஸ்தரில் அனுப்பித் தீர்க்கவேண்டியதாகிறது. அவர்கள் பெருமை அப்படி.

போது, அந்த அற்பர்களால் மனுஷ்யர்களின் தாரதம்மியம் தெரியாமல் எவ் விதப் பிசகுகளையும் அவர்கள் செய்துவிடாதபடி யிருக்க அவர்களுக்கு அருகே யிருந்து புத்தி சொல்லி எச்சரித்துக் கொண்டும், அவர்கள் எவ்வளவு வேலை செய்தபோதிலும் அவைகளெல்லாவற்றிலும் நாம் கண்ணும் கருத்துமாய்க் கவனித்துப் பார்த்துக்கொண்டும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியதாகிறது. இது எவ்வாறெனில், விளக்குமாறைக் கொண்டு வீட்டின் குப்பைகளைக் கூட்டினாலும், தவறி விழுந்துள்ள முக்கியப் பொருள்களையெல்லாம் சிரத்தை யோடு கவனித்து அவற்றை எடுத்து வைத்துவிட்டு மற்ற செத்தைக் குப்பை களை மட்டுமே வெளியில் வாரிக் கொட்டப்போகிறோம். கூட்டும்பொழுதே ஒவ்வொன்றையும் கவனித்துக் கூட்டுகிற கண்ணினுடைய ஆராய்ச்சி மிகவும் தேவையாயிருக்கிறது. எல்லாவற்றையும் விளக்குமாறு கவனித்துக்கொள்ளு மென்று நம்பிவிடுவதற்கின்றி நமது மேற்பார்வையும் தேவைப்படுகிறது. இவ்விதமே அற்பர்களை—அற்ப மதியுள்ளவர்களைக் கொண்டு நாம் செய்ய வேண்டியிருக்கிற காரியத்திலும், அவர்களையே முழுதுக்கும் நம்பிவிடாமல் நமது மேற்பார்வையிலேயே அவர்களை நடத்தவேண்டியும் வருகிறது. ஏனெ னில் அற்பத்தன்மையும், அற்ப புத்தியும் அவ்வளவுக்கு இழிந்ததாயும் கேவலப் பட்டதாயும் இருக்கிறது. இப்படிக் கேவலப்பட்டதாய் இருப்பதால்தான் ஒருவனைக் கேவலப்படுத்துவதற்கு அந்தக் கேவலத்தை அவன் அதிகமாய் உணரும்படிச் செய்வதற்காக விளக்கமாற்றைத் தூக்கிக் காட்டுவதும், விளக்க மாற்றால் அடிக்கப் போவதும் வழக்கமாகி, அதனினும் கேவலம் உலகிலில்லை என்பதைச் சுட்டிக் காட்ட அந்த செய்கை உபயோகப்படுவதாயு முள்ளது. இத்தகைய கேவலப் பொருளாகிய விளக்மாறுக்குப் பட்டுக் குஞ்சம் சுற்றி னால் அதற்கு என்ன மதிப்பு இருக்கப் போகிறது? "விளக்க மாற்றுக்குப் பட்டுங் குஞ்சமா?" என்றுதான் கேவலமாய்க் கேட்டுப் பழிப்பார்களே யன்றி அதற்கு ஒரு கௌரவத்தைக் கொடுத்து மதிக்கப்போவதில்லை. அதுபோல இழிவும் அற்பமுமான குணமுடையவனுக்குக் கௌரவமும் வேண்டுமா என்று பழிக்கும் வகையிலும் இப்பழமொழி உபயோகிக்கப்படும். அற்பர்கள் இரண்டு காசு கையிலேறியதால் அதிக கௌரவம் பண்ணிக்கொண்டால் அவர்களின் செருக்கை யடக்க, "விளக்கமாறுக்குப் பட்டுக் குஞ்சமா?" என்று பழிப்பதற்குப் பழமொழியை உபயோகிப்பார்கள். அற்பர்கள் எவ்வ ளவு செல்வம் படைத்துமென்ன? அவர்களின் அற்பத்தன்மைக்கேதான் அது உபயோகிக்கப்படுமே தவிர பிறருக்குப் பயனில்லை. எவ்வளவு செல்வம் சேரினும் அவர்களின் அற்ப குணம் அவர்களை விட்டுப் போகாது. எனவே, அந்த செல்வம் காரணமாக அவர்களை ஒரு மதிப்பாய் எவரும் ஏற்றுக்கொள் ளப்போவதுமில்லை. விளக்கமாறுக்குப் பட்டுக் குஞ்சம் சுற்றியதினாலேயே அதற்கு மதிப்பு உண்டாகிவிடப் போகிறதா? அது தனது தாரதம்மியம் தெரிந்துகொள்ளாத அற்ப குணத்தை விட்டுவிடப் போகிறதா? இல்லை. அற்பம் எப்பொழுதும் அற்பமாகவேதான் கருதப்பட்டு உலகினரால் பழிக்கப் படுவதாகவே ஆகும். இப்பழமொழியின் உண்மைப் பொருளும் இதுவே.

[இந்தப் பழமொழியில் அற்ப பொருளாய்க் கருதப்பட்டுள்ள விளக்க மாற்றிலிருந்து நாம் ஒரு பெரிய ஞானத்தைக் கிரகித்துக்கொள்ள வேண்டும். விளக்கமாறு வீட்டைச் சுத்தம் செய்து ஒழுங்காய் வைக்க எவ்வளவோ உபயோகமுள்ள வஸ்து. ஆயினும் அது அல்பமான சிறு குச்சிகள் கூடியதே,

அதில் ஒரு குச்சியைத் தனியே எடுத்தால் அதற்கு ஒரு பெருமையுமில்லை. அதற்கு வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்ய சக்தியுமில்லை. அதைத் தூர எறிந்தேவிடப்படும். ஆதலால் தனியே பிரிந்துபோவதில் பலஹீனமும் கேவலமுமே ஏற்படும். எவ்வளவு அல்பமான பிரயத்தனமா யிருந்தபோதிலும், நெடுகச் செய்துவரும் பிரயத்தனங்கள் யாவும் ஒன்றுகூடும்போது, பல குச்சிகள் ஒன்று சேர்வதிலிருந்து வீட்டைக் கூட்டும் சக்தி அந்தக் குச்சிகளுக்கு உண்டாய்விடுவதுபோல, இந்தத் தொடர்ந்து கூடிய பிரயத்தனங்களுக்கும் உண்டாகிப் புது சக்தி ஏற்பட்டுவிடும். பல குச்சிகள் ஒன்றுசேர்ந்துவிட்டபோது குச்சிகள் என்ற பெயர்போய் விளக்கமாறு என்ற புதுப்பெயர் உண்டாய்விடுவதுபோல, நமது முயற்சிகள் யாவும் ஒன்ருகக் கூடிக்கொண்டுவிட்டபோது அது "ஜன நிர்மாணம்" என்ற புதுத் தன்மையைப் பெற்றுவிடும். ஒரு குச்சி வீட்டை சுத்தி செய்யாது. அவ்விதமே ஒரு மனிதனுல் எந்தக் காரியமும் ஆகாது. பல குச்சிகள் சேர்ந்தே சுத்தம் செய்ய முடியும். அவ்விதமே பல மனிதர்கள் சேர்ந்தே ஒரு பெருங் காரியத்தைச் சுலபமாய் நடத்திவைக்க சாத்தியமாகும். தனியாய் இருந்தபோது குச்சி என்றும், பல குச்சிகள் கூடியபோது விளக்கமாறு என்றும் சொல்லப்பட்டதுபோல், தனியாய் இருக்கையில் ஒரு அல்ப மனிதன் என்றும், பலர் ஒன்றுகூடிச் சக்தி பெற்றுவிடும்போது அக்கூட்டத்தை ஒரு **ஜனஸமூகம்** என்றும் பெயர்கள் வழங்கப்படுவதாகிறது. எந்த அல்ப முயற்சியும் ஒரு குச்சிக்குச் சமானமாய் இருப்பினும், அச்சிறு குச்சியைக் கேவலமாய் மதித்து இந்த ஒரு குச்சியால் என்ன ஆகப்போகிறதென்று ஆரம்பத்தில் இழிவுபடுத்தியபோதிலும், அந்த அல்ப முயற்சிகளைத் தொடர்ந்து நெடுகச் செய்து நிறைவேற்றிக்கொண்டே சென்றுல், அந்த அல்ப முயற்சிகள் பெருகிக் கூடிவிடும்போது,—எப்படி இந்தச் சிறுகுச்சிகள் பல ஒன்றுகூடியதில் சுத்தம் செய்யும் சக்தி பெற்றுவிடுகிறதோ,——அவ்விதமே அந்த அல்ப முயற்சியும் பெரிதாய்ப் பிரவகித்து —"ஜெயபேரிகை கொட்டடா" என்று துள்ளிக் குதித்து ஆநந்தம் பொங்கிச் சொல்லும்படி அவ்வளவுக்கான வெற்றியை அதுகொண்டுவிடுகின்றது. இவ்விதம் புத்திமதிகளையும் ஞானங்களையும் இந்த அல்ப விளக்கமாற்றினின்றும் நாம் உணர்ந்து கொள்வதுபோலவே, உலகில் எந்த அல்ப பொருளினிடத்தினின்றும்மேலாகிய ஞானத்தை நாம் கிரகித்துக்கொள்ளக்கடவோம். நமது புத்தியும் விவேகமும் மேலாகிய நோக்கிலேயே செல்லுமாறும் பயிற்சி செய்து கொள்ளக் கடவோம்.]

நமது தேசமும் நமது ஸமூக அமைப்பும் குடும்ப சௌகரியங்களும் பந்து மித்திரர்களின் சம்பந்தங்களும் முன் போலிராமல் மாறி வருகின்றன. அநாதைகளான குழந்தைகளையோ, ஸ்திரீகளையோ, கிழங்களையோ ரக்ஷித்தல் முற்காலத்தில் குடும்பத்தலைவர்களது கடமையாகக் கொள்ளப்பட்டிருந்தபடி இப்போது கொள்ளப்படுவதில்லை. பழய கட்டுப்பாடுகள் இப்போது லப காரணங்களாலும் நிலைகுலைகின்றன.

(தொடரும்.)



# நமது கதாப் பிரஸங்கி.

## பழய நாள் நினைவு.

"நான் யாரைப் பற்றி எழுதப் போகின்றேனோ, யாரை நான் இளமை முதல் நேசித்து வந்தேனோ, யாரை வாழ்விலும், தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் பிரியேனென்று தீர்மானம் செய்திருந்தேனோ அவள், எனது தந்தையுடன் பிறந்த சகோதரியின் குமாரி வாணி என்னும் பெயரினள். நாங்கள் வசித்து வந்த சிறுமாளிகை தோகை மயில் குன்றத்தின் ஓர் பாகம். அது சோலைகள் சூழ்ந்து அழகுறச் செய்த பள்ளத்தாக்கிலிருந்தது. அது மிக்க ரமணீயமான பிரதேசம். எப்புறம் நோக்கினும் கண்ணிற்கினிய காக்ஷிகள் பல தோன்றுகிற இயற்கை வனப்பினால் சூழ்ந்து மாறா இன்பத்தை நல்கிய அப்பிரதேசத்தை என்றும் மறக்கவியலாது. மரகதக் கம்பளம் போன்று விளங்கும் பசும் புற்றரைகளும், செழித்து வளர்ந்தோங்கிய பல ஜாதி மரங்களும், அவைகளைப் பின்னி நெருங்கி வளர்ந்த செடிகளும், கொடிகளும் எக்காலமும், இடையறா ஆனந்தத்தை விளைவிப்பன. நடுப்பகலில் மட்டுமே அப்பிரதேசத்தில் தினகரனைக் காணுதல் இயலும். மரங்கள் வளைந்து தினகரனை வணங்குவது போலக் காணப்படும். இன்னிசைப் பறவைகளின் இனிய கீதங்களும், கந்தங்களை யுண்டு, வெறிகொண்டு வண்டினங்கள் பாடும் பண்களும், சல சல வென்று ஓடும் கானாறுகளின் சப்தமும் சேர்ந்து இன்புறச் செய்யும். எங்கள் சிறு மாளிகைக்கு சிறு பாதைகள் கூடக் கிடையாது. நாங்கள், பசும் புற்களையும், புட்பங்களையும் மிதித்துக் கொண்டு தான் செல்ல வேண்டும். இப்பிரதேசத்தில், நாங்களே, சுயேச்சையாய் வாழ்ந்து வந்தோம். எங்களுக்கு உறவினரேனும், நண்பர்களேனும், எங்கள் இன்பத்தையோ, துன்பத்தையோ கண்டு இன்புறவோ, தேறுதல் கூறவோ வேறு மனிதர்களேனும், அப்பிரதேசத்திலாயினும், நகர பாகங்களிலாயினும் கிடையாது. எங்களிருவர் சந்தோஷத்தையும், துக்கத்தையும், இயற்கையரசி தான் கண்டும், கேட்டும், ஆதரிக்க வேண்டியவளானாள். நாங்கள் இளவயதிலேயே பெற்றோரை இழந்தோம். அடிக்கடி அவர்களின் திருவுருவங்கள் எங்கள் முன்பே தோன்றி மறையும். எங்களைச் சுற்றியுள்ள ஒவ்வொரு அற்பமான பொருளும், அநேக அற்புத நீதிகளைப் போதித்தன. ஏறக்குறைய பதினைந்து வருடகாலமாக நாங்களிருவரும் கை கோர்த்துக் கொண்டும், இன்னுரையாடிக் கொண்டும், அப்பிரதேசத்தில் உலாவி வாழ்ந்தோம். அவ்விடத்திலிலுள்ள

---

நூலாசிரியர் மற்றவரைப் போன்று ஒரு சாமான்ய மனுஷ்யரே. தேக பேதம் ஏதுமில்லை. மனோ பேதத்தில் அவர் மற்றவர்களினின்றும் பிரிந்து ஒரு தனி தேவ உருவாகிறார். அவரது மனோ சக்திக்கு முன் உலகம் பணிந்து வணங்குகிறது. அவ்வணக்கம் கடவுளுக்கே சேரவேண்டியதென்கிறார் ஆசிரியர்.

ஒவ்வோரடியும் எங்களுக்கு நன்ருகத் தெரியும். இவ்வாறு நாட்கள் பல சென்றன. ஒரு நாள் நாங்கள், உல்லாசமாக உலாவிவரப் புறப்பட்டோம். அப்பொழுது வாணி என்னை நோக்கி, "அன்பரே! இன்று மிக்க மனோகரமாகவிருக்கின்றதன்ரோ?" என்ருள். "ஆம், கண்மணி, மெல்லிய பூங்காற்று மெல்ல வீசுகின்றது. இன்னிசை கீதங்கள் செவிக்கு இன்பம் விளைவிக்கின்றன. மற்றும் அதோ பார்! நம்மிருவரைப் போலவே, அப்புருக்களுங் கூட இன்னுரையாடி மகிழ்கின்றன" என்றேன். "ஆம் அது உண்மை; அவைகள் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கும் கருத்தென்ன?" என்ருள். என்னைப் பரீக்ஷிக்க விரும்புகிருயோ? அப்படியானல் இதோ கூறுகிறேன் என்று உடனே அப்புருக்கள் உட்கார்ந்திருந்த மரத்தருகாமையில் சென்று சிறிது நேரம் நின்று விட்டு, பின்பு திரும்பி வாணியருகே சென்று, "அப்புருக்களிரண்டும், தம்மிருவருக்கும் நடக்கப்போகும் மணவினையைப்பற்றிப்பேசிக் கொண்டிருக்கின்றன" என்று கூறி நகைத்தேன். வாணி இதைக் கேட்டதும் நாணினுள். புன்முறுவல் செய்தாள். அவள் தனது நீலமணிக் கண்களை மலர்த்தி என்னை நோக்கினுள். அன்று அவள் ஒரு வன தேவதை போல் எனக்குத் தோன்றினுள். அவளின் பூரண வனப்பும், நடையும் புதிய உருவில் மாறி என் மனத்தை முற்றும் கவர்ந்தது. பதினைந்து வருட காலமாக என்னுடனிருந்த வாணி அன்று ஒரு நூதன மங்கையாகவே காணப்பட்டாள். என் மனம் வேறுபட்டதினுலோ, அல்லது அன்று புதிதாய் உபயோகித்த சில வார்த்தைகளினுலோ, அம்மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கருதினல், அது தகுதியோ, என்ற ஐயம் நிகழ்ந்தது. நிற்க, நான் அவளருகே சென்று, மெல்லிய கரங்களைப்பற்றி வாணி! ஏன் மௌனம் சாதிக்கிருய்! புருக்களின் மீது பொருமை கொண்டாயோ? என்றேன். உடனே, அவள் விரைவாக "இல்லை, இல்லை, அவைகள் பரஸ்பர ஒற்றுமையுடனிருக்குமென்று எனக்குத் தெரியும். அவ்விதம் நாமும்......மனிதர்களும், அன்புடன், இன்புடன்"......என்று மேலே கூறவியலாமல் நின்ருள். ஏன்? —வாழ்க்கைத் துணைவியும் இல்வாழ்வானும், அன்புடன், இன்புடன், இல்லறவாழ்வைச் செவ்விதாய் நடத்தி வருவது இயல்பே. ஆனல், சிலர் மண வாழ்க்கையின் மர்மங்களை யுணராததாலும், பரஸ்பர ஒற்றுமை இன்மையாலும், தம்மில் வாழ்வை செவ்விதாக நடத்திவர இயலாமல் அல்லலுறுகின்றனர். நம்மிருவர் வாழ்க்கையில், அத்தகை துன்பங்கள் நேரிடாதென்பது நம்மிருவர் மனமுமறியும். இது உண்மை தானே என்றேன். ஆம் என்பதற் கடையாளமாக, தன் தலையை அசைத்தாள். நம்முடைய பிற்கால வாழ்வில், நாமிருவரும், அன்புற்று, இன்புற்றிருக்க. அன்பானந்தன் அருள் பாலிப்பாரெனக் கூறினேன்.

***

மேற்கூறியவை நிகழ்ந்த மறுநாட் காலை என் இன்னுயிர்க் காதலி, என்னன்பைக் கவர்ந்த செல்வி தேக அசௌக்கியமுற்றுப் படுத்திருந்தாள். அவள் வெளுத்துச் சலவைக் கல் போல விளங்கினுள். அவள் மாசற்ற

---

சம்பளத்திற்கு வேலை செய்யும் ஒரு தொழிற்சாலையானது அங்கு வேலை கிடைக்கு முன்பு பெறுதற்கரிய தவச்சாலையாயிருந்து, அதன் பின்போ அது ஒரு சிறைச்சாலை போலும் காண்கிறதாம்.

வ்தனத்தில் கரிய கூந்தல், சுருண்டு சுருண்டு படிந்திருந்தது. அவள் நீல மணிக் கண்கள் என்னைப் பரிதாபமாய் நோக்கின. அவள் அன்று மாலை என்னை அருகே அழைத்து என் கரங்களை எடுத்து முத்தமீய்ந்து "அன்பார்ந்த செல்வரே! நாமிருவரும் பிரியுங் காலம் நெருங்கியது." என்றாள். (நெஞ்சு திடுக்கிட்டது.) "ஒரு பிரளயம் நம்மை நோக்கி வருகிறது. நான் மறுவுலகம் போகின்றேன். என்னன்பைக் கவர்ந்த செல்வரையும், இச்சிறு மாளிகையையும், இந்த ரமணீயமான பிரதேசத்தையும், என் கண்கள் இனிக் காணவியலா. ஆனல், நீர், என்னையும்........இப்பிரதேசத்தையும், மறந்து விடுவீரோ" என்று நோக்கினள் பரிதாபமான வாணி. என் கண்களில் நீர் தாரை தாரையாய் வழிந்தோடியது. நாவுலர்ந்தது. இருதயம் வெடித்து விடும் போலிருந்தது. சிறு குழந்தையைப்போலத் தேம்பித் தேம்பி அழவாரம்பித்தேன்.

"மண் சுழன்றது மால்வரை
சுழன்றது மதிளர்
எண் சுழன்றது சுவன்ற
தவ்வெறி கடல் ஏழும்
விண் சுழன்றது, வேதமுஞ்
சுழன்றது, விரிஞ்சன்
கண் சுழன்றது
கதிரொடு மதியும்"

என்று தெய்வீகப் புலவர் கூறியவாறு என் நிலைமையிருந்தது. ஒருவாறு தேறி, என் பிரிய காதலியே! உன் பிரிவாற்றுமையை எங்ஙனம் சகிப்பேன்? உன்னன்பான நோக்கும், உன்னன்பான செய்கைகளும் என்றும் என் கண்முன் நின்று என்னை வாட்டி வதைக்குமே! உன்னையே நம்பினவனன்றோ நான்! என் மனமறியாயோ! உன்னைப் பிரியும்படியும் ஈசன் சித்தமிருக்குமோ?" என்று சகிக்கவொண்ணுத தழ தழத்த குரலில் கூறினேன். உடனே, அவள் தன் பலகீனத்தைக் கருதாமல், ஆவேசம் கொண்டவள் போல் எழுந்து என்னை ஆலிங்கனம் செய்தாள். மறுவிநாடி தடாலெனக் கீழே வீழ்ந்தாள். அவளின் உயிர் விண்ணுலகை எய்தியது. உயிரற்ற அவளின் உடல் என் முன்னே கிடந்தது. நான் செய்வதின்னதென அறியாமல், சோர்ந்து நின்று விட்டேன். என்னைவிடத் துர்ப்பாக்கியசாலிகளுளரோ? என்னன்பார்ந்த செல்வியை, அவளழகை, அவளின் அன்பான உள்ளத்தை, நினைந்து நினைந்து, வியந்து வியந்து, பேதையே போதியோ, பித்தனய் விடுத்தெனை, என்றேங்கி மனம் வருந்தி இன்பமென்பது, இம்மியுமில்லா இவ்வுலகில் தனியாய் ஒருவனய் நின்றேன்; மூர்ச்சித்தேன்.

***

எவ்வளவு நேரம் நான் மூர்ச்சையிற் கிடந்தேனே அறியேன். என்னை ஒருவர் எழுப்பித் தன் மார்பின்மேற் சாய்த்துக் கொண்டிருந்தார். அருகில் ஒருவன்—அவரது பணியாளன் போற் காண்கிறது—அவன் எனக்கு விசிறிக்கொண்டு நின்றான். கண்ணை விழித்துப் பார்த்ததும் அவருக்கு சந்தோஷமுண்டாயிற்று. தம்பி சுந்தரா! நான் யார் என்று தெரிகிறதா? இளமையிலேயே தூர தேசம் சென்றுவிட்ட உன் தமையனே நான். உன்னைக் காண நெடுந்தூர நாட்டிலிருந்தும் வரு

நெடுநாள் நெஞ்சில் பதிந்திருந்த குறைபாடுகளெல்லாம் சின்ன ஒரு பேச்சில் வாந்தி எடுத்ததுபோல வெளியில்வந்து கலகத்தில்—பிரிவில்—வேறு குடித்தனமாய்ப் போய் விடுவதில்—முடிந்து விடுகிறது.

கிறேன். அநேக இடங்களில் உன்னைத் தேடி விசாரித்துக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தேன். நீயோ மூர்ச்சித்தும், அப்பெண்ணோ ஜன்னியால் ஸ்மரணை தவறியும் அபாயத்தில் கிடந்தீர்கள். நான் சிறந்த வைத்திய முறைகளை யறிந்து வைத்திருப்பதால் உடனே அப்பெண்ணுக்குத் தக்க ஔஷதம் தரவும், உள்ளடங்கிய ஸ்வாசம் மேலுக்கு வந்து மூச்சுவிடத் தொடங்கினாள். உனது மூர்ச்சையும் தெளிவித்தேன். இப்பெண்மணி யார்? என்றார்.

உடனே நான் "என் வாணி இறக்கவில்லையா?—இன்னும் உயிர் இருக்கிறதா?—உண்மையைச் சொல்லு அண்ணா! தங்கள் திருமுக தரிசனம் எனக்கு மங்களமாகட்டும்"—என்று கதறினேன். அதே சமயம் எனது வாணி தனது ஜன்னியில் "**கந்தக மதக்கரியை வசமாய் நடத்தலாம்**" என்று பாடத்தொடங்கி, "**சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது**" என்று அது வரையில் சொல்லி நிறுத்தினாள். எனக்கும் போன உயிர் திரும்பிற்று. "வாணி நமது அத்தையின் மகள்; தாங்கள் புறப்பட்டுப் போய்விட்ட மறு வருஷம் பிறந்தாள்" என்று தமயனாருக்குப் பூர்வ கதைகள் யாவும் கூறினேன். ஒரு வாரத்திற்குப் பிறகு வாணியும் குணமடைந்தாள். முன்னிலும் மிக்க அன்புடையவளானாள். என் தமயனாருக்கு வயது 60-க்கு மேல் இருக்கும். அவர் எனக்கும் வாணிக்கும் விவாகம் நடத்திவிட வேண்டுமென்று ஆவல் கொண்டார். அவர் தூர நாட்டில் சேர்த்த ஏராளமான தனக்குவியலுடன் வந்திருந்தார்.

* * *

விவாகமும் இன்பமாய் நிறைவேறியது. அண்ணா இடம் பணம் அதிகமிருந்ததால் பந்துக்களும் தங்களின் பழமையைக் கூறி எங்களுடன் கூடிக்கொண்டனர். தமயனாரையே பிதாவாகக் கொண்டு அவரது பாத நிழலின்கண்ணே நானும் வாணியும் இன்பமாக வாழ்ந்து வருகின்றோம். அதோ அந்த விருக்ஷத்தின் அடியில் தனது பொம்மைகளை வைத்து விளையாடிக்கொண்டுள்ள மோஹனரங்கனே எங்கள் இருவரின் காதலுக்கும் அறிகுறியாய் உதித்தவன். வாணியின் பதி பக்தியை என்னென்பேன். உண்மையில் பதிவிரதா ரமணிகளுடன் வாழும் ஆடவர்க்கே அதன் நலம் தெரியும். எவ்வளவு பெரும் பிரிவு? எத்துணைப் பெரிய விபத்து? எவ்வளவு சுலபத்தில் தீர்ந்தது? யாவும் அவன் அருள்.

**சோ. த. ஆநந்தன்.**

பசியில்லை, சாதமே வேண்டாம் என்பவனுக்கு, ஒரே ஒரு பிடி சாதம் கையில் வாங்கிக்கொள்ளு என்று வற்புறுத்திப் பிசைந்து போட்டால் அவன் ஒரு பிடியல்ல, வயிறுறவே புசித்து விடுவான். அதற்குத் தக்க பசியும் வரும். எல்லாம் ஊட்டுகிற அன்பிலும், பேசுகிற பேச்சிலும் இருக்கிறது!

அன்பை மறந்தவனிடம் பழய அன்பை நினைத்து வலியச் சென்று பேசப்போவது பணமில்லாத பெட்டியைத் திறந்து பார்த்து அவ்வளவு பணமிருந்த பெட்டியில் ஏதாவது இரண்டணா ஒட்டிக் கொண்டிராதாவென்று ஆராய்ந்து ஏமாறுவதுபோலாம். பழகிப் பிரிந்தோர் மறுபடி சேரினும் பழய அன்பு வாராது.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

REGISTERED TRADE MARK

## தோசையைத் திருப்பிப் போட்டாலென்ன ?



ஏதடா அப்பா! விகடன் புது வருஷத்திலே தோசை தின்னப் போய்விட்டான் என்பீர்களோ? அப்படி நடுவிலே, மத்தியிலே, செல்வம் கூடிக்கொண்டு தோசை தின்னத் தொடங்கி, முன்பு தொட்டு விழுங்கிய பழய சோற்றுத் தண்ணியை—மெதுவாய் அந்த நாற்றம் வெளிவராமல் மூடிவிட்டிருக்கிற—புதிதாய்ப் பெரிய மனிதரான வர்க்கத்திலே—விகடன் சேர்ந்த பேர்வழியல்ல. விகடன் பிறந்ததுமுதல் தின்பது தோசை தான். அந்தத் தோசையை எப்போது திருப்பிப்போடுவார்களென்று விகடன் மட்டுமல்ல, எல்லாருந்தான் அடுப்பங்கரையில் காத்திருப்பவர்கள்! ஒரு தோசையைத் தின்று இன்னொன்றுக்கு எதிர்பார்க்கையில், அந்த சமயம் குழந்தையோ குட்டியோ, வேண்டிய மனுஷ்யனோ அங்கு வந்துவிட்டால், அவனுக்கு அடுப்பிலிருக்கிற தோசையைப் போட விட்டு விட்டு, அதற்கு அப்பால் சுடப்போகும் தோசைக்கு அண்ணாந்து பார்த்து அது கிடைக்கும்வரையில் வெறும் வாயை மென்று காத்திருப்பவர்களில்லையா? இன்னும் வீட்டில் சுடும் தோசையென்று அளவுக்கதிகமாய் உள்ளுக்குத் தள்ளிவிட்டு, தாகம் அதிகம் எடுத்துக்கொண்டும், மத்தியானப் புசிப்புக்குப் பசியில்லாமல் வயிறு உப்பிக்கொண்டும் நோவாரில்லையா? இதெல்லாம் சாப்பாட்டுராமர்களின் சங்கதி! விகடன் சொல்ல வந்தது தோசை தின்பதைப்பற்றியல்ல. விகடன் சுட்டிக் காட்டவந்த ஞானக் குறிப்பு இவற்றிலெல்லாம் இல்லை.

* * *

பின் எங்கே இருக்கிறதென்றால், அது தோசையைத் திருப்பிப்போடும் போது பார்த்தால் தெரியவரும். ஒரு பக்கம் மட்டும் வெந்த தோசை எப்படி யிருக்கும்? பாதி மாவும் பாதி வெந்துமிருக்கும். இது காரியத்துக்கு உதவுமா? ஒருபக்கம் வெந்தும் மறு

---

சுக்லஷு புரட்டாசிமீ 15உ (30—9—29)ல் காந்தியடிகளின் 60-வது ஆண்டு நிறைவாகும். எல்லோரும் கதர் விற்பனையைப் பெருகச்செய்து, கதர் வாங்குவதே சஷ்டி பூர்த்தித் திருவிழா—என்கிறார் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார். இவர் நல்ல சக்ரவர்த்தி தான்.

பக்கம் வேகாததுமான அரைகுறைச் சங்கதிகள் எவ்வளவோ இருப்பதற்கெல்லாம் காரணமென்ன? தோசையைத் திருப்பிப்போட்டு அது வேகுவதற்குள் அவசரப்பட்டுப் போகிறதால் தான். ஒரு பேச்சுக்கு இன்னொரு பேச்சான அர்த்தத்தை உண்டாக்கிக் கொண்டு அவஸ்தைப்படுகிறவர்கள் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் தோசையைத் திருப்பிப் போடுகிற வரையில் பொறுத்திருக்காதவர்களே. ஒருவர் சொன்ன வார்த்தையின் கருத்தை முழுதும் கேட்டுக்கொள்ளாமல் முக்கால்வாசிப் பேச்சு முடிவதற்குள்ளே அவசரப்பட்டுத் தாங்கள் பிசகாய் வேறொரு மாதிரியில் எண்ணிக் கொண்டு உடனே பதில் சொல்லப் புறப்பட்டுவிடுகிறார்கள். இது பிறகு சிரிப்புக்கும் இகழ்ச்சிக்கும் இடமாய் விடுகிறது. அனர்த்தத்துக்கும் கூட வழி வைக்கிறது. கையிலிருந்த பொன் காப்பு கெட்டுப்போய்க் கழற்றி விட்ட பெண் கண்ணாடி வளையல்களை அணிந்துகொண்டு கணவனிடம் கையைக் காட்டிப் பேசப்போக, அதற்குள் அவன் அவசரப்பட்டுக்கொண்டு, பணம் வந்தபிறகு தான் வேறு காப்பு செய்யமுடியுமென்றும், அதற்கு 4, 5, ரூபா வீண் செலவுகள் பிடிக்குமென்றும் மடமடவென்று வாயைத் திறந்து கொள்கிறான்! கடைசியில் அவன் மனைவி—நான் அது கேட்க வரவில்லை; கண்ணாடி வளையலுக்கு நாலணா தரவேண்டும்; அதையே கேட்கவந்தது—என்கிறாள். இவனும் அப்படியா என்று இளிக்கிறான்! "எவ்வளவு காலத்திற்கு என் கடிதங்களைப் பெறப்போகிறீர்கள்; ஏதோ இருக்கிறவரை பெறுங்கள்"———— என்று ஒருவர் கடிதத்தின் கடைசியில் குறிப்பிடுகிறார். அவருடைய கருத்தோ நாம் எத்தனை நாளைக்கு உயிருடன் இருந்து இப்படிக் கடிதங்கள் எழுதப்போகிறோம் என்பது. அக் கடிதத்தைப் பெறுகிறவனோ தன்னை அற்பாயுசுக்காரனாக நினைத்துக் கொண்டு ஏதோ 'உன் ஆயுசு இருக்கிறவரையில் என் கடிதத்தைப் பெறு' என்று எழுதிவிட்டிருப்பதுபோல் எண்ணிக்கொண்டு, கடிதம் எழுதியவனின்மேலே வருத்தங்கொள்ளுகிறான். இதுவெல்லாம் என்ன?— தோசையைத் திருப்பிப் போடுவதற்குள் பொறுத்துக்கொள்ளாத அவசரப் புத்தி தானே!

***

தோசையைத் திருப்பிப்போடுவதற்குள் பொறுக்கமாட்டாமல் அவசரப்பட்டு விடுகிற தன்மையைப்பற்றி விகடன்மேலே சொன்னேன். அந்த அவசரத்திலே பாதி வெந்தும் வேகாததுமாயுள்ள தோசையை எடுத்துக் கொள்வதான அரைகுறைப்பட்ட— முடிகிறவரைக்கும் பொறுத்திருக்கத் தாளாத புத்திஹீனர்களும் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் ஒரு காரியத்தை நன்றாக ஆரம்பிப்பார்கள். பிறகு நடுவிலோ அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துக்கொள்வார்கள். ஒரு காரியம் நன்றாக நிறைவேறி வரும் போது, அதை முழுதுமே நல்லதாகச் செய்துவிடாமல் இடையில் முறித்து விட்டுத் தங்களின் குறைப் புத்தியைக் காண்பித்துக் கொள்வார்கள். இதில் காரியமே கெட்டுவிடுகிறது. ஒருவன் தன் பெண்ணுக்கு எவ்வளவோ சீர் வரிசைகளுடன் விவாகம் செய்கிறான். அந்தப் பாதிவரையில் அவன் காரியம் சரிதான். அதற்குள்

---

"என்னை அவர்கள் நன்றி மறந்து கைவிட்டது அவர்களுடைய வாழ்வில் சாமான்ய விஷயமாகப் போய்விடவில்லை. அதுமுதலே அவர்களின் க்ஷீணிப்பும் தொடங்கிற்று." (ஒரு கதா வாசகம்.)

அவன் தோசை பாதிவரை வெந்து விட்டதென்று இறுமாந்து கொள்ளுகிறான். அதற்குப் பிறகு செய்யவேண்டிய மரியாதை வகைகளுக்கும், மாப்பிள்ளை தன் வீட்டுக்கு வருகிறபோது நடத்தவேண்டிய மரியாதை விமரிசைகளுக்கும் அப்படி இப்படியென்று சிக்கனக் கையைக் காட்டி மெழுகிவிடப் புறப்படுகிறான். இதிலே கலகமும் மனஸ்தாபமும் வருத்தங்களும் மூண்டுகொண்டுவிடுகிறது! காரியமும் அரைகுறையாய், பாதிவெந்த—பாதிவேகாத தோசையுமாய் விடுகிறது! இப்படியில்லாமல் தோசையைச் சரியாகத் திருப்பிப்போட்டு நன்றாக வெந்த பிறகு எடுப்பது போல் காரியத்தை முதலிலிருந்து கடைசிவரையில் ஒழுங்காகச் செய்தாலென்ன? இது அரைகுறைப் புத்திதானே! இன்னொரு பக்கம் திருப்பிப் போடுவதற்கு முன் அவ்வளவு வெந்தது போதும், காரியமாய்விட்டது என்று நினைக்கிற அல்ப குணம்தானே இது! இவ்விதமே உலகத்தில் நடக்கிற பல காரியங்களையும் இந்த அரைகுறை வகையில் கொண்டுவந்து சேர்த்துவிடலாம்!

***

இனி, இன்னொரு குறிப்பையும் விகடன் சொல்லக்கூடும். ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கக் கூடாதா என்பது பழமொழி. தோசையின் சூடு தணிவதற்குள் அதைத் தொட்டுக்கொண்டும், பிட்டு வாயில் திணித்துக்கொண்டும் சூடு தாளாமல் அப்பப்பா என்பார் சிலர். இது எல்லா காரியமும் ஆனபிறகு கடைசியில் அத்தனை காரியத்திற்கும் ஒரு சுன்னம்—சுழி வைத்து விடுகிற சங்கதிக்குச் சமமாக்கலாம். அவசரப் படுகிற புத்தியில் இதுவொன்று. எல்லா சமையலும் ஆகிவிட்டு புசிக்கப்போகிற வேளையில் அவசரப் புத்தியோடு ஒரு சிறு சங்கதியை எழுப்பிவிட்டு அதிலே ஒரு சண்டை மனஸ்தாபத்தைப் பெருகவிட்டு உண்ணப் போகும் உணவை விஷமாகச் செய்துவிடுவதையும் இந்த இனத்தில் சேர்க்கலாம். எல்லா சமையலையும் கஷ்டத்துடன் செய்தவர்கள் அது வயிற்றுக்குள் சந்தோஷமாய்ப் போகிறவரையிலும் மௌனமாய் இருந்துவிடக் கூடாதா? ஆக்கப் பொறுத்தது ஆறுகிறவரைக்கும் பொறுத்திருந்தால் ஒரு கஷ்டமுமில்லையே! இப்படியே முக்கிய விசேஷங்களில் ஆறப்பொறுக்க முடியாத புத்தியால் சகிப்புத்தனமின்றி எல்லோருக்கும் ஒரு வருத்தத்தை யுண்டுபண்ணிப் போடுகிற சங்கதிகள் அநேகம். தோசை ஆறுகிறவரையில் பொறுத்திருந்தால் வாயும் சுடாது. அப்பப்பா எனவும் வேண்டியதில்லை, வருந்தவும் ஏற்படாது. இதை இன்னும் விவரித்தால் பெருகுமானதால் விகடன் என்வாயை இம்மட்டில் மூடிக்கொள்ளுகிறேன்.

***

விகடன் இந்தத்தடவை சொல்ல வந்தது "தோசையைத் திருப்பிப் போட்டாலென்ன!" என்கிற சங்கதியைப்பற்றியல்லவா? அதற்கு முன்னே மூன்று விதமான குட்டி ஞானக் குறிப்புகள் தோன்றிக்கொள்ளவே, அதை மேலே விவரித்துவிட்டேன். இப்போது முதலில் தொட்டுக்கொண்டதைப் பிட்டுக்கொட்ட ஆரம்பிக்கிறேன். மருமகளைத் தனது சத்துருவென்று நினைத்துவிட்ட மாமி, அவள் தன் வீட்டுக்கு வந்த மகா லக்ஷ்மியென்கிற உயர்வான எண்ணத்தின்

---

தேகத்தில் காணும் ஒரு சிறு உபத்திரவத்தால் உலகமே அவனுக்கு உபயோகமில்லாதது போல் தோன்றி விடுகிறது. காரணம் மனமே, கவலையே.

பக்கமாக அந்தத் தோசையை என் திருப்பிப்போடக்கூடாது? அப்படிப் போட்டால் குடும்பம் எவ்வளவோ நன்ருக நடக்குமே! நெடுநாள் பழகியவனை ஒரு அல்ப சங்கதிக்காக ஒதுக்கிவிடப் பார்ப்பவன் அந்த அல்ப சங்கதியானதோசையை அவன் விரும்பிய பக்கமே திருப்பிப் போட்டுவிட்டாலென்ன? அவன் பழக்கமும் உறவும் விட்டுப்போகாமல் நிலைக்குமே! ஒருவரை விரோதித்துக்கொள்ள நேரும்போது விரோதத்திற்கான சங்கதிகளை விட்டுவிட்டு சமாதானமாய்ப் போகும் பக்கத்திலேயே அந்த விரோதத் தோசையைத் திருப்பிப் போட்டாலென்ன? ஒரு உண்மையான வேலைக்காரன் தன் சம்பளம் போதாதென்று முறணும்போது அவனை வேலையிலிருந்து விலக்கிவிடாமல் அவனுக்கு அதிக சம்பளம் தந்து தன்னிடமே வைத்துக்கொள்ளுகிற கருணையின் பக்கமாக அந்த விவாதத் தோசையைத் திருப்பிப்போட்டாலென்ன? ஒரு கலகத்திற்கு—சண்டைக்கு ஏதுவான ஒரு சங்கதியை அப்படி நடக்காமல் தடுத்துவிட்டு அதை அடக்கிவிடுகிற பக்கத்திலே அந்தக் கலகத் தோசையைத் திருப்பிப்போட்டாலென்ன? ஒருவனிடம் அவனைப்பற்றி இன்னுர் அப்படிச் சொன்னுர் இப்படிச் சொன்னுர் என்று சொல்லிக் கோள்மூட்டும் போது அதிலே ஆத்திரப்பட்டுவிடாமல் உலகமே அப்படித்தான் என்றெண்ணிவிட்டு அந்த ஆத்திரத் தோசையை பொறுமையின் பக்கமாகத் திருப்பிப் போட்டுவிட்டாலென்ன? அவன் கை பெரியது, அவனைப்போல நடத்த, வியாபாரம் செய்ய, லாபம் பெற, நிர்வகிக்க—நம்மால் முடியுமா என்று நினைக்கிற வேளையில், ஏன் அவனைப்போல ஆகக்கூடாது, ஏன் முயன்று பார்க்கக் கூடாது என்கிற எண்ணத்தோடு பின்னுக்கிழுக்கிற அந்தத் தோசையை முன்னுக்குத் திருப்பிப் போட்டுப் பார்த்தாலென்ன? அவன் போக்கு தினுசு நமக்கு வருமா என்னும்போது, ஏன் வராதென்ற துணிகரத்துடனே முயற்சியின் பக்கமாய் அந்த ஆவலின் தோசையைத் திருப்பிப் போட்டுப் பார்த்தாலென்ன? பிரயாணத்துக்கு இன்று அவசரப்படுகிறவன் நாளைக்குப் போகஅந்தத் தோசையைத் திருப்பிப் போட்டாலென்ன? ஒருவனைக் கைவிட நினைக்கும்போது அந்தத் தோசையை இன்னும் அவனை ஆதரிக்கத்தான் வேண்டுமென்ற பக்கத்திலே திருப்பிப் போட்டாலென்ன? தன் மதத்தை விட்டுப்போக நினைப்பவன் இன்னும் சந்தேகம் தெளிய முயன்று எவ்விதமும் தன் மத சந்தேகத் தோசையைத் திருப்பிப் போட்டாலென்ன? வழக்காட நினைக்கிற வேளையிலே, அந்தத் தோசையை ஒன்றுபட்டுப்போகிற பக்கத்திலே திருப்பிப்போட நினைத்தாலென்ன? கெட்டது செய்ய நினைக்கிறபோது, நல்லதே செய்துவிடுவோமென்ற எண்ணத்தின் பக்கத்தில் அந்தத் தோசையைத் திருப்பிப்போட்டாலென்ன? உழைக்காமலே சோம்பேறியாய்க் கழித்துவிடுவோமென்கிற நினைப்புத் தோசையை உழைத்தே உண்ணவேண்டுமென்கிற முயற்சியின் பக்கத்திலே திருப்பிப் போட்டாலென்ன? அவனுக்கு அவ்வளவு திமிராலல் எனக்கு எவ்வளவு இருக்கும் என்று மூர்க்கம் பிடிக்கிறபோது அவனுடைய அல்பபுத்தி அவ்வளவுதான் என்று ஒதுங்கிப்போகிற பக்கத்திலே அந்த மூர்க்கத் தோசையைத் திருப்பிப்போட்டாலென்ன? இப்படித் தோசையைத் திருப்பிப்போடுவதிலே

---

பிடிவாத கோபம்—முறட்டுக்கோபம்—இது மனிதரின் சாந்தத்தை இடிக்கும்.

எவ்வளவு சமாதானமும் சாந்தமும் திருப்தியும் வளருகிறதென்பதைச் சற்றே எனது நஞ்சான் குஞ்சான்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். எதற்கும் விட்டுக்கொடுத்துக் கொண்டும், இணங்கி இசைந்துபோகப் பார்த்துக் கொண்டும், சமயோசிதமாகப்போவதிலுள்ள நன்மை பெரியது. ஒன்றை ஒருவிதமாய் நினைக்கும்போது அந்தத் தோசையை மறுபக்கமும் திருப்பிப் போட்டு யோசிப்பது அநேக காரியங்களுக்கு ஒரு எச்சரிக்கையாயும் நல்ல மாதிரியாயும் புத்திசாலித்தனமாகவும் கூட இருக்கும். இதற்கு உதாரணமாக, ஒருகாலத்தில் ப்ளேட்டோ என்ற பேர்போன கிரேக்க சாஸ்திரி ஒருவர் தம்மிடத்தில் வந்த ஒரு குண்டுணியின் வார்த்தைகளை அப்படியே ஒப்புக்கொள்ளாமல் அந்த வார்த்தைத் தோசையைத் திருப்பிப் போட்ட விதத்தையும் விகடன் இங்கு கொஞ்சம் குறிப்பிடுகிறேன். அந்த சாஸ்திரியிடத்தில் ஒரு குண்டுணி சென்று "சாஸ்திரியாரே உம்முடைய பாடல்களைக் குறித்துப் பிள்ளைகள் பரிகாசம் செய்கிறார்கள்" என்றான். கோட்சொல்பவனை அவமதித்துக் கொடுந்தேளென நினைத்துக் கோளுக்குக் காதுகொடாத அந்தச் சாஸ்திரி அதற்கு மறுமொழியாக—"அப்படியானால் நான் இனிமேல் நன்றாகப் பாடக் கற்றுக்கொள்வேன்"—என்று தமது பதில் வார்த்தைத் தோசையைத் திருப்பிப் போட்டார். அவன் மறுபடியும்—"ஐயா உம்மைப்பற்றி அவதூறு பேசுகிறவர்கள் அநேகர்"—என்றான். அதற்கு அவர்—"நான் இனி என்னைக் குறித்துப் பேசப்படுபவைகளை ஒருவரும் நம்பாதபடி நடந்துகொள்வேன்"—என்று பக்குவமாய்த் தோசையைத் திருப்பிப் போட்டுச் சொன்னார். மீண்டும் அந்த குண்டுணி நாரதன்—"ஐயோ உம்முடைய சிநேகிதனுங்கூட உம்மைப் பற்றிக் குறைவாய்ப் பேசக்கேட்டேன்"—என்று சொல்ல, சாஸ்திரியார் அதற்கு வேறொன்றும் சொல்லாமல்—"ஏதோ ஒரு காரணமின்றி அவன் அப்படிச் சொல்லமாட்டான்" என்று இன்னும் ஞானத்தோடு தோசையைத் திருப்பிப் போட்டுப் பேசினார். இவ்விதமே ருஷியாவின் பிரபல சக்கரவர்த்தியாகிய மகா பேதுரு அரசரிடத்தில் யாராவது போய் ஒருவரைக் குறித்துக் குற்றமாகச் சொல்வதானால், அதைக் கவனமாய்க் கேட்டபின்,—"அவனைப்பற்றி நன்மையானது ஒன்றுமில்லையா? நீ அவனிடத்திற் கண்ட நல்ல குணத்தையும் சொல்" என்று தமது மறுமொழியான தோசையைத் திருப்பிப் போட்டுக் கேட்பது வழக்கமாம். ஆகவேதான், விகடன் புது வருஷத்திலே என் நஞ்சான் குஞ்சான்களுக்கு—எதையும் தீர்க்காலோசனையுடன் யோசித்துப் பார்க்கவேண்டுமென்பதற்காக—"தோசையைத் திருப்பிப் போட்டாலென்ன" வென்று குறிப்பாகச் சுட்டிக் காட்டிவிட்டேன். நீங்களும் இதிலுள்ள சூட்சுமத்தைக் கண்டுகொள்ளுங்கள். ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

தன்னை ஜாடை காண்பித்து அழைத்ததாகத் தன் கணவன் மீது மனைவி குற்றம் சொல்லுவாளா? அச்செயலில் களங்கமில்லாததால் குற்றமில்லை. எல்லா கலகமும் களங்கத்தாலேயே.

K. V. NATARAJAMANI
P...
SELLANAYAKANPATTY
SALEM 636 201.



வைத்தவர் மறந்து வேறு வேலையாய் எழுந்து சென்றுவிட்டால், எடுத்தவர் என்ன கதறினாலும் கொடார் என்று விகட சுலோகம் கூறுகிறதாம்!

***

வீட்டுக்கு வெளியிலாயினும் சரி, தனது பெட்டிக்குள் மேல்பக்கத்திலாயினும் சரி, பிறருக்குத் தெரியும்படி வைத்த பணம் காசுகள் தன் கண்ணுக்கெதிரிலேயே காணமற் போய்விடுமென்று விகட சித்தாண்டி விளம்புகிறார்!

***

பச்சைக் குழந்தைகள் பதுங்கி எடுத்த பணம் பக்ஷணம் வாங்குகையில் தெரிந்துவிடலாம். பக்குவம் தெரிந்தவயது பயில்வான்கள்எடுத்தப் பணமோ—அது திரும்புமா ஐயனே என்று—விகடமுனி வினவுகிறார்!

***

வரவுக்கு வழிகள் சுருங்கினாலும் செலவிடுதற்கு மாத்திரம் புது புது பாதைகள் புறப்படுவதில் தாழ்வில்லையென்று நொந்து நோவெடுத்த ஒரு சம்சாரி விகடனுக்குச் சொன்னாராம்!

***

உத்தியோகம் கேட்கப்போன இடத்தில் வேலை காலியில்லையென்றதைக் கேட்டு வாட்டமாய்த் திரும்பியவர் காபி ஹோட்டலுக்குள் நுழைந்து அது இருக்கும் ஆரவாரத்தைப் பார்த்து, இவ்வளவுக்குச் செலவிட்டு இங்கு வந்து உண்பதற்கு இவர்களுக்கு எப்படித்தான் உத்தியோகம் கிடைத்துப் பணம் வருகிறதோவென்று ஏங்கி விகடனிடம் தன் வயிற்றைப் பிசைந்துகொண்டாராம்!

***

கல்யாணச் சுகம் எப்படியிருக்குமோவென்று ஒருவன் விகடனைக் கேட்க, விவாகத்திற்குக் கதி காணாத வரையில் அந்த சுகம் ஒரு பெரும் ஆவலும் எதிர்பார்ப்புமாய்த்தான் இருக்குமென்றும், விவாகம் செய்து கொண்ட பிறகோ அதை ஒரு கனமாக—பிரமாதமாக எண்ண நிலையில் சாமான்யமாய்ப் போய்விடுமென்றும் விடை யளித்தானும்!

***

புது நாகரீகத்தில் அநேகம் பெண்கள் பழய ஒப்பாரிப் பாட்டுகளை மறந்துபோனதால், அதற்கென்று ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் வைக்கவேண்டுமென்று பழங்காலத்துப் பாட்டிகள் பேசிக்கொண்டார்களாம்!

***

ஒரு பட்டிக்காட்டான் முதல் தடவையாக சென்னப்பட்டணம்வர, உடனே விகடன் அவனிடம் சென்று பெயர் விவரங்களையெல்லாம் குறிப்பிட்டுக்கொண்டதைப் பார்த்து விகடனைக் கேட்க, அதற்கு நீ வாயைத் திறந்தபடியே அண்ணாந்து பட்டணத்து சொகுசைப் பார்த்துக் கொண்டு போகையில் டிராம் வண்டியோ, மோட்டாரோ, வேறு வண்டியோ, உன்மீது ஏறிவிட்டால் உன் சொந்தக்காரர்களுக்குத் தந்தி கொடுக்வேண்டுமல்லவா; அதற்காகத்தான் இப்போதே பதிவுசெய்து கொண்டேனென்று பதில் சொன்னானும்!

---

குற்றத்தையே மெல்லும் துர்க்குணிகளுக்குக் கொஞ்சம் சந்து கிடைத்தால் போதும்; உடனே நீண்ட கடிதமோ பேச்சோ தொடங்கி விடுவர்.

## எக்காலக் கண்ணிகள்.

1. வற்றச் சமுத்திரம் போல்
வந்து பணம் சேர்ந்தாலும்
பற்ற தென்றேங்கி யின்னம்
பணம் சேர்ப்ப தெக்காலம்?

2. வட்டி வரவால் மகிழ்ந்து
வயிற்றைப் பாராட்டாமல்
பட்டினியுற் றனுலும்
பணஞ் சேர்ப்ப தெக்காலம்?

3. வைக்க விடமற்று வந்து
வாய்ப் பேச்சால் தந்தவரை
பக்குவமாய் எத்திப்
பணஞ் சேர்ப்ப தெக்காலம்?

4. இக்கட்டு வந்தாலும்
இல்லைஇல்லை யென்று சொல்லி
பைக்குள் கை வைக்காமல்
பணஞ் சேர்ப்ப தெக்காலம்?

5. எங்கும் லேவா தேவிசெய்
சீய்ந்து கூடப் பிறந்தப்
பங்காளி தன்னை எத்திப்
பணஞ் சேர்ப்ப தெக்காலம்?

6. மாங்கறி காய் நெய்யரிசி
வல் விறகு வாங்காமல்
பாங்குடனே கூழ்க் குடித்துப்
பணஞ் சேர்ப்ப தெக்காலம்?

[இப்படிச் சேர்க்கும் பணம் தான் சீக்கிரம் அழிகிறதாம்.]

### அது மனது ஒருமித்த சங்கதி! இது வேறுபட்ட மனதின் சங்கதி!!

பிள்ளைகள் தம் பெற்றோருக்கு எவ்வளவு வேலையானலும் வலிய ஓடிவந்து வெகு ஆவலுடன் செய்வார்கள். அவர்களுக்கு அது ஒரு பளுவாய்த் தோற்ருது. இப்படியே பெற்றோருக்கும் தமது பிள்ளைகளுக்கென்று பல வேலைகளையும் செய்வதில் ஒரு கஷ்டமாகப் படாது. மனது ஒருமித்துப் போன சங்கதியில் நேருகிற தன்மை இது. மற்றவர்க்கோ நாம் இடும் வேலை பளுவாக இருக்கும். நமக்கும் அவர்கள் சொல்லும் வேலை ஒரு சுமையாகப்படலாம். இது மனது வேறுபட்டுள்ளதின் சங்கதி. அன்பு உள்ளவரை எதுவும் கஷ்டமாகவும் பளுவாகவும் படாது. அன்பு கெட்ட பிறகோ?

*மனஸ்பூர்வமாய் உழைக்காமல், பொழுதே போ—காசே வா என்று கடியாரத்தைப் பார்த்துக்கொண்டு வேலை செய்யும் எவனும் முன்னுக்கு வர முடியாது. அவன் மாதத்துக்கு ஒரு கடையாய் ஒரு வேலையாய் மாறுவான்.*

*ஆங்கிலம் பேசுவதிலும் எழுதுவதிலும் திறமையும் ஒருவிதமான நாகரீகப் பகட்டும் நம்மவர்க்குண்டேயன்றி, பம்பாய்க்காரரைப்போல அறிவும், அநுபோகமும் உலக விவகாரங்களில் திறமையும் இல்லை யென்கிருர் ஒருவர்,*




# மனம் தளரேல்.

ஏதுக்கு மனந்தளர்தல் எதற்கு மனந்தளரோம் [வோம்
இனித்தளர்ந்து பயனென்ன எதிர்வலிமை கொள்
வாதுக்கு வருபவைகள் வருகவெனச் சொல்வோம்
மறவுறுதி கொள்வோமுன் வந்த துன்பமெல்லாம்
சாதித்துக் கொண்டிலமோ சகித்து மிருக்கிலமோ
சஞ்சலத்தி னைந்ததற்குச் சங்கியையு முண்டோ
நீதிக்குக் கரைந்துருகி நெடுங் கண்ணீருகுத்தோம்
நெஞ்சுறுதிகொண் டெதையும் நின்றியற்றுவோமே.

2

தருமநெறி தவிர்கிலோம் சத்யமொழி பிசகோம்
தவறுக நடவோமெச் சனர்க்கு நலஞ்செய்வோம்
உரியபசிப்பிணி தீர்க்க வொருவரகஞ் செல்லோம்
உற்றாரை எந்நாளு முடன்கொண்டு வாழ்வோம்
ஒருவரையும் புறங்கூற முலுத்த குணம்பற்றோம்
ஒருதீங்கு புரிவோர்க்கும் பலநன்மை செய்வோம்
அருமையுட னடைக்கலமாய்க்கொடுத்த பொருளதனை
ஆயிரநாள் சென்றாலும் அறக்கொடுத்துத்தீர்ப்போம்.

3

செலவுகளெத்தனைமிகினும் சிக்கனமாய்ச்செய்வோம்
சிறியவரவெனினுமதிற் சிலகாசு மிகுப்போம்
உலைவுதருக்கடன்படினும் உடன்கொடுத்துத் தீர்ப்போம்
உன்னாதசிறைபுகினும் உறுதிவிட மாட்டோம்
அலகைதனை யெதிர்த்தடிக்கும் ஆற்றல் படைத்திடுவோம்
அடுபகைவரெனினுமவர் அடிவணங்க மாட்டோம்
வலுவின் மதியாதவர்கள் வாசல்வழிச் செல்லோம்
மனது தளரோமென்ன வரினு மேற்போமே.

**4**

நமதுநலம் பெற்றவர்கள் நம்மை எதிர்த்தாலும்
நாமவர்க்கு மேன்மேலும் நலம்புரிந்து நிற்போம்
அமையு மயல்மடவார்கற் பகலமனங்கொள்ளோம்
அடைக்கலமென்றோர் தம்மையாதரிக்கத் தவறேம்
சமயமதிற் கழுத்தறுக்குஞ் சண்டியரைச் சேரோம்
தாராளச் சிந்தையுள்ள சற்குணர்க் குத்தாழ்வோம்
எமையீன்ற புவிமடந்தை ஈன்ற மக்களெல்லாம்
எந்துணைவரெஞ்சாதி யெம்மதமென்போமே.

**5**

ஒருவரவு போயினுமற் றொருவரவைத் தரவும்
ஒருதுயரைத்தருகினுமற் றொருமகிழ்வைப்பெறவும்
அரியபொருளாகிநமை யாண்டருளுமீசன்
அருகிருக்க யாவுமவன் அறியாது நடவா
உரிமைதரு கவலைநமக் கொருநாளும் வேண்டாம்
ஒருபயனுங்கருதாம லுறுகருமஞ்செய்வோம்
பெருமைதருமுலகிலுடல் பெற்றதற்குத்தக்க
பேறுபெறப்பணிபுரியில் பெருமைதருமன்றே.

### அது உண்டு, இது இல்லை!


சச்சரவு உண்டு, ஆனால் பிரிகிறது இல்லை. பிரியவும் மனம் வராது. இது யாருக்கு? ஸதிபதிகளுக்கு. இன்னும் யாருக்கு? அக்கா தம்பிக்கு. அககாவைக் காணுதவரை தம்பி சோர்ந்து கிடக்கிறுன். இப்படியே தம்பியைக் காணுத வரையில் அக்காவுக்குப் பொழுது போகிறதில்லை. இருவரும் ஒன்றுகூடிவிட்டாலோ ஒரு துள்ளு துள்ளிக்குதிக்கிறுர்கள்! உடனே அடுத்த நிமிஷம் ஒரு சிறு சண்டை! அதற்குப் பிறகு மறுபடியும் உறவு. இப்படியே பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமாம்! எவ்வளவோ சச்சரவு! பிறகு எவ்வளவோ உறவு! சச்சரவே இல்லாதிருக்க முடியாதா?

---

சைகிலை விட்டுக் கீழே இறங்காமல் ஓட் [illegible] ஒரு கௌரவம் இருக்கிறதென்று தலை துள்ளுகிறுர்கள்!

K. V. NATARAJAMANI
367, EIGHT STREET,
PERUMAL KOVIL MEDU,
SEELANAICKANPATTY
SALEM 636 201.

# பிரபஞ்சதரிசனம்



தமிழ்ப் புது வருஷப் பிறப்பை முன் நாட்களில் கொண்டாடியது போல் இப்பொழுதும் அவ்வளவு வைபவமாக அதைச் சிறப்பிக்கவேண்டும். இவ்விதமே பண்டிகை, விரத நோன்புகளையும் நம் பூர்வீகர்களைப் போல் பொருளறிந்து அநுபவித்து, அதனால் தங்களுக்கு ஒரு புது சக்தியை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். என்ன காரணத்தாலோ, ஹிந்துக்களிற் பலர் தங்கள் பழய நாகரீகத்தின் இயற்கையையும், அதைக் குறிக்கும் ஸ்தாபனங்களையும் முன்போல் கௌரவப்படுத்துகிறவர்களாயில்லை. தற்கால ஐரோப்பிய ஆபாஸங்களால் இந்தியாவின் இயற்கையான கலைகள் அழிந்து போகின்றன. ஹிந்து பண்டிகைகளின் கருத்தும் நோக்கமும் இக்காலத்து ஹிந்துக்களுக்கே நன்றாய்த் தெரியவில்லை. இவைகளிற் சில மத சம்பந்தமாயும், வேறு சில ஸமூக க்ஷேம ஸம்பந்தமாயும் கருத்தும் நோக்கமும் கொண்டன. வருஷத்தில் பன்னிரு மாதங்களிலும் ஒவ்வொரு குறித்த விசேஷமிருப்பதோடு விரத நோன்புகளும் அத்துடன் தொடர்ந்து பரிமளிக்கின்றன. இப்பண்டிகைகளும், அவைகளைக் கொண்டாடுவதும் ஹிந்துக்களுக்குரிய விசேஷங்கள். வேறு எந்த ஜாதியும் எத்தேசத்தினரும் தமிழ் வருஷப் பிறப்பையும், தமிழர்களின் பண்டிகைகளையும் கொண்டாடுவதில்லை. ஆகையால் இவைகளின் கொண்டாட்டம் ஹிந்து ஜனங்களின் ஐக்கியப் பெருக்கத்தையும் ஜாதி யபிமானத்தையுமே வளர்க்கும் இயல்பு கொண்டனவாயிருக்கின்றன. இப்பண்டிகைகளிற் பலவற்றைத் தற்காலம் வீட்டுக்குள் அந்தந்தக் குடும்பங்கள் சொந்தமாய்க் கொண்டாடுவது வழக்கமா யிருக்கின்றது. இந்த வழக்கத்தை நாம் மாற்றவாவது, கைவிடவாவது கூடாது. அத்துடன் இந்தப் பண்டிகைகளின் நாட்கள் வரும்போது ஜனங்கள் பொதுக் கூட்டங்கள் கூடி அவைகளின் விசேஷக் கருத்துகளையும் நோக்கங்களையும் பற்றிப் பிரஸங்கங்கள் செய்து ஒரு திருவிழா நாள்போல் பாராட்டி, அன்று மிக்க உல்லாசமாய்க் காலம் போக்கப் பிரயத்தனிக்க வேண்டும்.

***

பிரதி அமாவாசைக்கும் சில ஊர்களில் வர்த்தகர்கள் மத்தியானத்திலிருந்து கடைகள் யாவற்றையுமே மூடி விடுகிறார்கள். அது ஒரு விசேஷ ஒற்றுமை தான். ஆனால் அத்துடன் விட்டுவிட வொண்ணாது. மாலை நேரத்தில் ஒரு பொது இடத்தில் எல்லா வர்த்தகர்களும் அவர்களின்

---

கையாலாகாதவர்கள் தங்களால் முடியாத காரியத்திற்கு எதிலெதிலோ குற்றத்தை ஏற்றுகிறார்கள். சிலர் முடியாதென்று சொல்லாமலே ஏமாற்றி விடுகிறார்கள்.

வேலையாட்களும் ஒன்று கூடி வர்த்தகப் பெருக்கைப்பற்றியும், அமாவாசையின் விசேஷத்தைப்பற்றியும், தங்களின் அபிவிர்த்திகளைப்பற்றியும் பிரஸங்கங்கள் நடத்திப் பரவசப்பட வேண்டும். இப்படிக் கூடும் பொதுக் கூட்டங்களின் தொகையை நாளடைவில் பெருக்கி அதிகப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் பண்டிகை விரத நோன்புகளைக் கொண்டாடுவதில் உண்மையான அர்த்தமும், சக்தியும் ஏற்பட்டு, தேச முற்போக்குக்கான யுக்தியும் தொடர்ந்து கொண்டு பிரகாசிக்கும். ஹிந்துக்கள் மட்டுமல்ல, மற்றவர்களும் கூட தங்கள் ஜாதியின் ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் இப்படிச்செய்வது அவசியமென்று உணர்ந்து கொண்டாட வேண்டும். எந்தக் கொண்டாட்டத்திலும் கூட்டங்கள் கூடிப் பிரஸங்கங்கள் செய்தலாகிய ஒரு புதுச் சரக்கை அத்துடன் சேர்த்து விட்டால் தான் அதன் சிறப்பு அதிகப்பட்டுப் புது ஜீவனும் உண்டாகும். இவ்விதமே ஒவ்வொரு பண்டிகைகளின் கருத்தை யறிந்தும், பிரஸங்கங்கள் மூலம் அறிவித்தும் அவைகளைக் கொண்டாட வேண்டும். ஹிந்து ஜனங்களின் க்ஷேமத்திலும் முற்போக்கிலும் அபிமானம் வைத்திருக்கும் அனைவரும் ஹிந்துக்களுக்கு விசேஷமாய் உரிய வழக்கங்களைக் கைவிடாமல் காக்க வேண்டிய தவசியம். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் இவர்களும் இப்படியே தங்கள் வகையிற் செய்ய வேண்டும். நம்முள் அநேக தீய வழக்கங்கள் இருக்கின்றன. நம் பழய வழக்கங்களில் நல்லவைகளைக் காப்பது அவசியமென்பதை உணர்ந்து முயல்வோமானல் அதிலிருந்தே அத்தீய வழக்கங்களையொழிப்பதும் நமக்கு வெகு சுலபமாகி விடும்.

***

இங்கிலாந்து தேசம் சுதந்திரத்துக்காக எவ்வளவோ பாடுகள் பட்டிருக்கின்றது. எவ்வளவோ பொறுத்தும் காத்தும் இருந்திருக்கிறது. 98-வருஷங்களுக்கு முன் இங்கிலாந்திலேயே அநேகம் ஊழல்கள் இருந்தன. அங்குள்ள மந்திராலோசனை ஸபைகளில் (House of Lords) பிரபுக்களின் சபையென்றும், (House of Commons) பொதுஜனப் பிரதிநிதிகளின் சபையென்றும் இரு மஹா சபைகள் உண்டென்பதை யாவரும் அறிவர். அதில் பொதுஜனப் பிரதிநிதிகளின் ஸபையிலுள்ள அங்கத்தினர்களை (Members) அங்குள்ள ஜனங்களே நியமிப்பதும் வழக்கம். இவ்விதம் நியமிப்பதில் பல ஊழல்கள் இருந்தபடியால், சில பலத்த மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று 1831-ம் வருஷத்தில் ஜனங்கள் முயன்றார்கள். எப்படியெனில், ஜனப்பிரதிநிதி ஸபையானது எல்லா ஜனங்களிடத்தும் பொறுப்புள்ளதாயிருக்க வேண்டும். அதாவது ஆங்கிலேய நாட்டின் மஹா ஜனங்கள் எல்லாருடைய பிரதிநிதிகளும் அந்த மஹா ஸபையில் இருக்க வேண்டும். அதை விட்டு மிகவும் அற்பமான ஊர்கள் அநேகங்களிலிருந்து பிரதிநிதிகளை அதிகமாகப் பொறுக்கியும், வியாபாரம் முதலியவற்றால் உலகப் பிரவித்தியான சில ஊர்களிலிருந்து பிரதிநிதிகளையே பொறுக்காமலும், பிரதிநிதிகளைப் பொறுக்கும் யோக்கியதையுடைய எல்லோருமே அப்படிப்

---

பேசுவதெல்லாம் அமிர்தப்பேச்சு; செய்வதெல்லாம் விஷமச்செய்கை; போடுவதெல்லாம் பணத்திமிர் பிடித்துவிட்ட வேஷம்; வாங்கிய கடன்களையோ திருப்பித் தந்து அறியாத அத்தனை நாணயஸ்தர். ஆஹாஹா ஹா!

பொறுக்க இடமில்லாமலும் மஹா ஊழலாயிருந்தது. ஆதலால், அநேகரை அந்த ஸபையிலிருந்து எடுத்து விட வேண்டுமென்றும், சிலரைப் புதிதாகப் பொறுக்கி ஸபையில் சேர்க்க வேண்டுமென்றும், வருஷமொன்றுக்குப் பத்து பவுனுக்குக் குறையாமல் வரி செலுத்தும் யாவரும் அந்த ஸபைக்குப் பிரதிநிதிகளைப் பொறுக்கும் அதிகாரம் பெற வேண்டுமென்றும் ஜனங்கள் தீர்மானித்தார்கள்.

***

அப்பொழுது பார்லிமெண்டு மெம்பர்களாயிருந்தவர்கள் இந்த எண்ணத்தையே பரிஹாஸம் செய்தார்கள். ஸபையார் ஏழு நாட்கள் வரையில் இவ்விஷயத்தைப்பற்றித் தீர்க்காலோசனை செய்தனர். பிரபுக்கள் ஸபையாரோ (Lords) இதனால் ராஜ்யம் சீர்குலைந்து விடுமென்றும், தனவான்களும் மேலான ஜாதியில் உள்ளவர்களும் கௌரவக் குறைவு அடைய இடமாகுமென்றும் மறுத்து விட்டார்கள். இதிலிருந்து இரண்டு பிரிவுகள் தோன்றின. அரண்மனையாரும், பிரபுக்கள் ஸபையாரும், பாதிரிகளும், ராணுவத்தாரும், கப்பற் படையாரும், கலாசாலைகளும் ஒரு பக்கமாக மாறுதல்களுக்கு விரோதமாய் நின்றார்கள். மற்ற எல்லாப் பொது ஜனங்களும் வியாபாரிகளும் ஒரு பக்கமாக மாறுதல்கள் வேண்டுமென்று நின்றார்கள். கடைசியில் பார்லிமெண்டு ஸபை கலைந்து விட்டது. அதற்குப் பிரதிநிதிகள் மறுபடியும் தெரிந்தெடுக்கப் படுகையில் ஜனங்களின் கோரிக்கையைக் கவனிப்பதாய் ரகசியமாய்ப் பிரதிநிதிகள் வாக்குறுதி கொடுத்தனர். புதுச்சபை கூடியதும், மறுபடியும் இந்த விஷயம் ஆலோசனைக்கு வந்தது. ஐந்து நாள் வரையில் நன்றாய் யோசித்துக் கடைசியில் தள்ளிவிட்டார்கள். உடனே ஜனங்களின் கிளர்ச்சி பெருகி விட்டது. 60000-பொது ஜனங்கள் சேர்ந்து அரசரிடம் நேரிற் சென்று தமது நன்மைக்காக வாதாடினார்கள். வரிகள் தரவும் மறுத்தனர். கடைசியில் மூன்றாந் தடவையில் 1832-ம் வருஷத்தில் மேற்சொல்லிய மாறுதல்களை அரசாங்கத்தார் ஒப்புக் கொண்டார்கள். இவ்வாறாக வெகு பாடுபட்டு இங்கிலாந்தின் ஜனங்கள்சுதந்தரம் அடைந்தனர்.

***

சிம்மளத்தீவு (Ceylon—ஸிலோன்) காடுகளும் மலைகளும் நதிகளும் தோப்புகளும் நிறைந்து வெகு விநோதக் காட்சி தருவதாகும். அந்தத் தீவில் கடலோரமெல்லாம் தென்னஞ் சோலைகள் அநேகமாய்ச் செழித்தடர்ந்திருக்கின்றன. உள் நாட்டில் செல்லச் செல்ல, தென்னஞ் சோலைகள் அருமையாகிப் பனங் காடுகள் விசேஷமாய்க் காணப்படுகின்றன. அத்தீவின் நிலைமையானது வர்த்தகத்திற்கு நன்றாய்ப் பொருந்திய இடம். கிழக்கே சீனா முதலிய தேசங்களிலிருந்து கடல் மார்க்கமாய் மேல் தேசங்களுக்குப் போக வேண்டியிருந்தாலும், ஐரோப்பா முதலிய மேல் தேசங்களிலிருந்து கீழ்த் தேசங்களுக்கு வர வேண்டியிருந்தாலும் எல்லாவற்றிற்கும் இது மத்தியஸ்தானமாயிருக்கின்றமையால், அந்தத் தீவைக் கடவுள் வர்த்தகத்திற்கென்றே படைத்திருக்கலாமென்று தோன்றுகிறது.

***

இப்படி மேன்மை பெற்று விளங்கா நின்ற சிம்மளத்தீவிலே புத்த தேவாலயங்கள் அநேகமிருக்கின்றன.

---


அது குற்றம் பாவம் என்று அச்சமுற்று விலகுவோர் சிலரினும் சிலரே. தண்டனைக்கும் பழிக்கும் பின்வாங்கி அதற்கு ஒதுங்குபவரே பலராவர்.

அவை மிகவும் மேம்பாடாய் அமைத்துக் கட்டப்பட்டவைகள். அந்தத் தீவில் புகுந்த மாத்திரத்திலேயே இது பௌத்த தேசமென்று நமக்கு நன்ருய்ப் புலப்படும். அத்தேசத்துக் குடித் தொகையில் பௌத்தர்களே அதிகம். பௌத்த மடங்களும் அநேக முண்டு. அவைகளில் பௌத்த மத சம்பந்தமான பல மதக் கிரந்தங்களும், நிகண்டு முதலிய பற்பல நூல்களும் விசேஷமாய் அகப்படும். சிம்மளத்தீவிலாகட்டும், பர்மாவிலாகட்டும், திபெத்திலாகட்டும், இன்னும் எந்தத் தேசத்திலாகட்டும், பௌத்தர்கள் தாங்கள் குடியேறுகிற இடமெல்லாம் தடாகம் தோப்பு முதலியவைகளால் செழித்த இடங்களாய்ப் பார்த்து, அங்கங்கே மேம்பாடான கட்டட வேலைப்பாடுகள் அமைத்து தேவாலயப் பிரதிஷ்டை செய்வதில், தங்களுக்கு விசேஷாபிமான முண்டென்பதை நன்ருய்க் காட்டியிருக்கிருர்கள். இப்படிப் பல தேசங்களிலும் பலவாய்ப் பரவியிருக்கின்ற புத்த தேவாலயங்களின் உன்னதத்தை விளக்க ஒரு ஆலயத்தின் படத்தை இதற்கு அடுத்த பக்கத்தில் சேர்த்திருக்கிருேம். இது சிம்மளத் தீவிலுள்ள புத்த தேவன் கோயில்களி லொன்று. புராதன காலத்து இந்தியர்கள் எவ்வளவு தூர நாடுகளுக்கெல்லாம் சென்று செல்வாக்குடன் வாழ்ந்தார்களென்பதைப் பௌத்த சரிதம் நன்கு விளக்கும்.

அன்பு மாறிவிட்டவர்களின் மனதுக்குத் தகுந்தபடியே, அவர்கள் நம் வீட்டுக்கு வரும் சமயம் உபசரிக்க நினைத்தும், ஒரு அவசர வேலையில் நாம் வேறு ஊருக்குப் போய்விட நேர்கிறது. அவர்கள் நமது ஊர் மார்க்கம் போகையில் ரயிலுக்குச் சென்று காண நினைத்தும் முடியாமலாகி விடுகிறது. ரயிலும் தப்பி விடுகிறது. மனம் மாறியதற்குத் தக்கபடி யாவும் நிகழ்கிறது. குழந்தைகளை காணவேனும்வரக்கூடாதா? வருவதில்லை

## மறுபிறப்பு வேண்டாம்.

எடுத்த இந்த ஜென்மத்துப் பாடு இவ்வளவு போதும். இனியும் மறுபிறப்பு வேண்டாம். கடன் தீர்க்காதிருந்தால் மறுபிறப்பு வரும். ஒருவர் மறதியாய்த் தந்துவிட, அவரை ஏமாற்றி அதைக் கொண்டுபோய்விடின் மறுபிறப்பு வரும். பிறருக்குச் சுமையா யிருந்தால் மறுபிறப்பு வரும். சத்தியம்—தர்மம் மீறி எதைச் செய்தாலும் மறுபிறப்பு தோன்றிவிடும். ஓர வஞ்சகம் செய்தால், நீதி தவறினல், பார பக்ஷமாய் நடந்தால் மறுபிறப்பு நிச்சயமே. மறுபிறப்புத் துன்பம் வேண்டாமெனில் அதற்குத் தகுந்தபடி தூய்மையோடு தினமும் நட.


ஸிம்மளத்தீவில்
உள்ள
புத்த தேவாலயம்

# ரகர—றகர பேதங்கள்.

(3வது கமலம் 680-ம் பக்கத் தொடர்ச்சி.)

57. **காரல்**—ஓர் மீன், **காறல்**—காறுதல். (57) கடற்காரலைத் தின்று அன்றெல்லாம் காறிக் கொண்டே யிருந்தான் சங்கரன்.

58. **காரு**—செய்வோன், **காறு** கொழு. (58) உழுதொழில் 'கார'ருக்கு இரும்பில் செய்த காறு நல்லதாம்.

59. **கிரி**—மலை, **கிறி**—பொய். (59) கிரியில் ஏறுகையில் அவனைப் பற்றி நீ சொன்னது கிறி தானே?

60. **குரங்கு**—வானரம், **குறங்கு**—தொடை. (60) குரங்கு வந்து அவன் குறங்கைக் கவ்விற்று.

61. **குரஞ்சி**—ஓர் இராகம், **குறஞ்சி**—செம்முள்ளி. (61) ஒரு கொழுத்த பயல் குரஞ்சி பாடிக் கொண்டும், குறஞ்சிக் காட்டில் போய்த் திரிந்துகொண்டு மிருந்தான்.

62. **குரத்தி**—தலைவி, **குறத்தி**—குறிஞ்சி நிலப் பெண். (62) இந்தப் பெண் படைகளாகிய குறத்தியர்களுள் குரத்தியர் யார்?

63. **குரம்**—பசு, **குறம்**—ஓர் சாதி. (63) பஞ்சகவ்வியங்களைத் தரும் குரப்பெருமையை நரித்தோலுடன் திரியும் குறம் அறியுமோ?

64. **குரவர்**—குருக்கள், பெரியோர்; **குறவர்**—வேடர். (64) குறவரும் அவர்கள் குரவர் முதலியவர்களும் வேட்டைக்குப் புறப்பட்டார்கள்.

65. **குரவை**—கடல், **குறவை**—ஓர் மீன். (65) நான் சிங்கப்பூருக்கு என் பிராண திலகத்தைக் காணப் போகுங்கால் ஓர் பெருங் குறவை குரவையினின்று எழும்பிற்று. அதைக் கண்டு திடுக்கிட்டேன்.

66. **குருமை**—பெருமை, **குறுமை**—பாவம். (66) குருமை காட்டுவது குறுமை.

67. **குரை**—குதிரை. **குறை**—குற்றம். (67) கடிவாளம் அறுந்த குரையின்மீது ஏறியது அவன் குறை. அதனால்தான் கீழே விழுந்தான்.

68. **கூரல்**—வீட்டுக்கூரை, **கூறல்**—விற்றல். (68) கூரலைக்கட்டி வைத்துக்கொண்டு, கட்டு ஒரு பணமென்று கூறுகிறான் வேடன்.

69. **கூரை**—வீட்டுக்கூரை, **கூறை**—சேலை. (69) கூரை பற்றிக் கொண்டு எரிகையில் உள்ளிருந்த கூறையும் தீக்கிரையானது.

70. **சக்கிரம்**—சக்கராயுதம், **சக்கிறம்**—அத்திமரம். (70) வில் வேடன் சக்கிரத்தினால் சக்கிறமரத்தில் எய்து ஓர்பழம் விழக்காட்டினன்.

71. **சக்கிராங்கி**—ஓர் புள், **சக்கிறங்கி**—கடுகுரோகணி. (71) சக்கிராங்கிக்கு வலிப்புவந்தால், சக்கிறங்கி அரைத்து வாயில் ஊற்றினால் அது நீங்கும்.

72. **சாரு**—கிள்ளை, **சாறு**—கள். (72) ஆலத் தோப்பிலுள்ள சாருகள் அதனிடத் திருக்கும் சாற்றைக் குடித்துக் களித்திருக்கின்றன.

73. **சிரத்தல்**—அழித்தல், **சிறத்தல்**—சிறப்பு. (73) தங்களின் பெயர் சிறத்தலை விரும்புவோர் சுயநலத்தைச் சிரத்தல் நன்று. (தொடரும்.)

---

மறைந்து நின்று பெண்களைக் கவனிப்பாரை நாமும் அதை அறியாதவர் போல் நின்று அவரைக் கவனித்து வீட்டுக்கு வராதபடி விலக்கவேண்டும்.




**சில விநோத ஸம்பவங்கள் :—**கி. பி. 1568-ம் வருஷம் ஆண்ட் யூரா என்னும் ஊரில் கோதுமை நிலங்கள் அறுவடை யாகும்பொழுது கதிர்களெல்லாம் ரத்தமயமா யிருந்ததாம். 1634-ம் வருஷம் ஜெர்மனி தேசத்தில் வூர்டம்பர்க் என்னுமிடத்தில் கந்தகமும் சாம்பலுமாய் மழை பெய்ததாம். 1361-ம் வருஷம் பர்க்கண்டி என்னும் ஊரிலும் 1322-ம் வருஷம் ரோமாபுரியிலும் ரத்தமழை பெய்ததாம். 1695-ம் வருஷம் ஐர்லந்து தேசத்தில் டிப்பரெரி என்னும் இடத்திலும் லிமெரிக் என்னுமிடத்திலும் வெண்ணெய் மாதிரி கருப்பு. மஞ்கள் வர்ணங்களுடைய ஒருவித லேகியம் ஆகாயத்திலிருந்து சரமாரியாய் விழுந்ததாம். அதை வழித்து தேஹத்தில் ஜனங்கள் தடவிக்கொள்ள அநேக வியாதிகள் ஸ்வஸ்தமாயிற்றாம். இதையெல்லாம் வாசிக்கும் பொழுது, காரைக்காலுக் கடுத்த திருமலைராயன் பட்டணத்தில் காளமேகப் புலவர் ஆக்ஞையின்படி மண்மாரி பெய்ததாக நம் பெரியோர்கள் சொல்லும் கதையும் நம்பும்படியா யிருக்கிறது.

**சித்திரம் எழுதும் வர்ணங்கள் உற்பத்தியாகும் விதம் :—**தம்பல பூச்சியிலிருந்து எல்லாவித 'சிவப்பு' வர்ணங்களையும் எடுக்கிறார்கள். கணவாய் மீனைத் துரத்தும் பொழுது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு சாம்பல் வர்ணமான பொருளை தன் தேஹத்திலிருந்து வெளியாக்கி ஜலத்தில் கரைத்து அந்த சமயத்தில் மறைந்து கொள்ளுமாம். அந்தக் கலங்கின ஜலத்தை எடுத்து காய்ச்சி ஸெபியா என்னும் வர்ணத்தை எடுக்கிறார்கள். 'இந்திய மஞ்சள்' என்னும் வர்ணம் ஒட்டகையிலிருந்து உண்டாகிறது. தந்த செதின்களிலிருந்து 'கருப்பு' வர்ணம் உண்டாகிறது, குதிரை குளம்பிலிருந்து அழகான 'நீல' வர்ணத்தை இறக்குகிறார்கள். கொடிமுந்திரியின் தண்டிலிருந்து 'ப்ளூப்ளாக்' என்னும் வர்ணத்தை இறக்குகிறார்கள், இந்தியாவில் வளரும் இம்பூரல் என்னும் செடியிலிருந்து 'துருக்கி சிவப்பு' என்னும் வர்ணத்தை எடுக்கிறார்கள். இடாலி தேசத்து வீனா என்னும் ஊரின் மண்ணிலிருந்து 'வியன்னா' என்னும் வர்ணத்தை எடுக்கிறார்கள். கர்பூரத்தைக் கொளுத்தி அதிலிருந்து 'இந்தியன் இங்க்' என்னும் வர்ணத்தை எடுக்கிறார்கள். பவளமனோ சிலையிலிருந்து 'ஜாதிலிங்கம்' என்னும் வர்ணத்தை எடுக்கிறார்கள். துத்தநாகத்திலிருந்து 'வெள்ளை' வர்ணத்தை எடுக்கிறார்கள்.

---

மகாத்மா காந்தி என்று மகாத்மாவைத் துதிப்போருள்கூட கேடுகெட்ட கல்மனதுள்ளவர்களும், சுயநலதந்திரிகளும் எவ்வளவோ பேர் உண்டு. ஆயினும் இவர்களின் மனத்திலெல்லாம் சொற்பநேரமாவது ஒரு பிரகாசத்தை மகாத்மாவின் நாமம் உண்டுபண்ணுகிறதே ! அது ஒருபெரிய மகிமைதான்.

எந்தக் கடை வியாபாரி உன் பாக்கித்தொகை அதிகமாய்விட்டதே என்று அதிர்ப்திபடுகிறாரோ, அந்த நம்பிக்கை யற்றவரின் கடன் பாக்கியை முதலில் தீர்த்துவிடு. அதுவே கௌரவப்படுத்தித் தலை நிமிரச் செய்யும்.

# ஞானமிர்தம்

(3-வது கமலம் 657-ம் பக்கத் தொடர்ச்சி.)

‘ முமுக்ஷு ’ எழுதியது.

10. ஏற்ற பதில்:—இகலோக போகங்களில் ஈடுபட்டு மிகவும் குதூஹல மாகக் காலங்கழித்துவந்த ஒரு தனவான், ஒருதினம் மிகவும் அலட்சியமாக, தன் நண்பரிடம் ‘வேதாந்த சாஸ்திரம் மிகவும் அழகாயிருக்குமென்கிறார்கள். ஆனால் எனக்கு அதில் பற்றுதலே இல்லை’ என்று கூறிச் சிரித்தார். அந்த நண்பர் உடனே ‘வேதாந்தத்தில் பற்றுதலேற்படும்படி உங்களுக்கு என்ன கஷ்டம் சம்பவித்துவிட்டது?’ என்றார். மாயைக்குட்பட்ட இகலோக போகங்களில் மதிமயங்கிக் கிடப்பவர்களுக்கல்ல வேதாந்தம்; அவைகளின் மீது விரக்தி ஏற்பட்டவர்களுக்கே அதில் பற்றுதல் தோன்றும்.

11. மானஸ பூஜையின் மகத்துவம்:—ஓர் அரசன் மகாவிஷ்ணுவிடம் பயபக்தி உடையவனாக இருந்தான். அவன் விஷ்ணு ஆலயம் ஒன்று கட்டி, அதற்குக் கும்பாபிஷேகம் செய்யும் பொருட்டு ஏராளமான பணத்தைச் செலவிட நிச்சயித்திருந்தான். அவன் இராஜ்ஜியம் முழுவதிலும் அதைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. பிரஜைகள் யாவரும் அரசனுடைய பக்திப் பிரபாவத்தை வியந்து புகழ்ந்தனர். அதன்பயனாக அரசன் மனதில் கர்வம் கொஞ்சம் உண்டாய்விட்டது. கும்பாபிஷேகத்திற்கு முந்திய இரவில் மகாவிஷ்ணு, கனவில் அவன் முன் தோன்றி, ‘ஓர் ஏழைக் குடியானவன் தன் ஹிருதயத்தில் ஒரு கோயில் கட்டி அதில் என்னை ஆவாஹனம் செய்யப்போகிறான். அந்தச் சடங்கும் நாளைதினம்தான் நடக்கப்போகிறது. ஆதலால் அந்த பக்தனை விட்டுவிட்டு, உன் கோவிலில் நான் பிரசன்னமாகமாட்டேன். உன் கும்பாபிஷேகத்தை வேறு தினத்தில் நடத்துவாயாக’ என்று கூறி மறைந்துவிட்டார். அரசன் விழித்துக்கொண்டு ‘ஆகா! நம்முடைய சலவைக்கல்லால் கட்டிய கோயிலைக் காட்டிலும், குடியானவனுடைய ஹிருதயமாகிய கோயிலன்றோ பகவானுக்கு சிரேஷ்டமாகத் தோன்றிவிட்டது! மனது கலந்து வழிபடுகிற மானஸ பூஜையின் மகிமையே மகிமை! இந்த வெளியாடம்பரங்களையெல்லாம் பகவான் சிறிதும் வேண்டுவதில்லையே!’ என்று கூறித் தெளிந்து, தன்கர்வத்தை விட்டொழித்தான்.

12. யாவும் கடவுளே:—ஒருநாள் கபீர்தாஸர் ஒரு ரொட்டித் துண்டையும் ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் நெய்யையும் வைத்துக்கொண்டு, சாப்பிடப் போகும் தருணத்தில், ஒரு நாய் அங்கு வந்து ரொட்டியைக் கவ்விக்கொண்டு போய்விட்டது. கபீர்தாஸரோ சிறிதும் தயங்காமல், நெய்க் கிண்ணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு நாயைப் பின்தொடர்ந்து சென்று, ‘பகவானே! ரொட்டித் துண்டு காய்ந்துகிடக்கிறது! நெய் இல்லாமல் உட்

---

தன் வீட்டுக்குள்ளே தான் காணும் முகமெல்லாம் தன் மனைவியைச் சேர்ந்தவர்களே. தன் பெற்றோர் உடன்பிறந்தார் வகையினராய் எந்தக் குஞ்சையும் காணோமே என்கிறார் ஒரு சம்சாரி.

கொண்டால் அது ருசிக்காது. தயவுசெய்து இந்த நெய்யையும் சேர்த்துக் கொண்டு அதை உண்ணவேண்டும்' என்று கூறி, நாய்க்கு உணவூட்டிவிட்டு, தான் பட்டினியாகவே இருந்துவிட்டார். அவருக்கு நாயும் கடவுளாக இருந்தது! என்ன அரிய ஞான முதிர்ச்சி! இதல்லவோ பக்குவத் தன்மை.

13. **பகவத் பக்தியின் பலன்:**—இரண்டு நண்பர்கள் ஒரு சாலை வழியே சென்றுகொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் மதப்பற்றுடையவன்; மற்றவன் நாஸ்திக சிகாமணி. வழியில் ஒரு பாழடைந்த கோயிலை அவர்கள் கண்டனர். பக்தியுள்ள மனிதன் அக்கோயிலைப் பிரதக்ஷணம் செய்து வந்தான். மற்றவன் சாலையிலேயே நின்றுவிட்டான். ஆனால் பிரதக்ஷிணம் செய்தவனுடைய காலில் ஒரு நீண்ட முள் தைத்து, இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. நாஸ்திகனுக்கோ சாலையில் ரூபாய் நாணயம் ஒன்று அகப்பட்டது. உடனே நாஸ்திக மனிதன் தன் அதிருஷ்டத்தைப்பற்றியும், கோயிலைச் சுற்றியதால் மற்றவனுக்கேற்பட்ட துன்பத்தைப்பற்றியும் பிரசங்கம் புரிந்தான். பக்தனுக்கும் மனம் தளர்ந்துவிட்டது. 'கடவுள் ஒருவர் இல்லையென்பது திண்ணம். இல்லாவிடில் இத்தகைய அர்த்தமற்ற காரியங்கள் நேருவானேன்?' என்று அவன் கூறிக்கொண்டான். நல்ல வேளையாக அந்த சமயத்தில் ஒரு ரிஷி அங்கு தோன்றி, இந்த சங்கதியைக் கேட்டறிந்தார். அவர் உடனே நாஸ்திகனை நோக்கி, 'அப்பா! உன் கர்மத்தின் பயனாக இத்தருணத்தில் உனக்கு ஒரு புதையல் கிடைத்திருக்கவேண்டும். ஆனால் உன் பக்தியின்மையால் ஒரு ரூபாய் மட்டுமே உனக்குக் கிடைத்தது. உன் நண்பனுக்கோ இந்த வேளை மிகவும் பொல்லாதது. அவனை ஒரு பாம்பு கடித்திருக்கவேண்டும்; ஆனால் அவன் பக்தி காரணமாக, இச்சிறு துன்பமே அவனுக்கு நேர்ந்தது. கடவுளுடைய செய்கைகள் யாவும் நமக்கு அர்த்தமாகா. மேற்போக்காக நோக்கும்பொழுது அவை முரண்படுவதாகத் தோன்றினாலும், கடவுள் காரணமின்றி எதையும் செய்யமாட்டார். அவருடைய ஒவ்வொரு செய்கையும் ஆழ்ந்த கருத்தைக்கொண்டே இருக்கும். மேலும் அவரைப் பக்திபண்ணுகிறவர்களுக்கு என்றும் கெடுதலேற்படாது. 'ஏ! அர்ஜுனா! என் பக்தன் என்றும் அழியமாட்டான் என அறி' என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறார்—என்று சமாதானம் கூறிச் சென்றார். இரு நண்பர்களும் திருப்தியுற்றதுடன், அது முதல் பகவானை முழு மனத்துடன் வழிபடலாயினர்.

**கடவுள் வேட்கை:**—ஒரு வாலிபன் ஒரு ரிஷியிடம் சென்று 'எனக்கு பகவத் தரிசனம் கிடைக்க அருள் புரியவேண்டும்' என்றான். ரிஷி அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு சும்மா இருந்தார். வாலிபனோ தினந்தோறும் வந்து அவரைத் தொந்திரவு செய்தான். ரிஷி அவனுக்குப் புத்தி கற்பிக்க எண்ணி அவனை நடுப்பகல் வேளையில் ஒரு நதிக்கு இட்டுச்சென்று, நீரில் மூழ்கும்படி கூறினார். நீரில் அமிழ்ந்தியதும், அவர் வாலிபனை அழுத்திப்பிடித்துக் கொண்டார். அவன் மூச்சுவிட முடியாமல் தத்தளித்து, மேலே வருவதற்குப் போராடினான். சிறிது நேரம் கழித்து ரிஷி அவனை எழும்படி செய்து,

---

**எந்த வீட்டில் தான் பூரண சந்தோஷமிருக்கிறது? கடன் படாத வீடு எது? சாகாத வீட்டுச்சாம்பல் ஒரு பிடி எங்காவது கிடைக்குமா? சச்சரவு, விசாரம், இல்லாத வீடு உண்டா? வீட்டுக்கு வீடு மண்ணடுப்புத் தான்.**

'நீரில் மூழ்கியிருந்த சமயத்தில் உன் மனம் எவ்வாறிருந்தது?' என்று கேட்டார். 'ஐயோ! எனக்குக் காற்றுத்தான் வேண்டியிருந்தது? வேறெதன் மீதும் என் நினைவு செல்லவில்லை.' என்று வாலிபன் பதில் புகன்றான். உடனே ரிஷி, 'நீ மூச்சுக் காற்றுக்குப் போராடின அதே வேட்கையுடன் கடவுளை விரும்புவாயானால் அவரை அடைவாய்' என்று கூறிச் சென்றார். அத்தகைய அபாரவேட்கை தோன்றினாலன்றி கடவுளைக் காண்பது முடியாது. வேத சாஸ்திரங்களை மட்டும் படிப்பதால் பகவத் தரிசனம் கிட்டிவிடாது. நம்மில் எத்தனைபேருக்கு அவ்வித வேட்கை உண்டு? அதில்லாத வரையில், நாஸ்திகருக்கும் நமக்கும் என்ன வேற்றுமை? நாஸ்திகனாவது கடவுள் இல்லை என்று நம்புகிறான். நாமோ அவ்வளவு உறுதிகூட கடவுள் நல்லதுக்கே செய்கிறார் என்பதில் கொள்வதில்லை. கற்றறி மூடர்கள் போலவும், கண்ணைத் திறந்துகொண்டே குழியில் விழுவோரைப் போலவும் நடந்துகொள்கிறோம்.

15. **மனக்குரங்கு**:—மனதை அடக்குவது எவ்வளவு கஷ்டம்? அதைக் குரங்குக்கு ஒப்பிட்டது மிகவும் சரியேயாகும். இயற்கையிலேயே சஞ்சலபுத்தியுடைய ஒரு குரங்குக்கு யாரோ ஒருவன் ஒரு மொந்தைக் கள்ளைக் கொடுத்துவிட்டான். அச்சமயத்தில் அதை ஒரு தேளும் கொட்டியது. குரங்கு தலைகால் தெரியாமல் அங்குமிங்கும் ஓடியது. இது போதாதென்று, ஒரு பேய் அதைப் பிடித்துக்கொண்டது. அந்தக் குரங்கின் நிலைமையை எப்படித்தான் விவரிப்பது? அதைப்போலவே மனதும் இயற்கையிலேயே சலிக்கும் குணமுடையது. அது ஆசையெனும் கள்ளைக்குடித்து ஆடுகிறது. அதன்பிறகு பொறாமை என்னும் தேள் அதைக் கொட்டுகிறது; கடைசியாக கர்வமெனும் பேய் அதைப் பிடித்துக்கொள்கிறது. அந்த மனதை அடக்குவது எவ்வளவு கடினம்?

(தொடரும்.)

மேளங் கொட்டுகிறவன் தலையை யாட்டுவது சும்மாவா? அது ஒரு ஓசையின் கியானமாய் அப்படி ஆடவைக்கிறது. அவ்விதமே ஒருவர் பாட ஆரம்பித்தவுடன் சங்கீத ரவிகர்களின் கை தாளம் போடத் தொடங்கிவிடுகிறது. அவர்களும் தாங்கள் இன்னது செய்கிறோமென்பதையே மறந்து அந்த சங்கீதத்தில் பரவசர்களாய் விடுகிறார்கள். எதற்கும் அநந்த ஞானம் வேண்டும்.

வைத்தியர் காலமாயினும் அவரது மருந்துகளும், அவரது குமாரனும் உள்ளான். ஆனால் மருந்துகளை உபயோகிக்கும் அறிவின் மூலை வைத்தியருடன் போய்விட்டதால், குமாரனது வைத்தியத்தில் நம்பிக்கையில்லை. மருந்துகள் இருந்தும் பயனில்லை. இவ்விதமே ஒன்றிருந்தும் அதற்குப் பிரதான ஜீவதாதுவாகிய மற்றொன்றில்லாததால் பயன் படாதசங்கதிகள் பல பல.

நல்ல மனிதர்கள், நல்ல மனதுள்ளவர்கள் கிடைப்பதில்லை. கிடைப்பினும் பாம ஏழைகளாய் ஸதா துன்பக்கடலில் மெலிவோரா யுள்ளார்,




## ஒரு கிறிஸ்துவ நேயரின் மனக்கோணல்கள்.

அன்புள்ள ஆசிரியரே,

நீங்கள் எம்மதத்தாருக்கும் சகோதரரா யிருப்பது கருதி உங்களிடம் என் சந்தேகங்களைத் தெரிவிக்க முன் வந்துள்ளேன். எங்கள் வேத புத்தகத்தில் ஆதித் தாய் தந்தை ஏவாள், ஆதாமு என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் பெண்களும் ஒரே தாய் வயிற்றிற் பிறந்த சகோதர சகோதரிகளன்றோ? ஆகவே, அவர்கட்கு எப்படி ஸந்ததி உண்டாயிற்று? சகோதரன் சகோதரியை விவாகம் செய்து கொண்டிருப்பானா? இல்லையேல் புத்திர பௌத்திர பிரபௌத்திரர்கள் எப்படி உண்டானார்கள்? சகோதரனுக்கும் சகோதரிக்கும் விவாகம் செய்யலாமென்று கிறிஸ்து மதபோதகர் கூறுகிறாரா? கூறுவராயின் ஐரோப்பா முதலிய கண்டங்க ளொன்றிலேனும் அவ்வேற்பாடு ஏன் அனுஷ்டிக்கப்படவில்லை?

மற்றொரு சந்தேகம் எனக்கு உண்டாகிறது. ஆதித் தாய் தகப்பன்மார்கள் செய்த குற்றத்துக்காக அவர்களின் வர்க்கத்தாராகிய எல்லோரும் தண்டிக்கப் படவேண்டுமா? மரண தண்டனையைத் தவிர வேறு சுலபமான தண்டனையை விதித்திருக்கலாகாதா? இக்காலத்து அரசர்கள் கூட அநேக கைதிகட்கு மரண தண்டனை விதிக்காமல் தீவாந்திர சிக்ஷையை விதிக்கிறார்கள். அவர்களுடைய கருணை கூட கடவுளுக்கு இல்லாமற் போனது ஆச்சரியகரம். நாம் தான் பாபத்தைச் செய்து துஷ்ட புத்திரர்களைப் பெறுகிறோம். ஸர்வ சக்தியுள்ள பகவானுக்குக் கூட துஷ்டப்பிள்ளைகளான ஆதாமு ஏவாள் உண்டாக வேண்டுமா?

நல்லது, மிருகங்களிற் சில சாதுவாயிருக்கின்றன; சில குரூர சுபாவமுள்ளவை. அவைகளைக் கூடவா ஆதித்தாய் தகப்பன்களாகிய ஆதாமு ஏவாளா உண்டாக்கினார்கள்? ஹிந்து சுவாமியின் புத்திரர்களாகிய சுப்ரமண்யர்—விநாயகர் முக்தியையளிக்க வல்லமை யுடையவர்களாம். ஸாதுக்களாலும் மகரிஷிகளாலும் பிரதி தினமும் பூஜிக்கப் படுகிறார்களாம். சொன்ன சொல்லைக்கேட்டுக் கீழ்ப்படியாத பிள்ளைகளைப் பெறும் தௌர்ப்பாக்கியம் நமது பரம பிதாவுக்குத்தானா ஏற்பட வேண்டும்?

எனக்கிருக்கும் மற்றொரு சந்தேகத்தையும் சொல்லி விடுகிறேன். சுவர்க்கம், நரகம் ஆகிய இரண்டையும் சிருஷ்டித் திருக்கிறாரே. அவ்விரண்டிடங்களிலும் இப்போது யார் இருக்கிறார்கள்? இனி யார் வரப் போகிறார்கள்? யேசு நாதர் சிலுவையிலறைப்பட்டு மனிதர்களின் பாபத்தை வாங்கிக்கொண்டாரே; மறுபடி பாபம் செய்தாலும் அவரை மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் விலகிப் போமே. இப்படியேஎல்லோரும் பாவ

---

**பல் முளைக்காத குழந்தைகூட வீட்டில் இன்னார் தன்மீது அன்புள்ளவர்கள், இன்னார் அன்பு இல்லாதவர்கள் என்பதைத் தெரிந்துகொண்டு விடும். அதை அதற்குக் கற்றுக்கொடுக்கவேண்டாம்.**

விமோசனம் செய்து கொண்டால் நரகத்தை மூடி விடலா மன்றோ?

மனிதர்களல்லாத இதர பிராணிகள் விஷயமாயும், கிறிஸ்து மதத்தைத் தழுவாத இதர மதஸ்தர்கள் விஷயமாயும் கடவுள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்? இதர மதஸ்தர்கள் தர்மமே சிறந்த தென்று நல்வழியைப் பற்றி நடப்பாராயின் அவர்களை சுவர்க்கத்தில் சேர்ப்பாரா?—நரகத்தில் தள்ளுவாரா? பசு பக்ஷி முதலிய வற்றிற்கு ஆத்மா உண்டா இல்லையா? இவைகளை யாரேனும் ஒரு குருமார் எனக்கு விளக்கி சமாதனம் சொல்ல வேண்டுமென்று கோருகிறேன். நான் யேசுநாதரையாவது கிறிஸ்து மதத்தையாவது இகழ்ந்தவனல்ல, இழந்தவனுமல்ல. என்னுடைய சந்தேகங்கள் தீர வேண்டி எழுதி யிருக்கிறேன். ஆதலின் என்மீது கோப மடையாமல் தக்க விடை யளிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜான்.

[நமது நேயர் ஏன் இவ்விதம் குருக்குவழி செல்லவேண்டுமோ? குப்பைகளும் செத்தைகளும்தானா இவரது ஆராய்ச்சிக்கு அகப்பட்டன? இவரது திருஷ்டிக்கு அன்பின் வெள்ளம் எதிர்ப்பட வில்லையா? ஒவ்வொரு மதத்திலும் இவ் விதமே எவ்வளவோ ஸந்தேக விபரீதங்களை எழுப்பலாம். மதத்தில் மட்டுமல்ல; சாதாரண மானுஷ்ய குடும்ப வாழ்க்கையிலுங் கூட பல ஐயங்கள்—ஸ்திரீ ஸம்சயங்கள் தோற்றுவித்துக் குடித்தனத்தைத் தடித்தன மாக்கிக் குழப்பிவிடலாம். இது வெகுசுலபம். ஆனால் இதில் மனோசாந்திக்கு மார்க்கம் உளதா? சமாதானமான உள்ளத்திருப்தி கொள்ள இடம் உண்டா? நமது கிறிஸ்தவ நேயர் பக்குவப் படவேண்டுமாயின் இந்தக் குப்பைகளின் ஆராய்ச்சியெல்லாம் வேண்டிய தில்லை. கிறிஸ்துவின் தெய்வீக அன்பு ஒன்றே அவரைக் குணப்படுத்தி விடும். அந்த அன்பைக்காண நமது நேயருக்கு நேரமில்லையா? அல்லது அதற்குப் பிராப்தமில்லையா? கிறிஸ்து நாதரின் திவ்ய சரிதையிலிருந்தும் நமது நேயர் எதைக் காண்கின்றார்? மகத்தாகிய அன்பின்வெள்ளம்அங்கு ததும்பி நிற்கவில்லையா? கிறிஸ்து நாதர் ஒரு இல்லத்திற்கு விருந்தினராய் வந்த போது மார்த்தா என்னும் பெண் சமயலறையில் விசேஷித்த போஜனங்களைச் சித்தப்படுத்த முயன்று கொண்டிருந்தாள். மற்றொரு பெண்ணாகிய மேரியாவோ அந்த சமயலேயே கவனிக்காமல் கிறிஸ்து நாதரைச் சேவிப்பதிலே யேபரவசம்கொண்டு நின்றுவிட்டாள். அவள்மீது கோபமாக எனக்கு சமையலுக்கு உதவி செய்ய வரக்கூடாதா என்று மார்த்தா எனும் பெண் சிடுசிடுத்துக் கூவ, அவளைப் பார்த்து—"நீ பல விஷயங்களைப்பற்றிக் கவலைப்பட்டுப்பறக்கிறாய்; வேண்டியது "ஒன்றே"யாகும். மேரியா "முக்கியமானதை"க் கண்டு கொண்டாள்" என்று யேசுநாதர் கூறியதின் தத்துவத்தை நமது நேயர் கவனிக்கக்கடவர். கிறிஸ்து நாதர் தமது சிஷியர்களின் பாதங்களைக் கழுவுகையில், அவரது பிரதான சீடரான பீட்டர் தமது பாதங்களை அவர் தொடுவது தாகாதெனத் தடுக்க, அதற்குக் கிறிஸ்துநாதர்—"நான் உன்னைக் கழுவாவிட்டால், நீ என்னைச் சேர்ந்தவனாக மாட்டாய்" என்று சூக்ஷ்மமாய்ச்சொல்

---

ஒரு குடும்பத்தைப் பயத்தால் அடக்கி நடத்துவது எளிது. ஆனால் நயத்தாலும் பிரீதியாலும் தனக்கு உட்படச் செய்து பரிபாலிப்பதே லௌகீக தந்திரமாம். அரசியல் விஷயத்திலும் இப்படியே.

லவும், உடனே பீட்டர் விழித்துக் கொண்டு,—"என்னைத் தள்ளிவிட வேண்டாம்; என் கால்களை மட்டுமல்ல; என் கரங்களையும் சிரசையுங் கூடக் கழுவுங்கள்" என்று வேண்டிக் கொண்டான். இங்குகாண்பதென்ன? ஆழ்ந்த தெய்வீக அன்பையன்றோ?

வீட்டில் ஒருவரைப் பகைத்து, இன்னொருவரிடம் உறவாடி ஒன்றைக் கேட்கவரும் அன்னிய மனிதருக்காக உன்வீட்டில் உள்ளவர்களிடம் சண்டையிடுவது அவசியமில்லை. ஒரு சாமானை அந்த அன்னியர் உன்னிடம் கேட்க, வீட்டிலுள்ளோர் அதைத் தரமறுத்தால், நீ அந்த அன்னியருக்காக வாதாடாதே. சரி என்று வீட்டினருடன் ஒத்துப் போய்விடு. வீட்டுவார்த்தைக்கு மதிப்பு கொடு. வீட்டினருக்கு ஒரு கௌரவம் இருக்கும்படி வை.

அந்த அன்பு ஒன்றையே நாடிச் செல்லுக. அதையே தேடி அடைக. கிறிஸ்துவின் அன்பு எங்கெங்கு உளது என்று கண்டு கொண்டு அதிலேயே லயித்து உன்னை மறந்துவிடப் பார். இந்த ஆராய்சிக் குப்பைகளெல்லாம் ஒரு சுமை; அது உனக்கு வேண்டாம். உன் சித்தம் சுத்தமாயிருந்தால் மட்டும் ஆராய்ச்சியில், அதிலும் அன்பையே காணும்வழியில் பக்தி சிரத்தையுடனும் புகுக. அதற்குப் பக்குவமில்லையாகில், பெரியோரையடைந்து ஸம்சய நிவர்த்திசெய்து கொண்டு கடவுளின் அன்பைக் காணச் சென்றிடுக. துவேஷ உள்ளம் வேண்டாம். துர்ப்புத்தி வேண்டாம். உண்மை யன்பும், உறுதி நெஞ்சமும் உடையோர் எம்மதத்திலும் பகவானைக் கண்டு ஆநந்தபரிதர்களாய் நித்தியானந்த மெய்துதல் கூடும். மதம் மாறுதல் புத்திக் குறைவான விஷயமாகும். பக்குவப்படுதற்குங் கூடப் பரமனின் அருள்வேண்டும். அதற்கு அவரை ஸதா திரிகரண சுத்தியுடன் மனஸ்பூர்வமாய்த் தியானித்தலே மார்க்கமாம்

ப—ர்.]

## ஓய்வு—பிறகு உள்ள பளுவைத் தாங்க வைக்கும்.

ஓ! இன்று சனி, நாளை ஞாயிறு. இரண்டு நாட்களுக்கும் பள்ளிக்கூடமில்லை என்று குழந்தைகள் துள்ளிக் குதிக்கின்றனர். அந்த உற்சாகம் இனி அடுத்துவரும் ஐந்து நாட்களிலும் நன்றாக சிரமப்பட்டு வாசிப்பதற்கு வேண்டிய பலத்தை உண்டுபண்ணுகிறது. சற்று நேர ஓய்வானது பிறகு உள்ள எவ்வளவு பாரமான காரியத்தையும் செய்யப் புதிய பலத்தையும் சக்தியையும் கொடுத்து விடுகிறது. ஓய்வு ஒரு போதும் வீணாகாது ஓய்வு ஒரு பெரிய ஔஷதமாகும்.






இன்று கூடிய நமது கடையில்,—“**விழித்துக் கொள்ளாத வரையில் ஒருவனை எவ்வளவுக்கும் ஏமாற்றலாம்**” என்று தாண்டவக்கோன் கூறினார். “விழித்துக் கொள்வது” என்றால் என்ன ?—“ஏமாற்றலாம்” என்றால் என்ன என்று அல்லாபிச்சை கேட்டார், “விழித்துக் கொள்வது” என்றால் தான் ஏன் அவனுக்கு உட்பட்டு, அவன் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு அடங்கிநடக்க வேண்டுமென்று தன்னுள்ளேயே யோசித்துப் பார்க்கும் தெளிவான புத்தியாகும். “ஏமாற்றலாம்” என்பதற்கு, ஒருவனை நமது காரியங்களைச் செய்யும் பொருட்டுப் பக்குவமாய் அடிமைப்படுத்தி நம்மிடம் வைத்துக் கொள்ளுதலாகும்—என்று தாண்டவக்கோன் மொழிந்தார்.

***

உடனே குண்டு செட்டியார் எழுந்தார். “ஒருவன் இன்னொருவருக்கு உட்பட்டு அடங்கி நடப்பது மூன்று வகைப்படும் ; ஒன்று அரசாங்கத்தின் வலிமைக்கு உட்படுதல் ; மற்றொன்று எஜமான்—பணியாளன்—என்ற வகையில் உட்படுதல் ; இன்னொன்று அன்புக்காக உள்ளடங்கி நடந்துகொள்ளுதல், அரசாங்கத்திற்கு உட்பட்டு நடப்பதில் க்ஷேமம் ஏற்படுகிறது. எஜமானனுக்கு உட்பட்டு நடப்பதில் ஜீவனார்த்தம் உண்டாகிப் பசிப்பிணி ஆறி தன் குடும்பம் சந்தோஷப்பட இடனாகிறது. அன்புக்கு உட்படுவதில் உல்லாஸமும் உற்சாகமும் பெருகி அபரிமிதமான ஆநந்தத்தைச் சுரப்பிக்கின்றது. அரசாங்கம் ஸர்வசுதந்தரமும் தந்து ஸமத்வமாய்ப் பரிபாலிக்கும் வரையில் அங்கு அடிமைத்தனம் இல்லை. எஜமானன் விசுவாசபூர்வமாய் நடத்தும் வரையில் ஏமாற்றுதலில்லை. அன்பினால் உள்ளம் பொங்கித்தானே வலிய முற்பட்டு அன்பினோர்க்கு ஊழியம் புரிவதில் எவ்வித தாழ்வுமில்லை ; அவன் ஏமாறி அங்கு உழைக்கவுமில்லை”—என்று குண்டு செட்டியார் குதித்தார்.

***

“எங்கும் இப்படியே நல்லதாக நடந்தால் ஒன்றுமில்லை தான். எல்லாம் சந்தோஷமாகவே முடியும். ஆனால் இடையிற் புகுந்து கோளாறுகளை விளைப்போர் எங்கும் இருக்கிறார்களல்லவா ? அரசாங்கம் நல்லது தான் ; ஆனால் அதிகாரிகள் ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அவர்கள் சுகமாகவே இருப்பதாக அரசாங்கத்திற்குத் தெரிவித்து, இந்த வகையில் ஜனங்களின் உண்மையான கஷ்டத்தை அரசாங்கம் கவனியாதிருக்கப் பண்ணி விடுகிறார்கள். தன் வேலைக்காரனின் சம்பளத்தை எஜமானன் உயர்த்தும்போது பக்கத்திலிருப்பவர்கள் “அந்த முட்டாளுக்கு இவ்வளவு சம்பளம் போதாதா ; அவ

---

விவகாரம் முற்றிச் சண்டையானது யாரால் ? அந்த சமயம் நீ வெளியே சென்றுவிட்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் ? ஆனால் விதி விடுகிறதா ?

னுக்குத் தர எண்ணுகிற அதிகப் பணத்திற்கு ஒரு நாற்காலி வாங்கலாமே'' யென்று சொல்லித் தடுக்கப் போக, எஜமானனின் நல்ல மனதும் மாறி, "சம்பளத்தை அதிகப்படுத்த முடியாது; இதே சம்பளத்துக்கு இருப்பதானால் இரு'' என்று சொல்லத் தொடங்கி விடுகிறான். அன்பினால் கட்டுப்பட்டுத் தன் வீட்டிற்கு வந்தவர்களை அந்த அன்பினர் சொற்படியெல்லாம் நடந்து உபசரிப்பவனை "நீ ஏனடா அவனுக்கு அப்படி உள்ளடங்கி நடக்கிறாய்; பெரிய குடும்பத்திற் பிறந்த கௌரவமான உன்னை எவரோ அன்னியர்களான இவர்கள் இப்படி ஒரு வேலைக்காரன் போல நடத்துவதைக் காணப் பரிதாபமாயிருக்கிறது; உன் அந்தஸ்துக்கு நீ இப்படி அவர்களுக்கு உட்பட்டு நடப்பது கேவலமல்லவா? நமது மரியாதையை நாம் காத்துக் கொள்ள வேண்டாமா?'' என்று போதனை செய்கிறார்கள். இவற்றைக் கேட்டதும் அதுவரையில் அன்புக்கு உட்பட்டு நடந்தவனது மனது மாறிப்போகிறது. "இவர்கள் யார்?—இவர்கள் அன்னியரே;—இவர்களுக்கு ஏன் அப்படி உட்பட்டுக் கூலியாள்போல் அவர்களுடனே சுற்றித்திரிந்து சொன்னபடியெல்லாம் கேட்கவேண்டுமோ?''—என்று ஆலோசிக்கப் புறப்பட்டு விடுகிறான். அதே நிமிஷம் அவனது அன்பு உள்ளமும் மாறிவிடுகிறது. அதன் பயனாக முன்னைப்போல் அவ்வளவுக்கு ஒன்று கூடியிராமல் தூரப்போய் விடுகிறான், மெதுவாக விலகிக்கொள்ளப் பார்க்கிறான். கடைக்கு வருகிறாயா போகலாம் என்று அன்பினர் கேட்டால், முன்பெல்லாம் அவர்கள் சொல்வதற்குள் புறப்படத் தயாராகக் காத்திருந்தவன், இப்பொழுதோ, தனக்கு வீட்டில் வேலையிருக்கிறது, வரமுடியாது என்று சொல்லி விடுகிறான். இவ்விதமே நெடுகக் கன்மனமாய் மாறி அன்பற்ற கட்டையாய் விடுகிறான்''—என்று நொண்டிச் செட்டியார் நவின்றார்.

***

குண்டுப்பிள்ளை இதன் மேல் பேசத்தொடங்கினார். இவ்விதம் அன்பற்ற கட்டையாய் விடுவது விழித்துக் கொள்வதற்கு அடையாளமாகுமா? இந்த விழிப்பிலே புதுகௌரவம் ஏதாவது புறப்பட்டு விடுகிறதா? இப்படி விலகி நடப்பதில் தனக்கு ஒரு பெரிய மனிதத் தன்மை ஏற்படுகிற தென்று நினைத்துக் கொள்வது வீண் மனோராச்சியம் தான். கடைசியில் இது அன்பைக் கொன்றுவிட்ட சண்டாளனாக்கித் தன்மீது அன்பு பாராட்டியவர்களும் தன் புதுவிதமான வேறுபட்ட போக்கைத்தெரிந்து கொண்டு வருந்தி ஏமாற்றத்துடன் விலகிப் போகச்செய்துவிடுகிறது. பிறகு அந்த அன்பினர்கள் இவனைத் தேடி ஏன் வருகிறார்கள்? அப்படி அவன் இருக்கும் ஊர்ப்பக்கம் வந்தாலும், அவனைப் பார்க்காமலே, அப்படிப் பார்ப்பதற்கு மனம் பிடிக்காமலே, வேறோர் இடத்திலிருந்து விட்டுப் போய் விடுகிறார்கள். இதில் இந்த அன்பற்ற கட்டை பெற்றுக் கொள்ளுகிற புது அந்தஸ்து என்னவோ? இந்தக் கட்டை அவர்களை அற்பமாய் நினைக்க, அவர்களும் அதைவிட அற்பமாய் இவனை நினைக்க ஆரம்பித்து விடுகிறார்கள்! இவ்விதமே, அதிகப்படுத்த வந்த சம்பளத்தைத் தராமல் அந்த சிறு தொகையை மிச்சப்படுத்திக் கொண்டதனால் எஜ

---

பரித்தியாகம் என்பது மிகவும் உயர்வாகிய கொள்கை. இந்திய சரித்திரத்தின் பக்கங்களும், காவியங்களின் பக்கங்களும் பரித்தியாகம் செய்தவர்களின் செய்கைகளினால் பரிசுத்தமாக்கப்பட் டிருக்கின்றன.

மானனுக்கு அந்தச் சிறு இனம் ஒரு பெரிய லாபக் கணக்கில் சேர்ந்து விடப் போவதில்லே. வேலையாளின் உண்மையான விசுவாசத்தை அவன் சிறுகச் சிறுக இழப்பதைத் தவிர வேறில்லே. இவ்விதமே குடிகளின் குறைகளைக் கவனியாததினுலே அரசாங்கத்தின் மீது அதிர்ப்தி பெருகுவதன்றி வேறெந்த நற்பெயரும் அரசாங்கத்திற்கு உண்டாய் விடுவதில்லே'' என்ருர்.

***

இதற்குப் பிறகு தாண்டவக்கோன் சொன்னதாவது:—நான் குறிப்பிட்ட தொன்று, நீங்கள் விவரித்த தொன்று; அந்த விடையும் என் கேள்விக்குப் பொருந்தியது தான். இனி நான் எதை நினைத்துக்கொண்டு கூறினேனே அதை விவரிக்கிறேன். ஒருவன் தனக்கு மிகவும் வேண்டிய பந்து ஜனங்களென்று எண்ணி மனஸ்பூர்வமாய் உட்பட்டு சகல பணிவிடைகளும் செய்கிருன். அவர்கள் வரும் பொழுதெல்லாம் பெரிய உபசாரங்கள் நடப்பிக்கிருன். அவர்களும் இவனே ஒரு ஏமாந்த தறிதலே யென்று தங்களுக்குள் எண்ணி விடுகிருர்கள். பிறகு இவன் அந்த பந்து ஜனங்கள் இருக்கும் பக்கம் போகிருன். எல்லோரும் வாயளவில் உபசாரம் பேசி விலகிக் கொள்வதைக் காண்கிருன். கடைவீதி பக்கம் வருகிருன். எவனே ஒருவன் தன்னேத் திரும்பிப் பார்த்ததாகத் தெரிந்து நடந்தபடியே தானும் திரும்பிப் பார்க்கிருன். அதே சமயம் முன்பு திரும்பிப் பார்த்தவனும் இவனே மறுபடியும் திரும்பிப் பார்த்துத் தலையை மற்ருெரு பக்கம் திருப்பிக் கொள்கிருன். இவனுக்கு அவன் இன்னுரென்றும், தான் விசேஷமாய் நினைத்த உறவினனென்றும் தெரிந்து கொள்கிறது. சிரித்துக் கொண்டே இன்ெனுரு கடைக்குச் சென்று ஏதோ ஒன்றை விலைக்கு வாங்கும்போது, நெடுநேரமாய்த் தன் முதுகு பக்கத்தையே காட்டி உட்கார்ந்திருப்பவன் யார் என்று பார்க்கிருன். உடனே இவனுக்கு ஞாபகம் வந்து ஓ! இந்த முதுகு ஒரு முக்கிய பந்துவினுடையது; இனி அவன் முகத்தைப் பார்த்தே தான் அறிய வேண்டுமென்பதில்லே யென்று தனக்குள் சொல்லிக் கொண்டு புறப்பட்டு விடுகிருன். ஏன் முகத்தை அந்தப் பக்கம் தான் காணுதபடி வைத்துக் கொண்டு முதுகைக் காட்டினுன்? என்னேப் பார்த்து விட்டால் ஏதாவது உபசாரச் சொல் பேசும்படியும், தன் வீட்டிற்கு அழைக்கும்படியும், அதனுல் வீண் செலவுகள் நேருமென்றும் யோசித்தா இப்படி முதுகு தரிசனம் தந்தான் என்று நெடுக எண்ணமிடுகிருன். ஆ! இவர்களுக்கு நாம் செய்த செலவுகளென்ன, உபசரிப்புகளென்ன, இவர்கள் இப்படி ஒதுங்கித் தந்திரத் தாளம் கொட்டுவதென்னவென்று சிந்திக்கையில், அவனுக்கு இவர்களேப்பற்றி விழிப்பு உண்டாய் விடுகிறது. விழித்துக்கொள்ளுகிருன்! அதற்குப் பிறகு நடக்கும் சங்கதி என்ன? முன்பு ஒதுங்கினவர்கள் முன்போல் ஏமாற்றலாமென்று இவனிடம் வருகிறபோது, அவர்கள் தன்னே எவ்வளவு பராமுகம் செய்து விட்டு ஜாடையாக இருந்து கொண்டார்களோ, அதேவிதமாக இவனும் அவர்களிடம் நடந்து காட்டி, சிரிப்பு முகத்தோடு வாய் உபசாரம் பேசி

---

ஆடவர்களின் மத்தியிலே ஒரு பெண்மணி இருந்தால் அது இருட்டு வீட்டுக்குள்ளே ஒருவிளக்கை ஏற்றிவைத்ததுபோல் இருக்குமாம்! கேவலப்படுத்தப்படுகிறவர்களும் பெண்களே! உயர்த்தப்படுபவர்களும் அவர்களே! அது ஒரு வேளே, இது ஒரு வேளேயாக்கும்! இல்லாத வேளேயில் அருமை தான்.

நாலைந்து வார்த்தைகளை எண்ணிக் கொட்டி விட்டு ஒதுங்கி விடுகிறான். அவர்களும் இவன் விழித்துக் கொண்டான், இனி இவனை முன் போல் அடிமைப்படுத்தி ஏமாற்ற முடியாது என்று தெரிந்துகொண்டு மெதுவாக நழுவி விடுகிறார்கள். இதையே நண்பர்கள், அறிமுகஸ்தர்கள் விஷயத்திலும் வைத்துக் கொள்ளலாம். இக் கருத்தையே நான் சொல்ல வந்தேன்" என்றார் தாண்டவக்கோன்.

***

இவ்வித "விழிப்பு" வகையிலும் இன்னொரு தினுசு இருக்கிறது என்று திண்டிபோத்துராயர் பேசத் தொடங்கினார். "ஒருவன் தனக்கு அனாவசியமானவர்களென்றும், அவர்களுக்குச் செலவிடுவது வீணென்றும் நினைத்து அவர்கள் வரும்போதெல்லாம் சிடுசிடு என்கிறான். இன்னொருவன் வேறொருவரின் நாற்றமே அடியோடு கூடாதென்று வெறுத்து ஒதுக்குகிறான். இப்படியிருக்கையில் ஒரு காலத்தில் ஒரு சோதனையோ பிணியோ சம்பவிக்கிறது. காலமுழுதும் அவன் உப்பைச் சாப்பிட்டவர்கள் அந்த சமயம் 'ஏனோ தானோ' வென்று ஒதுங்கி ஒரு ஓரத்தில் போய் விடுகிறார்கள். ஒப்புக்கு உபசாரம் அளக்கிறார்கள். இவ்வித அபாய சமயத்தில் இவன் முன்பு சிடு சிடுத்தவர்களும் வெறுத்தவர்களும் இவன் அழைக்காமலே வலிய ஓடி வந்து இரவு பகல் விழித்துத் தங்களாலான பாடுபடுகிறார்கள். சுகப்படும் வரையில் தங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டும் போய் விடுகிறார்கள். அப்போது இவன் மூக்கு மேலே விரலை வைத்து யோசிக்கிறான். யார் வேண்டாமென்று ஒதுக்கினோமோ அவர்கள் தான் இந்த ஆபத்து அவசரத்தில் உதவுகிறார்கள்—என்று கண்டு கொண்டு விழித்துக்கொள்கிறான். உதவுகிற மனுஷ்யர்கள் இன்னார் என்பதையும் கண்டு கொள்கிறான்; இதுவும் ஒரு வகையான விழிப்பாகும் என்றார். இத்துடன் நமது கடையும் முடிவு பெற்றது.

**பொன்வண்டு செட்டியார்.**

அதிகம் பேசாமல் — சிரிக்காமல் காரியத்தில் கவனமாய் ஒரு மதிப்பாய் இருப்பவர் அருமையாய்ப் பேசினாலோ—சிரித்தாலோ—அதற்குத் தனியான ஒரு மதிப்பிருக்கிறது. ஒரு கௌரவமும் ஏற்படுகிறது. அந்தவித சந்தர்ப்பம் அவரைக் காண வருகிறவர்களுக்கு ஏற்படுவது அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. அவ்விதம் அவர் சகஜமாகப் பழகினால் வந்தவரின் காரியம் ஜெயம் தான். அவர் கடுகடுத்தாலோ கோரி வந்த வேலைகள் யாவும் கோணலே.

---

வீட்டுக்கு வந்தவரை 'எத்தனை நாள் இருப்பீர்கள்' என்று கேட்பது அன்பால்தான். அந்த அன்பு உணர்ந்துகொண்டு அவர்களும் பிரியமாய்ப் பதில் சொல்லுகிறார்கள். அன்பற்றவரை இப்படிக் கேட்பதில்லை.


கேட்கும்பொழுது ஒன்றின் கருத்து விளங்காமல் வேறொன்று உளறித் தள்ளி அவமானப்பட்டபின்பு—முடிவில் அது தோற்றுகிறது. என் செய்ய?

# சாஸ்திர நுட்பங்கள்.

(3-வது கமலம் 661-ம் பக்கத் தொடர்ச்சி.)

163. அரக்கு என்பது இந்துவிலும் அயல் தேசங்களிலும் வருஷத்துக்கு ஐந்து லக்ஷம் ராத்தல் அளவுக்கு உண்டாகும். இது ஓர் பூச்சி தன் முட்டைகளை பத்திரப்படுத்துதற்காக சிலவகை மரங்களின் பட்டையைக் குத்துவதால் பொசிந்து கிளைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும். இது வியாபாரத்தில் மூன்று வகையாய் வரும். ஒரு வகையில் தடிகளோடு ஒட்டிக் கொண்டிருக்கும். இன்னொரு வகையில் சுரண்டி எடுத்திருக்கும். மற்றவகையில் உருக்கி சீலையால் வடித்து சுத்தமாய் இருக்கும். முதல் வகையாகிய கொம்பரக்கு தன்னுள் செத்த பூச்சிகளை அடக்கிக் கொண்டிருக்கும்.

164. பசும்பாலிலும் ஸ்திரீபாலில் வெண்ணெய் குறைவாயும் சீனி



அதிகமாயு மிருக்கும். பசும்பாலில் தண்ணீரும் சீனியும் சேர்த்தால் குழந்தைகளுக்குச் சரியான பாலாகும். பாலைக் சூக்குமாட்சியிற் பார்க்கும் பொழுது மேலுள்ள படத்திற் போல அதில் கன சிற்றுண்டைகள் தெரியும். இவை வெண்ணெயின் இம்மிகளாய் பாலை வெண்ணெயாக்கும். பாலை அசையாமல் விட, இவ்வுண்டைகள் ஆடையாகி மிதக்கும். குலுக்க, இவை வெண்ணெயாகக் கூடிவிடும். ஒவ்வொரு உண்டையும் கசியினாலான உறையால் சூழ்ந்திருக்கிற தென்று எண்ணுகிறார்கள்; கலக்கும் பொழுது உண்டைகள் திரளக் கூடியதாய் இந்த உறை தகரும். வெண்ணெய்க்காகப் பாலைக் குலுக்கும்போது அது பிராண வாயுவை உறிஞ்சி மோராகும்.

165. உணவில் கரைந்து உறிஞ்சப்படாத பகுதி குடலுக் கூடே சென்று மலமாகக் கழிக்கப்படும். இந்த சக்கையான பகுதியில் தண்ணீர் மூன்று முதல் நாலரை அன்சும், இந்திர பதார்த்தம் முக்கால் முதல் ஒன்றேயரைக்கால் அன்சும், பரஸ்வசுகள் முதவியன கால் முதல் காலேயரைக் கால் அன்சும் உண்டு. அதாவது நாளுக்கு ஒன்று துவக்கி ஒன்றை அன்சு உலர்ப் பதார்த்தம் கழியும்.

166. இந்த நரகல் எதினால் நாறுகிற தென்பதைப்பற்றி கனசோதனை நடந்தாலும் அது இன்னும் விளங்கவில்லை.

167. ரஸாயன சாஸ்திரம் (Chemistry) என்பது பதார்த்தங்கள் உயிருள்ள பிராணி தாவரங்களில் புகும்வரைக்கும், பின்பு அவைகளை விட்டு வெளியாகும்போதும் அறியக்கூடியது. ஆயினும் அவைகள் உயிருடன் இருக்கும்போது அறிய முடியாது. உயிரின் இரகசியம் எந்த வித்துவானுக்கும் இன்னும் விளங்கவில்லை.

முற்றிற்று.

---

அவனுக்காகவே அவனை மதிப்பது முதல்தரச் சரக்கு; அவனைச் சேர்ந்தவர்களுக்காக அவனை மேலுக்கு மதிப்பது இரண்டாம்தரச் சரக்கு.




(3-வது கமலம் 376-ம் பக்கத் தொடர்ச்சி.)

## Letter XVII

Such is the imperfection of all human happiness; and every period of life is obliged to borrow its enjoyments from the time to come. In youth, we have nothing past to entertain us; and in age, we derive nothing from the retrospect, but fruitless sorrow. The loss of our friends and companions impresses hourly upon us the necessity of our own departure. We find that all our schemes are quickly at an end, and that we must lie down in the grave with the forgotten multitudes of former ages, and yield our places to others, who, like us, shall be drivenawhile by hope or fear about the surface of the earth, and then, like us, be lost in the shades of death.

## 17-ம் கடிதத் தொடர்ச்சி.

மனிதர் செல்வமெல்லாம் இத்தன்மையாகிய குறைவுள்ளதே தான். ஆதலால் எவ்வயதுடையோரும் தங்களுக்குரியசந்தோஷத்தை மறுமையில் தான் (பூரணமாய்) அநுபவிக்க முடியும். பால்யத்தில் நமக்கு சந்தோஷம் அளிக்க அதன் முன்னே நாம் செய்திருந்த தொன்றுமில்லை. முதுமையிலே நமக்கு வீண் ஸஞ்சலமே யொழிய நடந்து போனதை நினைப்பதனால் வரும் பலன் ஒன்றுமில்லை. நமது நேசர்களும் தோழர்களும் இறந்து போய்விட்ட நினைவானது—நாமும் அந்தப்படிப் போகவேண்டிய நினைவை நமக்கு அடிக்கடி உண்டாக்குகின்றது. உயிருடன் இருக்க நாம் பண்ணும் பிரயத்தனங்க ளெல்லாம் அப்போதைக் கப்போது அழிந்து போகின்றன என்றும், நாம் இருக்கும் உலகத்தை மற்றொருவருக்கு விட்டுவிட்டு பூர்வம் இருந்து மறைந்து போய் யிருக்கப்பட்ட எண்ணிறந்த ஜனங்களோடு நாமும் குழியில் அடங்க வேண்டுமென்றும், அவர்களும் சில காலம் நம்மைப் போலிருந்து ஆசையோடாகிலும் அச்சத் தோடாகிலும் இருந்து மறைய வேண்டு மென்றும் தெரிகிறது.

(தொடரும்)

---

இஸ்லாமியரின் தேகபலம் ஆபத்துக்கு உதவுகிறது. அக்கிரமஸ்தனை அடக்குகிறது. தன்னை நம்பியவரை உயிருக்குத் துணிந்தும் காப்பாற்ற வைக்கிறது. தேகபலம் என்பது ஒரு விசேஷ சக்தி—ஒரு வரப்பிரஸாதமாம்.

வீட்டுக்கு வரும் விருந்தினர்களின் ரகசியச் சங்கதிகளிலே முக்கால்பாகம் வீட்டுப்பெண்களுக்குத்தான் முதலில் தெரிந்துவிடுகிறது. பிறகு அப் பெண்களிடமிருந்தே வீட்டுப் புருஷர்கள் கொஞ்சங் கொஞ்சமாய் அறிகிறார்கள்.



# பெரியாரின் மொழிகள்



(3-வது கமலம் 659-ம் பக்கத் தொடர்ச்சி.)

368. Now blessings light on him that first invented sleep! it covers a man all over, thoughts and all, like a cloak; it is meant for the hungry, drink for the thirsty, heat for the cold, and cold for the hot.

Miquel De Cervantes.

தூக்கத்தை முதல் முதல் கண்டு பிடித்தவனுக்கு ஜே! அது போர்வை போல எல்லா மனிதர்களுடைய எண்ணங்களையும், மற்றவைகளையும் மூடுகிறது. பசித்தவனுக்கு உணவுபோலவும், தாக விடாயுள்ளவனுக்குப் பருகும் பானம் போலவும், குளிர்ச்சிக்கு உஷ்ணமும், உஷ்ணத்திற்குக் குளிர்ச்சியும் போலவும் அது இருக்கிறது.

மைகுயல் டி கர்வன்டஸ்

369. (*Shakespeare*) பின் வருவன ஷேக்ஸ்பியரின் வர்க்குகளாகும்.

We are such stuff, As dreams are made on; and our little life is rounded with a sleep.

கனவு உண்டாவது போல நாம் அப்பேர்ப்பட்ட உபயோகமற்றவர்கள். நம்முடைய சிறு வாழ்க்கை தூக்கத்தால் சுற்றிலும் மூடப்பட்டிருக்கிறது.

370. Where the bee sucks, there suck I.

எவ்விடத்தில் தேனீ உறுஞ்சுகிறதோ, அவ்விடத்தில்—அப்பேர்ப்பட்ட சிறந்த இனிய காரியத்தில்—நான் பிரவேசிப்பேன்.

371. The sense of death is most in apprehension, and the poor beetle, that we head upon, in corporal sufferance finds a pang as great as when a giant dies.

சாவு என்ற எண்ணமே அதிக துன்பத்தைத் தருகிறது. நாம் நடந்து கடந்த அந்தப் புழுவின் தேக துன்பம், ஒரு ராக்ஷசன் இறக்கும்போது ஏற்படுவதைவிட கடு வேதனையாகவே இருக்கும்.

372. Silence is the perfectest herald of joy; I were but little happy, if I could say how much.

மௌனம் சந்தோஷத்திற்கு பரிபூரணமான தூதன். நான் எவ்வளவு சந்தோஷம் அனுபவித்தேன் என்று சொல்லும் அளவிலேயே அது குறைந்து விடுகிறது.

373. There was never yet philosopher that could endure the toothache patiently.

பல் நோவைக்கூட சாந்தமாக சகிக்கும் அறிவாளி—தத்துவ ஞானி—இதுவரையில் கிடையாது.

374. A jest's prosperity lies in the ear of him that hears it, never in the tongue of him that makes it.

---

ஒருவனைக் கெட்டவனென்று சொல்லுகிறார்கள். அம்மனிதனிடம் நேரில் பேசும்பொழுதுதான் அவனது நற்குணங்கள் தெரிகின்றன. எதையும் தானே நேரில் அறிந்துகொள்வதுதான் மேல். காகிதத்தில் கோபம் பயனில்லை,

விகடத்தின் வாழ்க்கை அதைக் கேட்பவனிடத்தில் இருக்கிறதே யொழிய சொல்பவனின் நாவில் இல்லை.

375. You take my house when you do take the prop that doth sustain my house ; you take my life when you do lake the means whereby I live.

என்னுடைய வீட்டின் அணையை நீ எடுத்தபோது, நீ என்னுடைய வீட்டையே எடுத்துக்கொண்டாய். நான் எதனால் ஜீவிக்கிறேனோ அதை நீ எடுத்தபோது என்னுடைய உயிரையே நீ கொள்ளை கொண்டாய்.

376. I had rather have a fool to make me merry, than experience to make me sad.

அனுபவம் எனக்கு துக்கத்தை உண்டாக்குவதைவிட, ஒரு விகடனால் எனக்கு சந்தோஷம் உண்டாக நான் விரும்புகிறேன்.

377. The web of our life is of a mingled yarn, good and ill together.

நூலால் பின்னி நெய்யப்பட்ட வஸ்திரத்தைப்போல் நம்முடைய வாழ்க்கையானது நல்லவைகளாலும், கெட்டவைகளாலும் பின்னப்பட்டிருக்கிறது.

378. Some are born great, some achieve greatness, and some have greatness thrust upon them.

சிலர் பிறக்கும்போதே பெருந்தன்மையாகப் பிறக்கிறார்கள்; மற்றும் சிலர் பிறந்த பிறகு பெருந்தன்மையை அடைகிறார்கள்; வேறு சிலரின் மேல் பெருந்தன்மை (வேண்டுமென்றே) சுமத்தப் படுகிறது.

379. A merry heart goes all the day, your sad lives in a mile—a.

உல்லாசமான இருதயத்துக்கு நாள் பூராவும் (சுகமாகப்) போகிறது. உன்னுடைய துக்கம் நிறைந்ததொன்றுக்கோ ஒரு மைலுக்கு அப்பாலேயே தளர்ந்து விடுகிறது.

380. Life is as tedious as a twice-told tale, vexing the dull ear of a drowsy man.

தூங்கி விழுந்து கொண்டிருப்பவனுடைய உணர்ச்சியற்ற காதில் ஒரு கதையை இரண்டுதரம் சொல்லப்பட்டு வெறுப்பை உண்டாக்குவதைப் போல் வாழ்க்கையும் சலிப்பை யுண்டாக்குகிறது.

381. He that stands upon a slippery place makes nice of no vile hold to stay him up.

வழவழப்பான இடத்தில் நிற்குமவன்,தன்னை விழாது தடுக்க அற்பமான வஸ்துவைக்கூடப் பிடித்துக்கொள்வான்.

382. There is some soul of goodness in things evil, would men observingly distil it out.

மனிதர்கள் நன்றாக ஆராய்ந்து பார்ப்பார்களானால், கெட்டதிலும் சிற்சில நல்லவை உண்டு.

(தொடரும்.)

P. G. குலசேகரன்.

---

சிறிய காரியத்துக்கெல்லாமா அவரைக் கேட்டுக்கொண்டிருப்பது என்பது இவன் எண்ணம். அற்ப அதிகாரி அதைத்தான் கவனித்துக் கேட்கிறார்.

---

சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே விஷமிக்கும் வார்த்தைகளைக் கொட்டி எல்லோர் மனதையும் கெடுத்துவிடும் மௌடீகத் தன்மை சிலரிடம் உண்டு.



# ஹாஸ்ய சஞ்சீவினி



**விவாகப் பேச்சு :—**

**யுவகன் :—**என்னைக் கலியாணம் செய்துகொள் என்று உன்னை ஒருவர் கேட்டால் நீ என்ன சொல்லுவாய் ?

**யுவதி :—**அது என் பெற்றோர்களிடம் கேட்கவேண்டிய வார்த்தை என்று கண்டித்துச் சொல்லிவிட்டு, அதுமுதல் அவர் முன்பு எதிர்படாமல் இருப்பேன். அப்படிக் கேட்போர் கற்பை உறிஞ்சவரும் கபடப் பூனைகளே தான்.

***

**அரை டிக்கட்டு :—**

**ஒற்றைக் கண்ணன் :—**நான் பார்ப்பது ஒரே கண்தான். ஆதலின் அரை டிக்கட் கொடுங்கள்.

**நாடக டிக்கட்டுக்காரன் :—**துப்பாக்கி சுடக் குறி பார்க்கையில் இரு கண்ணைவிட ஒரு கண்ணே அதிக வேலை செய்கிறது. ஒரே கண் இரு கண் வேலையையும் செய்யும். ஆதலின் நீ முழு டிக்கட்டுதான் வாங்கவேண்டும்.

***

**கட்சிக்காரனின் பதில் :—**

**வக்கீல் :—**எவ்வளவோ நான் பேசியும் இப்படி வீணாயிற்றே.

**கட்சிக்காரன் :—**என் குற்றத்தை மூடிப் பேசாமல் ஞாயம் வேண்டும், ஞாயம் வேண்டுமென்று கேட்டதால் நியாயத்தையே ஜட்ஜ் கொடுத்து விட்டார்.

***

**அவசரத்திற்கு :—**

**நந்தன் :—**வக்கீலையும் வைத்தியரையும் தேடுகிற அவசரமே வெகு பெரிது. அவசரம் தீர்ந்த பிறகோ அவர்களைப்பற்றி நினைப்பதே யில்லை.

**கந்தன் :—**ஆனதால்தான் அவசரம் தீர்வதற்கு முன்பே அவர்கள் கறந்து கொள்ளவேண்டிய பணத்தைக் கவனமாய்க் கறந்துகொண்டு விடுகிறார்கள் !

***

**பணம் கொடுத்தா ? :—**

**ராமன் :—**இந்த உனது பொட்டகிராப்பை நான் எடுத்துக்கொள்ளட்டுமா ? அது எனக்கு வெகு பிரியமான வஸ்து.

**சேர்மன் :—**இருப்பது ஒன்றேதான். ஒன்றுக்குப் பதிலாய் மூன்று பிரதிகளாக வாங்கிக்கொள்கிறது தானே ? அதற்கு $3\frac{1}{2}$ ரூபாய்தான் பிடிக்கும்.

**ராமன் :—**பணம் கொடுத்தா ? அப்படிப்பட்ட அவசரம் ஏதுமில்லை.

P. G. குலசேகரன்.

---

தூக்கம் என்பது தூரத் தொலைகிற வரைக்கும் கொஞ்சி முத்தமிட வந்துகொண்டேயிருக்கும். உதறி எழுந்தால் அது தானாகவே ஓடிவிடும்.




# லாலா தேவி.

(*All Rights Reserved by the Author.*)

3-வது கமலம் (635-ம் பக்கத் தொடர்ச்சி.)

"என் அன்புள்ள அண்ணாவே! என் பொருட்டுத் தங்களுடைய இன்னுயிரை இழக்க வேண்டாம். கோட்டை கொத்தளங்களை விட வேண்டாம். ஐயோ! என் அரிய தந்தையும், ஆருயிர் அண்ணனும், அருமைப் போர்வீரரும் அனியாயமாய் மாண்டதை அறிகிலீரோ? ஆமத்ஷா காதல் கூர்ந்த என்னைக் கடிமணஞ் செய்ய நிச்சயித்திருப்பதால் அவன் எண்ணப்படியே ஆகட்டும். அவ்வெண்ணம் முடிந்தால் அச்சுகம் எந்நாள் வரை இருக்குமென்பதை அவனே அறியட்டும். அக்கிரமம் என்றும் வீண் போவதில்லை"—என்று மெதுவாய்க் கூறினாள்.

பிறகு அவள் வந்த ஆளை அழைத்து, "அப்பா, ஆமத்ஷாவை நான் மகிழ்ச்சியோடு மாலையிடுவேன். இவரினும் எனக்கு ஏற்ற காதலன் எங்குண்டு? இவர் கல்யாண நாளன்று கட்டிக்கொள்ள இந்த ஆடை அணிகளைத் தருகின்றேன். இவற்றை நானே என் கையாற் கொடுத்தனுப்பியதாகச் சொல்லிக் கொடு" என்ன, அவனும் அவற்றை வாங்கிச் சென்றான்.

இச்சங்கதி அறிய, அங்குள்ள குல மன்னர்களுக்கு அடங்காக் கோபம் மூண்டது.

"என்ன அபூர்வம்! என்ன அநியாயம்! உயர்குடியிற் பிறந்து உத்தம நடையாள் என்று பேர் படைத்த இவ்வொண்டொடியாள் இவ்வித மானக்கேடான காரியம் செய்வது மதியோ? தன்னைப் பெற்ற தாய் தந்தையரையும், தன்னுடன் பிறந்த தமயனையும் மடித்த மாபாவியை மணப்பது நன்றோ? சூரிய குலத்தில் தோன்றியும் அன்னிய மதத்தினை விழைவது முறையோ?" என்றுரைத்து லாலாவை வைதனர்.

## IV

ஆமத்ஷாவுக் குண்டாகிய ஆநந்தத்தை யாரே சொல்ல வல்லார்? லாலாவால் சொல்லரிய துன்பங்க

---

நன்றாகச் செலவிட்டு நாலு பதார்த்தங்கள் சமைத்திருக்கும்போது விருந்தினர் வருவதில்லை. அப்போதுதான் வயிறு உப்பிப்போய் புசிக்கமுடிகிறதில்லை!

ளுண்டாயினும் கடைசியில் தனக்கு அவள் உரியவளானுள். அவள் தந்தை யாண்ட தேச முழுமையும் தன்னுடையதாயிற்று.

உடனே கல்யாணத்திற்கு வேண்டிய முயற்சிகள் நடந்தன. தூதர்கள் ஊர்கள் தோறும் சென்று கல்யாண சங்கதியைத் தெரிவித்தனர். சக்கிரவர்த்திகளும், முடிமன்னரும், சிற்றரசரும், பாளையக்காரரும் அழகிய அணிகள் பூண்டு, யானைகள் மீதும் குதிரைகள் மேலும் பல்லக்குகளிலும் வந்து கூடினர். சிந்துபதி முழுமையும் மணக்கோலமாயிற்று. வீதிகள் தோறும் தோரணங்களும், பந்தர்களுமாயின. எங்கும் வாத்திய முழக்கம்; எங்கும் பாட்டுக் கச்சேரி; ஆமத்ஷா தன் கல்யாணத்தை ஊருக்கு வெளியில் ஏரியின் மத்தியிலுள்ள சிங்கார மாளிகையில் சிறப்பாகச் செய்யத் தீர்மானித்து, லாலா ராஜ குமாரியாதலால் அவள் குல வழக்கப்படி விவாகத்தை நடத்தவும் அந்தணர்களை வரவழைத்து அவர்கள் மனம் போல் தானம் வழங்கவும் இசைந்தான்.

## V

இன்று கல்யாண நாள்! எங்கும் வாசனையும் வாத்திய முழக்கமுமே! பாட்டும் பரமானந்தமுமே! லாலாவும் ஆமத்ஷாவும் கல்யாண மண்டபத்தில் மணவரையில் உயர்ந்த பீடத்தில் உட்கார்ந்திருக்கிருர்கள். மணப் பெண் வெண் பட்டாடையும், செம் பட்டுக் கஞ்சுகமும் தரித்துள்ளாள். நவமணிகள் இழைத்த நகைகள் தேகமெங்கும் மின்னுகின்றன. முகமோ சூரியனைப் போலும் காந்தியுடன் துலங்குகிறது. அவளையடுத்து ஆமத்ஷா இந்து மத வழக்கப்படி தலையில் தங்கமுடியும், கழுத்திலும் மார்பிலும் வைர மாலைகளும், இரத்தினப் பதக்கங்களும் பூண்டு லாலா அனுப்பிய அழகிய பட்டாடையை மேலே அணிந்துள்ளான். எதிரில் அந்தணர்கள் ஓமம் வளர்த்து, மந்திரம் சொல்லுகிருர்கள். விருந்தினர் வரிசை வரிசையாக உட்கார்ந்திருக்கின்றனர். ஓர் பால் ஒரே வயதுள்ள அணங்கியலாரநேகர் ஆட, ஓர் பால் பலவித மேளங்கள் செவிக்கினிமையாக வழங்குகின்றன. மற்ருேர்பால் பாவாணர் பாட்டுப் பாடுகின்றனர். மண மாலைகள் இரண்டு வதுவரர் கழுத்தில் தொங்குகின்றன. ஆமத்ஷா லாலாவின் கையைப் பற்றுகின்ருன். அந்தணர் கொடுத்த துளசியை வாங்குகின்ருன். ஆமத்ஷாவும் லாலாவும் புருஷன் மனைவியாயினர்.

## VI

கல்யாணச் சடங்குகள் யாவும் முடிந்தன. கல்யாணப் பெண் எழுந்து ஆமத்ஷாவின் கையைப்பற்றி மாளிகை மேல் ஏறிச் சென்ருள். மேனிலையினின்றும் பெண்ணும் மாப்பிள்ளையும் நாற்புறமும் பார்க்கலாயினர். ஏரியில் தண்ணீர் சூரியனொளியால் அச்சூரியனைப் போலும் பிரகாசித்தது. தண்ணீரில் நானுவித மச்சங்கள் துள்ள, அநேகவித நீர்ப் பறவைகள் நீந்தி விளையாடின. சிற்றலைகள் ஒன்றையொன்று ஓடிப் பிடிப்பது போலும் மோதின. செந்தாமரை மலர்களோ சிரித்துக் கொண்டிருந்தன. சோலைகளில் குயில்கள் கூவ, மயில்கள் ஆடின. மற்றப் பறவைகள் கீதம் பாடின. எங்கும் குடிகள்

---

உபயோகமான பொது முயற்சியிலும், கல்வி யபிவிருத்தியிலும், நம்முடைய வியாபார வர்த்தகப் பெருக்கிலும், ஜனங்களுடைய க்ஷேம அதிகரிப்பிலும்—பரித்தியாகம் செய்வதின் லாபகாரமும் நன்மையுமான பலன் பிரதிபிம்பிக்கட்டும்.

அழகிய உடைதரித்து ஆநந்தமாயிருந் தனர்.

ஆமத்ஷா தன் அருகில் நிற்கும் அரிய மனைவியையும், எதிரிலுள்ள இனிய காட்சிகளையும் கண்டு உடல் மறந்து உள்ளம் பூரித்தான். தன்னைப் போலும் பாக்கியவான் தரணியில் இல்லையென்று தருக்கினன். சிரித்தான்; குதித்தான்; ஆடினன்; பாடினன். தன் கையை மனையாள் தோளிற் சேர்த்து "என் கண்பாவாய்! என் காதற் களஞ்சியம்! என் கட்டழகீ! என்னைக் காக்கவந்த காமலோசனீ! என்னைப் போலும் பாக்கியசாலி எவரேனும் உண்டோ?" என்று சொல்லி முத்தமிட, லாலா அவன் கையை உதறி, "ஆமாம், உன்னைப் போலும் பாக்கியவான் உலகில் இல்லை; ஆனல் நான் சொல்வதை ஆர அமரக் கேளும்; மனிதனுக்குச் செல்வம் அதிகரிக்குந்தோறும் கடவுளுக்கு அவனிடத்தில் அன்பு குறைந்து அருவருப்புண்டாகிறதென்பதை அறியீர். செல்வமாவது எவனிடமும் நீண்ட நாள் நிற்குமென்பது எங்கும் இல்லை. நமது அழகும், இளமையும், காதலும், வாழ்வும் ஓர் நாளைக்கோ, ஓர் மணிக்கோ, ஓர் நொடிக்கோ நிற்பதாகும். எல்லாம் இறைவன் சித்தம்" என்றுள்.

அவள் முகத்தில் நகையில்லை. துக்கமும் கோபமும் தோன்றின. ஆயினும் காமாந்தகனுகிய ஆமத்ஷா அதைக் கவனித்திலன். கரும்பு வாடியிருப்பதை அதை மெல்லப் போகிறவன் கவனிப்பனு? அவன் "அடி அன்னமே! காமக் கடலில் மூழ்கிக் கரை காணுது தவிக்கும் என்னைத் தடுப்பதும் உனக்குத் தகுமோ? எளியேன் மீது இரக்கம் அற்று இவ்வாறு இயம்புவதும் சரியோ?" என்று சொல்லிக் கையை யிழுத்துக் கன்னத்தில் முத்திட்டான்.

***

சிறிது நேரத்திற்கெல்லாம் கீழே இருந்தவர்கள் ஆமத்ஷா மேலணிந்த அணிகளினின்றும் நெருப்புப் பறக்கக் கண்டார்கள். சூரியன் காந்தியால் அவ்வணிகள் அவ்வாறு துலங்கின என்பது அவர்கள் எண்ணம். சிறிது நேரத்தில் அவன் ஆடையினின்றும் தீக்கிளம்பி அவன் ஆடை முழுமையும் சூழ்ந்தது. ஆமத்ஷாவோ ஆண் சிங்கம் போன்ற ஆண்மையை யுடையவனென்பதை அறிவோம். சண்டையில் தளராத வீரன் என்பதும் தெரியும். மலை சரியினும் மனம் சற்றும் சலியாதவன் என்பதும் உண்மை. ஆனல் இப்போது தன்னைத் தகைக்கும் தணலுக்கஞ்சி பெண்ணைப் போலும் புலம்பலானுன். கட கட வெனத் தரையில் புரளலானுன். மேலணிந்த உடைகளைக் கழற்ற முடியாமல் கைகளாலும் பற்களாலும் கிழிக்கலானுன். அவ்வுடைகள் காற்றின் வேகத்தால் மூண்டெரிந்தன. அவனுக்கு உதவி செய்வார் அங்கு யாருமில்லை. லாலாவோ மாளிகையின் மதில் மீதேறி தன் மணாளனின் அழுகையையும், அவஸ்தையையும் மனங் குளிரப் பார்த்தாள். அவள் முகத்தில் சந்தோஷக் குறிகள் தோன்றின.

அவள், "காமப் பேய் பிடித்த காதகா! உனக்கு சத்துருவான பெண்ணுடன் வாழவா கருதினய்? பகை

---

உள்ளத்தில் உண்மையன்பு இல்லாமல் அது மாறியபின்பு, தன் சௌகரியத்துக்காகவென்று பழய அன்பினர் வீட்டில் தங்குவதிலே, இந்த வருகையை முன்னுட்களில் அன்புடனும் வந்த வருகையைப்போல் அவ்வீட்டினர் நினைப்பதில்லை. அதற்குத் தக்கபடியே வெளி யுபசரிப்பை மட்டும் காட்டுவர்.

யுள்ளம் பரவிய பாவையை மனைவி யென மாறாக நினைத்த மதியீனா! என் நாட்டைப் பிடித்து, என் தாய் தந்தையரை மடித்து, பந்துமித்திரரை யடித்து என்னைப் பரதேசி யாக்கிய பாதகா! மானமே பெரிதாகக் கொண்ட க்ஷத்திரிய மாதாகிய என்னை மணந்து மகிழலாமென் றெண்ணினா யோ? கற்றாணைக் கரையான் அரிக்கா தென்பதை நீ அறிவாயோ? உனக்கு அனுப்பிய உடைகளில் **பயங்கரமான கொடிய விஷத்தைத் தடவி வைத்தேன்** என்பதையும், வெயில் படவே அவை உன் தேகத்துள் ஊறிப் பற்றி யெரிகிற தென்பதையும் நீ கண்டு கொண்டாயோ? இப்போது உன் அரசெங்கே? நாடெங்கே? நகர மெங்கே? அழகெங்கே? அரிவை யரின் கற்பை யபகரிக்கும் ஆசை எங்கே? என்னை முத்திட வந்த வாய் எங்கே? என் தோளிற் சேர்த்த கை எங்கே? உன் கன்னக் கிருதாவும், கருத்த மீசையும், வட்ட முகமும், வனப்புள்ள தேகமும் வெந்து தீய்ந்து வெண் சாம்பலாகி இனி ஒரு கணத்தில் உன் உருவம் அழியுமே! இதுவே நான் கொண்ட எண்ணம். இதற்கே உன்னை மணந்தது! இனியும் உன்னால் கற்பின் மின்னார்க்குத் தீது நேராமலும், நீதி மன்னர் மாய்ந்து படாமலும், அதர்மப் போர்கள் நிகழாமலும் இருக்கவே உன்னை இவ்விதம் முடித்தேன். க்ஷத்திரிய குலப் பெண்ணின் வீரம் கண்டனையா? என் கருத்தும் பூர்த்தியாயது. என் உள்ளமும் குளிர்ந்தது" என்று சொல்லி அரசனை மற்றும் ஒருமுறை மனமாரப் பார்த்து, வாயாரச் சிரித்து நின்றாள்.

ஆமத்ஷாவோ இது பழிக்குப் பழியென அறிந்து கொண்டான். லாலாவைச் சபித்துப் பிடிக்க நினைத்தான். அவனால் எழுந்திருக்கக் கூட வில்லை. லாலாவும் எதிரிலுள்ள எறியிற் குதித்து தன் வனப்பை யெல்லாம் தன்னைப் படைத்த இறைவனிடமே சேர்த்து முடிந்தாள். ஜனங்களும் அதிகாரிகளும் மேன் மாளிகைக்குள் விரைந்து வந்து சூழ்ந்தனர். ஆமத்ஷா பரிதாபமான பயங்கர வேதனையில் மாய்ந்தான். லாலாவின் வாழ்நாள் இவ்வாறு ஆயது ஏனோ? அது "**விதியின் பிழை.**"

முற்றிற்று.

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

---


# பிரஜாநுகூலன்

**எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராசிரியர்.**

இது நாவல்கள் நிறைந்த அநுபவக் களஞ்சியமான சிறந்த மாதப் பத்திரிகை. **1904**-ம் வருஷ முதல் **25**-வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. வெகு ருசிகரமான அநுபவங்களுடன் அதி சிலாக்கியமா யிருக்கும். பக்கங்கள் **32**.—"அமிர்த குணபோதினி" நேயர்கள் அதன் ஆசிரியர் நடத்தும் பழமையான இப்பத்திரிகையையும் ஆதரிப்பது அவசியம். அவர்களுக்கு மட்டும் வருஷசந்தா ரூ. $1\frac{1}{2}$

☞ மானேஜர், "பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம்.




## எதிர் நிலை மொழிகள்.

| | | | |
|---|---|---|---|
| அக-லம் | சுருக்-கம் | செ-ம்மை | கரு-மை |
| அழகு | பழுது,குரூ-ப | செழிப்-பு | வா-டல் |
| ஆசை | நிரா-சை [ம் | சொஸ்-தம் | உ-பாதை |
| ஆழம் | மேடு | ஞா-னம் | பேத-மை |
| உண்-மை | பொய்-மை | தூய்-மை | மாசு |
| உளைப்-பு | அசதி | தெளி-வு | க-லங்-கல் |
| உறு-தி | துவ-ளல் | நற்-குணம் | துர்க்-குணம் |
| ஐசு-வரி-யம் | தரித்-திரம் | நன்-மை | தீமை |
| கருப்-பம் | மல-டு | நிக-ளம் | குறு-கல் |
| கல்வி | மூடம் | நுண்-மை | பரு-மை |
| காங்-கை | குளிர் | நே-சம் | பகை |
| சப்-தம் | அமை-தி | பக-ல் | இர-வு |
| சமா-தானம் | கல-கம் | பலம் | இளை-ப்பு |
| சவுக்-கியம் | வியா-கு-லம் | பாக்-கி-யம் | வறு-மை |
| சிறு-மை | பெரு-மை | பா-ரம் | இ-லேசு |
| எச்-ச-ரிக்-கை | சோம்-பு | பிர-கா-சம் | மந்-தம் |
| சு-கம் | துக்கம் | புது-மை | பழ-மை |
| சுல-பம் | பிர-யாசை | பெரு-மை | சிறு-மை |

**நானிலம் தன்னில் நாயகம் கல்வி.**

(தொடரும்)

# சென்றுபோன நாட்கள்

## ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதி.

(3-வது கமலம் 637-ம் பக்கத் தொடர்ச்சி.)

கவிதையோ, நூலோ, ஒரு நற்கருமமோ எதுவும் திடீரென்று ஆக்கப்பெற்று விடுவதில்லை. அதற்கு ஒவ்வொரு கால சந்தர்ப்பங்கள் தோன்றிக்கொண்டு, தூண்டுதல் செய்து ஏவுகிற பலரோ சிலரோ ஒருவரோ ஏற்பட்டு அவற்றால்தான் அவை நிறைவேற்றுவிக்கப்படுகின்றன. ஆகவே, கவிதையோ நூலோ இயற்றுதற்கு சந்தர்ப்பம்—என்பது தேவைப்படுவதாகின்றது. கருத்து இன்றிக் கவிதைகள் தோன்றமாட்டா. ஒரு கருத்து மனத்தினிடை எழுவதற்கு ஏதேனும் ஒரு நிகழ்ச்சியோ, ஒரு நினைவோ, கனவோ, ஒரு மனோபாவமோ, சிந்தனையோ—எதுவோ ஒன்று உதித்தால்தான் அவற்றின் பொருளைக் கவியிலே அமைத்துக் கவிதைகள் இயற்ற முடியும். விஷயமின்றி எவ்விதம் ஒரு கவி பாடுவது? பாடுவதற்கு ஏதேனும் ஒரு கருத்தின் துணை வேண்டுமே. அந்தக் கருத்துக்கு அதைச் சம்பந்தித்த ஒரு நிகழ்ச்சி யிருந்தாலன்றோ முடியும்? ஒரு நூல் இயற்றுதற்கு ஏதேனும் "சரக்கு" கிடைத்தபின்தான் அதைக் கொண்டு நூல் எழுதிவிடவேண்டுமென்ற நோக்கம் மனத்துள் உதிக்க, உடனே நூலை ஆக்குதற்கான சக்தியும் அடுத்தடுத்துத் தோன்றிக் கொண்டு தூண்ட, அவ்வழியில் நூலும் நெடுக எழுதப்பட்டுப் பூர்த்தி கொள்ளலாம். இவ்வாறின்றி எவ்வித நோக்கமுமே இல்லாமல் திடீரென்று நூல் இயற்றுதல் என்பது எவ்வாறு கூடும்? கவிதைகள் புனைவதற்கும் இவ்விதமே எங்கிருந்தேனும் ஒரு "சரக்கு" கிடைக்கவேண்டும். அந்தச் சரக்கை ஆதாரமாய்க்கொண்டுதான் அது ஆக்கப்படவேண்டும். இதைப்போலவே பாரதியாரின் பாடல்களும் 1906-ம் வருஷ முதற்கொண்டு 1920-ம் வருஷங்கள் வரையிலும் இடையிடையே ஏற்பட்ட ஸம்பவங்களின் பலனாகவும் தூண்டுதல்களின் காரணமாகவும் அவரது மனத்துள் பலவித புதுக் கருத்துகள் தோன்றிக்கொண்டு அவ்வப்போது பாடப்பெற்று, அவற்றுள் பெரும்பான்மையும் "இந்தியா" பத்திரிகையில் வெளியாகி, அவர் காலத்திற்குப் பிறகு இப்போது தனி நூல் வடிவமாக வெளிவரலாயின.

***

எண்ணிக்கையில் அடங்காத பாடல்கள் எவ்வளவோ கேட்டிருக்கலாம். ஆனால், அந்தப் பாடல்கள் எந்தெந்த சந்தர்ப்பத்தில், எந்தெந்த தூண்டுதலில், எந்தெந்த நோக்குடன் சொல்லப்பட்டனவென்ற வரலாற்றினை நாம் தெரிந்துகொள்வதற்கு முடிகின்றதா? இங்ஙனம் பாடப்பெற்ற சந்தர்ப்பங்களைக் கண்டு

---

பத்திராசிரியரின் பெயரை ஜனங்கள் வெகு சீக்கிரம் மறந்துவிடுகிறார்கள்! பழைய பத்திராசிரியர்களின் பெயரை இப்போது நினைப்பவர் எங்கேயோ ஒரு பழம்பைத்தியக்காரர்தான்!

கொள்ளக்கூடிய விவரங்களுள்ள பாடல்கள் சொற்பமாகவே இருக்கும். அவ்வரலாறு தெரிந்து அப்பாடல்களை நாம் சிந்திக்கும்போதுள்ள சுவையினை, வெறுமனே அப்பாடலின் பொருளைமட்டிலும் தெரிந்துகொள்வதிற் பெறமுடியாது. இதன் ஸம்பந்தமாக ஒரு குறிப்புமட்டும் இவ் விஷயத்தின் தெளிவுக்காக இங்கு கொடுக்கின்றோம்.

***

புதுச்சேரியிலே பாரதியார் வாழ்ந்த காலையில், 'தமிழ்நாட்டைப் பற்றி நல்ல கருத்துகள் அமையப் பெற்றதும், அதன் பெருமையை விளக்கக் கூடியதுமான பாடல்கள் புனைந்து அனுப்புவோருக்கு இன்னது வெகுமதி தரப்படும்' என்று ஒரு விளம்பரம் "சுதேசமித்திரன்" பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. அதைப் பாரதியார் பார்த்தனரேனும் அவரது ஸ்வபாவப்படி அதை லக்ஷியம் செய்யாமல் விட்டுவிட்டார். பாரதி ஆண்சிங்கத்தையொத்த வீரமுடையவர். எவரையும் மதிக்கப்பட்டவரல்ல. எல்லோருமே அவருக்கு ஒரு துரும்புபோல. ஒரு சக்ரவர்த்திக்குள்ள கர்வம் அவருக்கு இருந்தது. ஆனால், அன்பினரைக் காணினோ அவர்களின் கைக்குழந்தையாகிவிடுவார். நில்லென்றால் நிற்பார். உட்காரு என்றால் உட்காருவார். அன்பின் வலையில் பாரதி சிக்கிவிடக்கூடுமேயன்றி, அதிகார கோப அச்சுறுத்துதலின் வகையில் அவரை ஒரு விரலத்தனைகூட அசைக்க முடியாது. இது அவரது ஜென்மத்தோடு பிறந்த குணம். இதனை எழுதுங்கால், அவரோடு "சண்டை"யிட்டு மிக்க ஆநந்தமாய்ப் போக்கிய அந்தப் பழய நாட்களின் நினைவு நம் நெஞ்சில் புகுந்துகொண்டு மேலே எழுதுதற்குக் கூடாமல் கண்களில் ஜலம் நிறைந்து தத்தளிப்பு உண்டாவதால் இவ்விஷயத்தை இத்துடன் விட்டு ஒதுங்கிக்கொண்டுவிடுகிறோம்.

***

பாரதியாரின் புதுவை நண்பரான வாத்தியார் சுப்பிரமணிய ஐயரவர்களும் மற்றும் சில நண்பர்களும் அந்த விளம்பரத்தின்படி ஒரு பாடல் செய்யவேண்டுமென்று பாரதியாரை நிர்ப்பந்தப்படுத்தினர். அவர்கள் அதிகாரம் செய்யப் பாத்தியதை பெற்றவர்கள். பாரதியார் இவர்களின் விருப்பத்தைக் கேட்டுப் புன்னகை கொண்டார். வேறு பதில் சொல்லவில்லை. அதன்பின்பு வாத்தியார் ஐயரவர்கள்——"வெகுமதிக்கு நான் உங்களைப் பாடும்படி சொல்லவில்லை; சங்கத்துப் பண்டிதர் அநேகரின் முன்பு உங்கள் கவி ஜோடி கேட்கட்டுமே யென்றுதான் சொல்லுகிறேன்; சங்கத்தார் கவி கேட்பது, தமிழர் தம் நாட்டைப்பற்றிச் செந்தமிழில் பாடிக் களிக்கட்டும் என்ற நோக்கத்துடன் தான்; ஆகையால் இந்த விஷயத்தில் நீங்கள் என் இப்படி லோபித்தனம் காட்ட வேண்டும்" என்று "குத்தி"ப் பேசிக் கேட்டார். "அதற்காக நான் சொல்லவில்லை..............என்று இழுத்தார் பாரதியார். வாத்தியார்—"அதெல்லாம் போகிறது, எங்களுக்குத் தேவை ஸ்வாமி" என்று ஒரே போடு போட்டுவிட்டார்.

***

---

தன் வழக்குதோற்ற வக்கீல்தான் அதிகமாக எல்லோரிடமும் சிரித்து நிற்பார். அந்த சமயத்திலும் தன் பிகுவை விடாது தன் கக்ஷிக்காரனின் கண்ணீருக்கு ஒரு முறைப்பு முறைத்துவிட்டு வெகு சீக்கிரம் வண்டியில் ஏறிப் போய்விடுவார்.

பாரதியார் அதற்கு, "நான் கட்டாயம் பாட்டு எழுதிவிட்டு மூச்சு விடுகிறேன். அது வேண்டுமென்கிற சங்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் அனைவரும் சர்க்காருக்கு நண்பர்கள்; எனது கவியை 'நல்லது' என்று அவர்கள் உரத்துச் சொல்லக்கூடப் பயப்படுகிறவர்கள்; அதனால்தான் தாமதித்தேன்" என்று சொல்லி ஒரு நிமிஷநேரம் பூப்பூவாய் நகைத்தார். உடனே வரைதற்கு எழுதுகோலைக் கொண்டார்.

"செந்தமிழ் நாடென்னும்
 போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது
 காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற
 பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"


என்று பல்லவி எழுதி வாசித்துக் காண்பித்தார். வாத்தியார் மலைத்தார். எடுத்த விஷயங்கள் அத்தனையும் பல்லவியிலேயே சுருக்கமாய் முடிந்து விட்டது. கவிதையிலே காதில் இனிப்புப்படச் சரக்கு கூட்டவேண்டுமென்று நிபந்தனையுண்டு. இந்தக் கவிதையில் காதினிலே தேன் வந்து பாய்வதாகச் சொல்லியாய்விட்டது. அங்கிருந்தவர்களின் செவிக்கும் தேன் போலவே தித்தித்தது. மற்றும் தமிழ்நாட்டாருக்கும் தமிழனுக்கும் அவர் குறித்திருக்கும் வீரவன்மை அளவற்றது. "சக்தி பிறக்குது மூச்சினிலே" என்ற வார்த்தையை உணர்ச்சியுள்ள ஒருவன் சேர்ந்தாற்போல் உச்சரிப்பானாயின் மார்பு கனத்துத் தோள் பூரிக்காமல் இருக்க வழியில்லை. பிறகு மற்ற சரணங்களையும் எழுதி முடித்தார். அதைத் தமிழ்ச் சங்கத்தாரின் விலாஸத்துக்கும் அனுப்பினர். ஆயினும் சங்கத்தாரைப்பற்றிப் பாரதியார் ஆசி கூறியது பொய்யாகி விடவில்லை. இவ் வரலாறுகளை நமது அன்பர் க. சு. பாரதி தாசனின் அலங்காரமான வசன நடையில் கேட்டால் இன்னும் இனிக்கும்.

***

இவ்விதமே ஒவ்வொரு விஷயத்துக்கும் அந்தந்த வேளைக்குத் தக்கவாறு தூண்டுதல்கள் தோன்றிக் கொண்டு அவைகள் நிறைவேறிப் புஷ்பித்துக் காய்த்துக் கனியாகின்றன. மேற்கூறிய தூண்டுதலும் சந்தர்ப்பமும் நேரிடாவிடில் பாரதியார்—"செந்தமிழ் நாடெனும் போதினிலே" என்ற பாடலைப் பாடியிருக்க முடியாது. இதனால் கவிதா சக்தியின் உதயம் எவ்வெப்போது நேரிடுகின்றதென்பதையும், ஒவ்வொரு பாடலுக்கும் அதைப் பாடிய காரணமும் ஒன்று இருக்கக் கூடுமென்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம். இவ்விதம் பல சமயங்களில், பல தினங்களில், பாடிய பாடல்கள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து பின்பு ஒரு பாடற் புத்தகமாக உருக்கொள்ளுகின்றது. ஒரு பாடற்றிரட்டு நூல் தயாராகும் வரலாறு இவ்விதமாகத் தான்.

பாரதியார் தமிழ் நாட்டை விட்டுப் பிரிந்ததினால், 'தமிழ்நாடு' என்ற அளவிலேயே அவருக்குத் தேன்போல் இனிக்கவும், அதையே கவிதையிலும் சேர்த்தார். எதுவும் இயற்கையில் தானாகவே சுயமாக அப்படியப்படியே வந்து விழுந்து காகிதத்தில் நிறைந்தால்தான் அது இயற்கையின் அழகு ததும்பி மணக்கும். தானே வருந்திக் கஷ்டப்பட்டு எழுதுவது அவ்வளவு ருசிக்காது. அதிலே இயற்கையின் நறுமணம் கமழாது. பாரதியாரின் பாடல்கள் சக்தியின் தூண்டுலால் தானாகவே சுயமாக எழுந்ததன்றிப் பிரயத்தனம் செய்து எழுதப்பட்டதன்று.

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு.)




## சுயமரியாதைச் சமரசச் சடங்கு விளக்கம்.

திரிச்சிராப்பள்ளி சவுந்தரப்பாண்டியன் பிள்ளைதெரு ஸ்ரீமான் வி. பி. ராஜகோபால பாரதி அவர்கள் எழுதியது. விலை அணா 3-தான்.

இதனை இயற்றிய ஆசிரியருக்கு 60-பிராயம் இருக்கும். தமது வயோதிக பருவத்தில் நூலாசிரியராகிப் பல நூல்களை வெளியிட்டவாறு உத்ஸாக புருஷராயுள்ளார். ஆசிரியர் மிகவும் பெரியவர். பல கலை பயின்ற மேதாவி. சாந்தமே உருவாக அமைந்தவர். அவர் "சுயமரியாதை" வகையில் இந்நூலை இயற்றினாரேனும், அந்த "மரியாதை"க் கொள்கையை விரும்பாதோருங்கூட இந்நூலைப் பிரியத்துடனும் வாசிக்கலாம். இந்நூலில் உள்ள பிராமண நிந்தையை ஒதுக்கிவிட்டு, இதற்காணும் வேறு பல உத்தம அம்ஸங்களைமட்டும் ஸ்வீகரித்துக் கொள்ளக்கடவோம். விவாக காலத்தில் "ஆரிய" முறைப்படியே சகல சடங்குகளையும் நடத்திவிட்டு, இந்நூலிற் காண்பனவற்றையும் இதிலுள்ள புத்திமதிகளையும் எடுத்துக்கூறின் விவாகத்தின் உத்தம நோக்கம் விவாக தம்பதிகளின் மனத்தில் நன்கு பதிவதுகூடும். இதன்றி சுபம் அசுபங்களுக்கும் உபயோகிக்கக் கூடிய சடங்குகளின் முறையும் இதனில் உள்ளன. விவாக தம்பதிகளுக்கு நல்ல புத்திமதிகளை வெகு உருக்கத்தோடும் ஆசிரியர் கூறுகின்றார். ஆசிரியர்நெடுங்காலம் வாழ்க. எவரையும் நிந்தியாத பொது நூல்களையும் இனி ஆசிரியர் வெளியிட வேண்டுமென்று விரும்புகிறோம்.

## விறலி விடு தூது:—

திருவல்லிக்கேணி லக்ஷ்மீவிலாஸ புத்தகசாலைப் பதிப்பு. விலை அணா 12. இந்நூலில் ஆபாஸ மொழிகள் உள்ளனவென்று முன்னர் தடுக்கப்பட்டது. அக்குற்றம் களைந்து திருத்தி சுத்தமான பதிப்பில் வெளியிடப்பட்டிருக்கின்றது. பூர்வ தமிழரின் மதனாகம நூல்களில் இது ஒன்று.

## தேவாரப் பண் சுர அமைப்பு:—

இது முதற் பாகம். ஸ்ரீமான் இ. அப்பாசாமி ஓதுவா மூர்த்தி அவர்கள் இயற்றியது. சங்கீத ஞானத்தை எத்துணைத் தெளிவாக நூல் முறையில் தெரிவிக்க சாத்தியமோ அத்துணைக்கும் ஆசிரியர் மிகவும் முயன்றிருக்கிறார். இது அநுபவத்துடன் கலந்த நூல். தேவார பாசுரங்களைப் பண்சுர அமைப்பில் பாடுதற்கு நன்றாக விவரப்படும்படி அதிக பிரயத்தனம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. சங்கீத அப்பியாஸிகளுக்கும், கானரஸ கோகிலங்களுக்கும் இந்நூல் பயன்தரும். விலை ரூ. 1-4-0.

இப்புத்தகங்கள் "அமிர்த குணபோதினி" ஆபீஸில் கிடைக்கும்.

---

நாலு நாள் வேலைக்குச் சென்றுவிட்டு, பிறகு ஒன்பது நாள் சோம்பேறியாய் ஊர் சுற்றுகிறவன் உருப்படுவது எது? இவர்களின் புத்தி திரும்புவதும் அபூர்வம்.




1. **பிரியும் தந்திரம் :**—எத்தனையோ சண்டை பூசல்களுக்கெல்லாம் சகித்துப் பொறுத்துக் கொண்டிருந்து சுறண்டுகிற வரையிலும் சுறண்டிப் பணத்தைச் சேர்த்து அடிமடியில் இறுக்கிக் கொண்டு, உப்புப் பெறாத சங்கதியில் பிரமாதமான ஒரு மனஸ்தாபத்தை விளைவித்து தந்திரமாக விலகித் தனிக் குடித்தனம் செய்யத்தலைப்பட்டு விடுகிறார்கள். இப்படிக் குடி கெடுக்கும் உறவினர் எத்தனை பேரோ ?

2. **காசுக்கடை செட்டியார் :**—வயிறு சுருங்கி வாடும் தத்தளிப்பில் வழியொன்றும் காணாமே சங்கரா வென்று மனைவியின் கைக்காப்பின் தங்கத் தகடை யுரித்து உருக்கி விற்றேனும் வயிற்றைக் கழுவலாமென்று போனால், காசுக்கடை செட்டியார் மாற்று குறைவென்று அடாத விலைக்குக் கேட்கிறார். வயிற்றெரிச்சலோடு அதற்கும் சம்மதித்தால் இடையில் ஒரு குண்டுமணி அதிகமிருந்தால் அதை அழுக்கில் போய்விடுமென்று தள்ளிவிடுகிறார். அரைக்கால் குண்டுமணி குறைந்தாலும், 'இம்மி' கணக்குப் போட்டுப் பணத்தைப் பிடித்துக் கொள்ளுகிறார். செட்டியார் சொன்னதே சட்டம். வேண்டாமென்றால் 'இதோ உன் தங்கம். எடுத்துக்கொள்' என்று தூக்கி எறிகிறார். பசியின் கொடுமைக்கு எதையும் சகித்தாக வேண்டும் போலும்.

3. **ஒரு மாமியின் விநோத குணம் :**—ஒரு உத்தமப் பெண்மணி பன்னிரண்டு வருஷகாலம் தன் மாமியின் எந்த வார்த்தைக்கும் கோணாமல் நடந்து வந்தாள். மாமியோ மருமகள் எத்தனை அடங்கிப் பயந்தாலும் திருப்திபடாத சிடு சிடுக்கும் சாமி! ஒரு நாள் மருமகள் "அத்தை ! உங்களுக்கு நான் இத்தனை காலமாகப் பணிவாக நடந்தும் என்மீது அன்பில்லாமல் கடு கடுக்கிறிர்களே; நான் என்ன குற்றம் செய்கிறேன்" என்றுகேட்டுவிட்டாள். உடனே வந்து விட்டது மாமிக்குக் கோபம். "என்னைப் பார்த்து ஜாண் சிறுக்கி இப்படிக் கேட்கலாச்சா ?" என்று முறுக்கிக்கொண்டு மூன்றாவது வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டாள். இப்படிப்பட்டவர்கட்கே உத்தம மருகியர் வாய்க்கின்றனர்.

4. **ஒரே சமயத்தில் :**—ஒருவன் வியாதியால் அவஸ்தைப்படுகிறான். ஒருவன் ஆரோக்கிய தேகமாய் ஆநந்தத்தோடிருக்கிறான். ஒருவன் பாம்புக் கடியினால் அவஸ்தைப்படுகிறான்—ஒருவன் இன்பமாய் நாடகம் பார்த்துக் களித்துக் கொண்டிருக்கிறான். ஒருவன் இரண்டு நாள் பட்டினியினால் வாடுகிறான்—ஒருவன் வயிறு முட்ட முட்ட சுகிர்த போஜனமுண்டு பலவித ருசிகளைச் சுவைத்துக் கொண்டிருக்கிறான். ஒரு வீட்டின் தலைவன் இறந்துபோக அவ்வீட்டில் துக்கம். மற்றோர் வீட்டில் கல்

---

அருமையாய் வளர்த்த பெண்ணை எங்கேயாவது அவசரப்பட்டுக் கொடுக்கும்படியான ஒரு நெருக்க வேளையும் சிலருக்கு நேர்ந்துகொண்டு பாவம் தவித்துப் போகிறார்கள்.

யாணம். ஒருவனுக்குக் கடன் வாரண்டில் திகைப்பு—ஒருவனுக்குப் பணத்திற்கு மேல் பணம் சேருவதைக் கண்டு பரவசம். இவ்விதமே நெடுக.

5. அன்பின் சண்டை :—மாமிக்கும் மருமகளுக்கும் பூசலேற்பட்டு, மாமி கோபித்துக்கொண்டு சாப்பிடாமலிருந்தால் மருமகளும் சாப்பிடாமலிருந்து மாமியைச் சாப்பிட வைத்த பின்பு தான் சாப்பிட சம்மதிக்கிறாள். மருமகள் சாப்பிடாமலிருந்தாலோ, மாமி எப்படியேனும் அவளைச் சமாதானம் செய்து அவள் கையால் தானும் சாப்பிட்டு அவளையும் சாப்பிட வைத்து விடுகிறாள். இது அன்பு கலந்த மாமி மருமகளுக்குள் ஏற்படும் பாசக்கலப்புடன் கூடிய அன்புச் சண்டை!

6. மறைந்து நிற்கும் அன்பு :—பல வருஷ காலமாக விரோதப்பட்டு விலகி நின்றோர், ஒருவருக்கு வியாதி கண்டு 'ஆச்சு போச்சு' என்று ஆய்விடும்போது கூடிக் கொள்ளுகிறார்கள். மனஸ்தாபங் கொண்டோர் வேறு ஊரிலிருந்தால் இவர்களுக்கும் தந்தி கொடுக்கிறார்கள், தந்தியைக் கண்டதும் அவர்களும் பதறி ஓடி வருகிறார்கள். அன்பினரிடம் மனஸ்தாபம் மேற்பூச்சு தான். உள் மனதில் அன்பு இருக்கவே செய்கிறது. அதிக அன்பு கொண்டிருப்போர்களிடையில் தான் மனஸ்தாபமுண்டாவதும் அநுபவ தரிசனம்.

7. உலகில் மனத்தாலாவது தேகத்தாலாவது பிழை தவறாதவர்களில்லை. ஒருமுறை தவறினாலும் மறுமுறை அதைத் திருத்திக் கொள்ளுகிறவர்களே புத்தியுள்ள மனிதர்.

8. நொந்துபோன ஒரு சிநேகனைப் பார்த்து "ஐயோ பாவம்! உனக்கு இப்படியெல்லாம் நேர்ந்துவிட்டதா மிகப் பரிதாபம்!" என்று இவ்வளவு வாய்ப் பேச்சு மாத்திரம் பேசுவார்களேயன்றி, தங்களால் செய்யக்கூடிய அவ்வளவுக்காவது ஒரு உபகாரத்தைச் செய்யமாட்டார்கள்.

9. பலம் என்பது மனிதர்களுக்குள் எப்போதும் வியாபித்திருக்கிறதல்ல. அது வேண்டும்போது தான் அந்த சமயத்திற்கு உண்டாகிறது.

10. அழகாயுள்ள மனிதர்கள் ஸ்திரீகள் இவர்களின் முகம் எப்படிப்பட்ட தன்மை யுடையவர்களையும் பட்சமாய்ப் பேச வைக்கிறது. அந்த அழகுள்ளவர்களை உத்தம குணமுள்ளவர்களாகவும் எண்ணும்படி செய்வித்து விடுகிறது.

T. S. குழந்தைவேல் முதலியார்.

## புது வருட வாழ்த்து.

அருள்பரவு மன்பார மிர்தகுண போதினியாத்
தெருள்வா சகவாணித் தெய்வ—மிருள்பரவு
மண்ணுலகின் மாயை மயக்கறுத்துப் பேரின்ப
நண்ணுவிக்கும் போதினியை நாடு.

ந. போ. சுந்தரேசன்.